# தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 – 2025

மானியக் கோரிக்கை எண்.27

**முனைவர் டி.ஆர்.பி. ராஜா**
தொழில்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

## தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2024–2025

## பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1–21 |
| 1. | வழிகாட்டி நிறுவனம் (Guidance) | 22–46 |
| 2. | தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் | 47–87 |
| 3. | தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் | 88–144 |
| 4. | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் | 145–162 |
| 5. | தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் | 163–173 |
| 6. | தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் | 174–183 |
| 7. | தமிழ்நாடு உப்பு நிறுவனம் | 184–194 |
| | முடிவுரை | 195–197 |

# தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2024–2025

## முன்னுரை

நமது மாநிலத்தின் மக்கள் நலன் சார்ந்த ஆட்சிமுறை, முற்போக்கான கலாச்சாரம் மற்றும் நேர்மறை மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் தன்மை ஆகியவைகளின் நற்பலனாக இங்கு அமையப்பெற்றிருக்கும் சாதகமான தொழில் சூழல், பொருளாதார வளம் மற்றும் மக்கள் மேம்பாட்டினால் தமிழ்நாடு, பிற இந்திய மாநிலங்களுக்கும், பொருளாதாரத்தில் வளர்ந்துவரும் நாடுகளுக்கும் முன்மாதிரியாக திகழ்கிறது. சீரான மற்றும் பரவலான வளர்ச்சி என்ற அணுகுமுறையை பல ஆண்டுகளாக மேற்கொண்டுவருவதன் காரணமாக, உயர் கல்வியில் மொத்த சேர்க்கையில் அதிகபட்ச விகிதத்தை அடைந்தும், பன்முகத்திறன் கொண்ட சிறப்பான மனிதவளத்தை உருவாக்கியும் நாட்டின் மிகப்பெரிய உற்பத்தித்தளமாகவும், அறிவுசார்பொருளாதாரமாகவும் தமிழ்நாடு தன்னை உருவாக்கிக் கொண்டுள்ளது.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்தையும் விட தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் அதிகமாக உள்ளது. 39 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளுடன் வலுவான உற்பத்திச் சூழலை தமிழ்நாடு கொண்டிருப்பதும் பெருமைக்குரிய சாதனையாகும். 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் என்ற இலட்சிய இலக்கை அடைவதற்கான வளர்ச்சிப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டிற்கு, இத்தகைய சாதனைகள் முக்கியமான மைல்கற்கள் ஆகும். 2023-24ஆம் ஆண்டில், மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) ரூ.27 இலட்சம் கோடியை எட்டியுள்ளது. இது கடந்த ஆண்டை விட 14.19 சதவிகித வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இது 9.19 சதவிகித பங்களிப்பாகும். இதன் மூலம் இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலம் என்ற நிலையையும் தமிழ்நாடு தக்க வைத்துக் கொண்டுள்ளது.

ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடைவதற்கு தமிழ்நாட்டின் தொழில் மற்றும் வணிகத் துறைகளுக்கு பெரும் பங்கு உள்ளது. இவ்விலக்கை அடைந்திட வேண்டுமானால் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் பெருமளவு முதலீடுகளை ஈர்த்திட வேண்டும். அது மட்டுமின்றி, அதிக அளவில் வேலைவாய்ப்பினை வழங்கக்கூடிய துறைகளான ஜவுளி, தோல், காலணி மற்றும் மின்னணுவியல் போன்ற துறைகளிலும், ஆராய்ச்சி & மேம்பாடு, உலகளாவிய திறன் மையங்கள் மற்றும் மேம்பட்ட மின்னணு & குறை கடத்திகள் துறை போன்ற தொழில்நுட்பம் மற்றும் மூலதன தீவிர துறைகளிலும் சமச்சீரான முதலீடுகளை ஈர்ப்பது மிகவும் இன்றியமையாதது. இதன் மூலம் மாநிலத்தில் ஏற்கனவே சிறந்து விளங்கும் அறிவு சார் பொருளாதாரம் வளர்ச்சியடைவது மட்டுமல்லாமல், உலகளாவிய மதிப்பு சங்கிலியில் தமிழ்நாட்டின் பங்கும் வெகுவாக அதிகரித்திடும். இவ்வாறான அதிக வேலைவாய்ப்புள்ள துறைகள் மற்றும் அறிவுசார் திட்டங்களில் முதலீடுகளை வெகுவாக ஈர்ப்பதன் மூலம் மாநிலத்தின் உற்பத்திக்கான வாய்ப்புகளை

மேம்படுத்துவதற்காக மிகச்சிறந்த ஆதரவு சேவைகளை தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை திறம்பட சிறப்பாக செய்து வருகிறது. மேலும், மாநிலத்தின் அதிவேக தொழில் வளர்ச்சிக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை தனது நிறுவனங்கள் மூலமாக உருவாக்கித் தந்து அதன் மூலம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சி பெருமளவு மேம்படுத்தப்படுவதையும் இத்துறை உறுதி செய்து வருகின்றது.

**1. கண்ணோட்டம்**

தொழில் துறையைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டின் செயல்பாடு தொடர்ச்சியாக சிறந்து விளங்கி வருகின்றது. 2023–24ஆம் ஆண்டில், இந்தியாவின் மொத்த மதிப்பு கூட்டலில் 11.46 சதவிகிதம் மற்றும் இந்தியாவின் உற்பத்தி மதிப்பு கூட்டலில் 13.12 சதவிகிதம் என்ற வகையில், தமிழ்நாடு, தனது பங்களிப்பினை வழங்கியுள்ளது. மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இது 18.33 சதவிகித பங்களிப்பாகும். இதன் மூலம் ரூ.4.9 இலட்சம் கோடி அளவில் மொத்த மதிப்பு கூட்டல் உருவாக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை 1: மாநிலங்களின் முக்கிய பண்புகள்

| மாநிலம் | செயல் பாட்டிலுள்ள தொழிற் சாலைகள் | நிலையான மூலதனம் | முதலீடு செய்யப்பட்ட மூலதனம் | ஈடுபடுத்தப் பட்ட மொத்த நபர்கள் | மொத்த உள்ளீடு | மொத்த வெளியீடு |
|---|---|---|---|---|---|---|
| | (எண்ணிக்கை) | (ரூபாய் இலட்சம் கோடியில்) | | (எண்ணிக்கை இலட்சத்தில்) | (ரூபாய் இலட்சம் கோடியில்) | |
| தமிழ் நாட்டின் தரவரிசை | 1 | 4 | 3 | 1 | 3 | 3 |
| தமிழ்நாடு | 31606 | 3.08 | 4.97 | 26.25 | 9.66 | 11.60 |
| மகாராஷ்டிரா | 20372 | 4.52 | 7.26 | 21.38 | 13.46 | 16.67 |
| குஜராத் | 23335 | 6.87 | 9.97 | 21.63 | 18.48 | 21.48 |
| கர்நாடகா | 11276 | 2.49 | 3.71 | 10.80 | 6.00 | 7.55 |
| உத்தரப் பிரதேசம் | 14105 | 1.83 | 3.07 | 13.06 | 6.68 | 7.89 |
| ஹரியானா | 8344 | 1.48 | 2.48 | 11.06 | 6.32 | 7.41 |
| ஒடிசா | 2692 | 3.12 | 3.84 | 3.21 | 3.69 | 4.69 |
| ராஜஸ்தான் | 9088 | 1.38 | 2.10 | 6.53 | 4.01 | 4.84 |
| ஆந்திரப் பிரதேசம் | 12507 | 2.21 | 3.11 | 6.73 | 4.49 | 5.29 |

Source : Annual Survey of Industries 2021–2022

மொத்த நிலையான மூலதன உருவாக்கம் (Gross Fixed Capital Formation – GFCF) என்பது புதிய இயந்திரங்கள் மற்றும் உற்பத்திக்கான சொத்துகளில் முதலீடுகளை மேற்கொள்ளும் ஒரு அளவீடு ஆகும். 2021–22ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் மொத்த நிலையான மூலதன உருவாக்கம் (GFCF) ரூ.37.85 ஆயிரம் கோடி ஆகும். இது இந்தியாவின் மொத்த நிலையான மூலதன உருவாக்கத்தில் 11 சதவிகித பங்களிப்பு ஆகும்.

மோட்டார் வாகனம் & மோட்டார் வாகன உதிரி பாகங்கள், இயந்திரங்கள், ஜவுளி, தோல், மின்னணுவியல் மற்றும் கண்ணாடி தயாரிப்புகள் போன்ற முக்கிய துறைகளில், முன்னணி தொழிற்சாலைகள் ஈர்க்கப்பட்டு, இயங்கி வருவதன் காரணமாக, இந்தியாவிலேயே பன்முகத் தன்மை வாய்ந்த தொழில் துறை அடித்தளம் கொண்டுள்ள மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

முற்போக்கான கொள்கைகள் காரணமாக மாநிலத்தின் சமச்சீரான மற்றும் பரவலான வளர்ச்சி வெகுவாக ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றது. துறை சார்ந்த கொள்கைகள் வடிவமைப்பு மற்றும் மண்டல ரீதியான ஊக்கத்தொகைகள் அளிக்கப்படுவதன் காரணமாக தென் மாநிலங்களில் பல முக்கிய நிறுவனங்கள் தமது முதலீடுகளை மேற்கொண்டுள்ளன. வியட்நாம் நாட்டைச் சேர்ந்த மின் வாகன உற்பத்தியாளர் வின்ஃபாஸ்ட் (Vinfast) மற்றும் பல உலகளாவிய பசுமை ஹைட்ரஜன் நிறுவனங்கள் தங்கள் திட்டங்களை நிறுவுவதற்காக தென் தமிழ்நாட்டை தேர்வு செய்துள்ளன.

இதேபோன்று, திறன்மிக்க தொழிலாளர்கள் கிடைப்பதாலும், சிறப்பாக விளங்கும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் சூழல் அமைப்பு காரணமாகவும் பல உலகளாவிய காலணி உற்பத்தியாளர்கள் மத்திய தமிழ்நாட்டில் தங்களது உற்பத்தி திட்டங்களை அமைத்துள்ளனர். மேற்குப் பிராந்தியங்கள் மின்வாகன உற்பத்தியில் சிறந்து விளங்குவதோடு மட்டுமின்றி, இந்தியாவின் மொத்த மின் வாகன உற்பத்தியில் 40 சதவிகித பங்களிப்பை தமிழ்நாடு அளித்து வருகின்றது. மேலும் இப்பகுதி, உலகளாவிய மின்வாகன உற்பத்தி திட்டங்களை தொடர்ச்சியாக ஈர்த்து வருகின்றது. சமீப காலங்களில் சென்னை மட்டுமின்றி மாநிலத்தின் இரண்டாம் நிலை நகரங்களும், உலகளாவிய திறன் மையங்கள் (GCCs), பொறியியல் ஆராய்ச்சி & மேம்பாடு திட்டங்கள் மற்றும் வணிக செயலாக்க நிறுவனங்கள் ஆகியவற்றை ஈர்ப்பதன் மூலம், உயர்தர வேலைவாய்ப்புகளை தொழில்நுட்ப ரீதியாக திறன் வாய்ந்த இளைஞர்களுக்கு வழங்கி வருகின்றது.

**அட்டவணை 2: தமிழ்நாட்டிற்கான சிறந்த துறைகள்**

| துறை | தமிழ்நாட்டின் தரவரிசை | மொத்த வெளியீடு (ரூ. இலட்சம் கோடி) | மொத்த வெளியீடு (இந்திய அளவில்) |
|---|---|---|---|
| மோட்டார் வாகனங்கள், டிரெய்லர்கள் | 1 | 2.02 | 23.34 |
| அணியப்படும் ஆடைகள் | 1 | 0.63 | 33.66 |
| தோல் மற்றும் தோல் தயாரிப்புகள் | 1 | 0.18 | 27.54 |
| ஜவுளி | 2 | 1.24 | 23.01 |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 2 | 0.87 | 17.23 |
| கணினி, மின்னணு & கண்ணாடி தயாரிப்புகள் | 2 | 0.58 | 17.32 |
| அச்சிடுதல் & மறு தயாரிப்பு | 2 | 0.04 | 14.34 |
| இரப்பர் & நெகிழி | 3 | 0.45 | 9.58 |
| உணவு தயாரிப்புகள் | 5 | 1.23 | 8.01 |

**Source : Annual Survey of Industries 2021–2022**

2023–24ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில், 10.15 சதவிகித பங்களிப்பை அளித்துள்ளதன் மூலம், தமிழ்நாடு ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் மாநிலமாக உருவெடுத்துள்ளது. இந்நிலையை அங்கீகரித்திடும் விதமாக, இந்திய அரசால் வெளியிடப்பட்ட ஏற்றுமதி தயார் நிலை குறியீட்டில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்தது. மின்னணுவியல் துறையிலும் வியக்கத்தக்க வளர்ச்சியை கண்டுள்ள மாநிலமாக

தமிழ்நாடு விளங்குகிறது. மாநிலத்தின் தற்போதைய மின்னணுவியல் ஏற்றுமதி 9.5 பில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது. இது இந்தியாவின் ஒட்டுமொத்த மின்னணுவியல் ஏற்றுமதியில் 33 சதவிகித பங்களிப்பாகும். தொழிற்சாலைகளுக்கு ஏற்றவாறு வடிமைக்கப்பட்ட மின்னணுவியல் கொள்கை, வணிகம் புரிதலை எளிதாக்குதல், திறன்மிகு பணியாளர்கள் மற்றும் மிகச் சிறந்த துறைமுக கட்டமைப்பு ஆகியவையே இந்நிலையை மாநிலம் அடைவதற்கான முக்கிய காரணங்களாக உள்ளன. அதுபோன்றே, மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரி பாகங்கள், பொறியியல் பொருட்கள், ஜவுளி, தோல் மற்றும் இதர முக்கிய பொருட்களின் ஏற்றுமதியிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது. 2023–24ஆம் ஆண்டில் 44 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு அபாரமான ஏற்றுமதி அளவை தமிழ்நாடு எட்டியுள்ளது.

அனைத்து தரப்பிலான மக்களை மேம்படுத்தி, அவர்களுடைய திறமையின் முழு பலன் பெறச் செய்வது, குறிப்பாக பெண்களுக்கான உரிமைகளை

உறுதி செய்து, அவர்களுக்கு வேலைவாய்ப்புகளில் சம வாய்ப்பு அளிப்பது தமிழ்நாட்டின் முக்கிய குறிக்கோள்களாக உள்ளன. இந்தியாவின் தொழில்துறையில் மொத்த பெண் தொழிலாளர்களில் 42 சதவிகித பங்களிப்புடன் அகில இந்திய அளவில் தொழில்துறையில் பெண் தொழிலாளர் பங்களிப்பில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. முற்போக்கான கொள்கைகள் மற்றும் இலட்சிய இலக்குகள், மிகச் சிறந்த உள்கட்டமைப்பு மற்றும் தொழில் சூழல் அமைப்பு ஆகிய காரணிகளால், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் மேம்படுத்திட உரிய நடவடிக்கைகளை அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது.

## 2. முதலீடுகள்

தமிழ்நாடு அரசு முக்கிய துறைகளில் கவனம் செலுத்தி, அத்துறைகளுக்கு ஏற்றவாறு கொள்கைகள் வடிவமைக்கப்பட்டதன் காரணமாக, பல்வேறு துறைகள் மற்றும் மதிப்புச் சங்கிலிகளில் உள்ள உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிறுவனங்களிடமிருந்து அதிகளவில் முதலீடுகளை ஈர்க்க முடிந்தது. இதனால் மே 2021 முதல் இதுவரை

18.7 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில், ரூ.9.74 இலட்சம் கோடி தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இம்முதலீடுகளினால் மாநிலம் முழுவதும் புதிய வளர்ச்சி மையங்கள் உருவாகியுள்ளன.

தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் உலகளாவிய முன்னணி நிறுவனங்கள் புதிய மேம்பட்ட உற்பத்தி நிறுவனங்களையும் மற்றும் விரிவாக்கத் திட்டங்களையும் நிறுவி வருகின்றன. இவற்றுள் டிடாகர் (Titagarh), டாடா பவர் (Tata Power), கோத்ரெஜ் (Godrej), கார்னிங் (Corning), செயிண்ட் கோபைன் (Saint Gobain) மற்றும் ஃபர்ஸ்ட் சோலார் (First Solar) போன்ற நிறுவனங்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும். சேவைத் துறையில் முதலீடுகளை ஈர்ப்பதிலும் தமிழ்நாடு பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. குறிப்பாக, தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி & மேம்பாடு போன்ற அறிவுசார் பொருளாதாரத் துறைகளில், உலகளாவிய நிறுவனங்களின் முதலீடுகளை தமிழ்நாடு ஈர்த்துள்ளது. முக்கிய நிறுவனங்களான

கோஹெரெண்ட் (Coherent), ஹிட்டாச்சி (Hitachi), போயிங் (Boeing), ஆஸ்ட்ராஜெனிகா (AstraZeneca), ரோச் (Roche), மெர்ஸ்க் (Maersk), ஹபாக் லாயிட் (Hapag Lloyd), யூபிஎஸ் (UPS), பாங்க் ஆஃப் அமெரிக்கா (Bank of America), ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் (Standard Chartered), வெல்ஸ் ஃபர்கோ (Wells Fargo) போன்றவை தமிழ்நாட்டில் தங்கள் திட்டங்களை அமைத்துள்ளது, இங்கு அதிகளவில் திறன்மிகு பணியாளர்களின் இருப்பை அடிக்கோடிட்டு காட்டுகிறது.

ஜனவரி மாதம் 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் நடைபெற்ற, தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு (GIM) 2024, மாநிலத்தின் சிறந்த முதலீட்டுச் சூழலையும் மற்றும் நாட்டிலேயே முதலீட்டிற்கான மிக சிறந்த தேர்வு இம்மாநிலம் என்பதையும் விரிவாக எடுத்துக்காட்டியது. இம்மாநாட்டில், ரூ.6,64,180 கோடி தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், 14,54,712 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு உள்பட, மொத்தத்தில், 26,90,657 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டது. தமிழ்நாடு பன்முகத் தன்மை வாய்ந்த முதலீட்டுத் தளம் என்பதையும், பெருமளவில்

அறிவுசார் பொருளாதார வளர்ச்சி அடைந்து வரும் மாநிலம் என்பதையும் நிரூபித்திடும் வகையில், பல்வேறு துறைகளில், அதாவது, குறைக்கடத்திகள் (Semiconductors), உலகளாவிய திறன் மையங்கள் (GCCs), மின் வாகனங்கள், காலணிகள் மற்றும் ஜவுளி ஆகிய துறைகளில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.

**3. உள்கட்டமைப்பு மற்றும் பயன்பாட்டு வசதிகள்**

தொழிற்சாலைகள் உருவாக்கத்திற்கு எளிதில் அணுகக்கூடிய உகந்த வசதிகளுடன் கூடிய நில இருப்பு ஒரு முக்கிய காரணியாகும். தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் 45,000 ஏக்கர் அளவிலான நில வங்கியை உருவாக்க சிப்காட் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. பெரிய அளவிலான தொழிற்சாலைகள், குறு, சிறு & நடுத்தர தொழிற்சாலைகள் மற்றும் அதனை சார்ந்த சேவைகளின் வளர்ச்சிக்கு வகை செய்யும் விதமாக சிறப்பு உள்கட்டமைப்பு, பொது வசதிகள் மற்றும் பொதுசோதனை மையங்கள் கொண்ட பல்வேறு துறை சார்ந்த தொழில் பூங்காக்களை நிறுவுவதற்கான

முயற்சிகள் சிப்காட் மற்றும் டிட்கோ நிறுவனங்களால் எடுக்கப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத் துறையின் ஒருங்கிணைப்புடன் சாலை இணைப்பு, குறிப்பாக இணைப்புச் சாலைகள் உறுதி செய்யப்பட்டு வருகின்றன. அத்தியாவசியமான சாலைப்பணிகள் CRIDP திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தொழிற்சாலைகளின் செயல்பாடுகளுக்கு நீர் இன்றியமையாததாகும். தொழிற்சாலைகள் மற்றும் தொழில் பூங்காக்களுக்கான தேவையான நீர் பெரும்பாலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD Board) மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பொருட்கள் உற்பத்தி செய்வதற்குத் தேவையான சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்பட்டு வருகிறது. திருப்பெரும்புதூர் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு கோயம்பேட்டில் உள்ள சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திலிருந்து (CMWSSB) மூன்றாம் நிலை எதிர்சவ்வூடு பரவல் முறையில் (TTRO) சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்படுகிறது.

தொழில் நிறுவனங்கள் வெற்றிகரமாக செயல்படுவதற்கு தகுந்த மின் உள்கட்டமைப்பு மற்றும் தொடர்ச்சியான மின் விநியோகம் ஆகியவை அத்தியாவசிய தேவைகளாகும். இதற்கு தமிழ்நாடு அரசு உரிய முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் அதன் துணை நிறுவனங்களான தமிழ்நாடு மின் உற்பத்தி & மின் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவை மின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் தொழிற்சாலைகளுக்கு தேவையான மின்சாரத்தினை தடையின்றி வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. நமது மாநிலம் குறிப்பிடத்தக்க அளவில் பசுமை எரிசக்தி உற்பத்தி திறனை கொண்டுள்ளது. மேலும் பசுமை எரிசக்தி தேவைப்படும் நிறுவனங்களுக்கு போதுமான அளவு வழங்கப்பட்டு வருகிறது.

தொழிற்சாலைகள் அமைப்பதில் உற்பத்தி செலவு, நேரம், உழைப்பு மற்றும் மூலதனச் செலவுகளை குறைக்கும் நோக்கில், தயார்–நிலை உற்பத்தி கூடங்கள் (Plug and Play) உட்கட்டமைப்பை சிப்காட் மற்றும் டைடல் பார்க் நிறுவனங்கள்

உருவாக்கி வருகின்றன. மேலும், நிதிநுட்பம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனை சார்ந்த நிறுவனங்கள், உலகளாவிய திறன் மையங்கள், ஆராய்ச்சி & மேம்பாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் பயன்பாட்டிற்கு, தயாராக உள்ள அலுவலக இடத்தைக் கிடைக்கச் செய்வதற்காக, டிட்கோ மற்றும் டைடல் பார்க் மூலம் கிரேடு A கட்டிடங்கள், சென்னை மற்றும் இரண்டாம் நிலை & மூன்றாம் நிலை நகரங்களில் உருவாக்கப்பட்டு வருகின்றன.

**4. நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG)**

ஐக்கிய நாடுகளின் சபை, நிலையான வளர்ச்சி இலக்குகளான (SDGs) வறுமையை ஒழித்தல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள் உள்ளிட்ட 17 இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்களை 2030ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டும் என்று உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. இந்தியாவின் முன்னணி தொழில்துறை மாநிலமான தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குத் தேவையான அம்சங்களுடன் புதுமைகளை மையமாக கொண்ட,

நிலையான பொருளாதார வளர்ச்சி உள்ளிட்டவற்றை மேம்படுத்தத்தக்க வகையிலான நிலையான வளர்ச்சி இலக்குகளை உள்ளடக்கிய தொழில் கொள்கைகளை வகுத்துள்ளது.

தமிழ்நாடு தொழில் கொள்கையானது கண்ணியமான பணி மற்றும் பொருளாதார வளர்ச்சி (SDG 8) மற்றும் தொழில், புத்தாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு (SDG 9) ஆகியவற்றிற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. தரமான வேலைகளை உருவாக்குதல் மற்றும் நிலையான பொருளாதார வாய்ப்புகளை உறுதிபடுத்தவும், அதேவேளையில் முதலீடுகளை ஈர்ப்பதற்கும், தொழில் வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கும் தேவையான கட்டமைப்பை இம்மாநிலம் உருவாக்கியுள்ளது. மோட்டார் வாகனம், மின்னணு, ஜவுளி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற அதிக திறன் கொண்ட துறைகளின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு தொழில் கொள்கை 2021 ஊக்கமளிக்கிறது. இம்மாதிரியான கொள்கைகள் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதை மட்டும் நோக்கமாக கொண்டிருக்காமல் திறமையை

வளர்த்தல், வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டங்களில் முதலீடு செய்வோருக்கு கூடுதல் ஊக்கச்சலுகை கொடுத்து மாநிலத்தில் சம வளர்ச்சி ஏற்படுத்தவும் வழிவகுக்கின்றன.

நிலையான தொழில்மயமாக்கல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு சீரமைப்பில், தமிழ்நாட்டின் நோக்கம் மலிவான மற்றும் தூய்மையான ஆற்றல் (SDG 7), காலநிலை நடவடிக்கை (SDG 13) ஆகியவற்றிற்கு ஏற்றவாறு உள்ளது. இம்மாநிலத்தின் கொள்கையானது பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை முக்கியமாக சூரிய எரிசக்தி மற்றும் காற்று எரிசக்தி பயன்படுத்துவதை ஊக்குவிக்கிறது. சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழிற்பூங்காக்கள் மற்றும் பசுமை கட்டிடங்கள் உருவாக்குவதற்கு சிப்காட் நிறுவனம் பல முயற்சிகள் எடுத்து வருகிறது. அவற்றில் பூஜ்ஜிய நிலை திரவ வெளியேற்றம் (ZLD) மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு போன்ற திட்டங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இவை சுற்றுசூழல் நிலைத்தன்மையுடனான சமச்சீரான வளர்ச்சிக்கு

வித்திடும் வகையில் அமைந்துள்ளன. மேலும், தொழில் துறையில் சுழற்பொருளாதாரத்தை (Circular Economy) ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டின் சமூக சமத்துவத்துடன் கூடிய நிலையான வளர்ச்சி, ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல் (SDG 10) மற்றும் பாலின சமத்துவம் (SDG 5) ஆகிய கொள்கைகளை பின்பற்றுவதில் உறுதியாக உள்ளது. இம்மாநிலத்தின் தொழில் கொள்கைகள் அனைத்தும் பெண்கள், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு சமமான வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனையும் வாய்ப்புகள் பெறுவதை உறுதி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் தொழில்துறையில் ஈடுபட்டுள்ள மொத்த பெண் தொழிலாளர்களில், தமிழ்நாட்டின் பங்களிப்பு 42 சதவிகிதமாகும். கிருஷ்ணகிரியில் உள்ள உலகின் மிகப்பெரிய எலக்ட்டிரிக் ஸ்கூட்டர் நிறுவனமான ஓலா எலக்ட்டிரிக் நிறுவனத்தில் நூறு சதவிகித தயாரிப்பு பணி பெண்களால் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது

தொழில்துறையில் பெண்கள் பணி செய்வதற்கு ஒரு இணக்கமான வேலை சூழலைக் குறிக்கிறது.

மேலும், தமிழ்நாடு தொழில், புத்தாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு (SDG 9) மற்றும் தரமான கல்வி (SDG 4) உடன் கூடிய புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சியில் கவனம் செலுத்துகிறது. தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை 2022–ன் மூலம் தொழிற்சாலை மற்றும் கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிப்பதனால் மாநிலத்தில் புத்தாக்க கலாச்சாரத்திற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மாநிலம் முன்னணி கல்வி நிறுவனங்களுடன் இணைந்து தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சியை மேம்படுத்தி திறமையான பணியாளர்களை உருவாக்குவதை உறுதி செய்கிறது.

சுருக்கமாக சொன்னால், தமிழ்நாடு அரசின் தொழில்துறை கொள்கைகள் மற்றும் அதன் அணுகுமுறைகள் நிலையான வளர்ச்சியை முன்னிறுத்துவதற்கு சான்றாகவுள்ளன. ஐ.நா.வின் நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு

(SDG) இணக்கமான வகையில் பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூக முறைகளை அமைப்பதன் மூலம் செழிப்பு, உள்ளடக்கம் மற்றும் நிலைப்புத் தன்மையுடன் கூடிய ஒரு முழுமையான வளர்ச்சியை அரசு உறுதி செய்து வருகிறது. இதன் மூலம் தமிழ்நாடு ஒரு நிலையான தொழிலமைவிற்கான எதிர்காலத்திற்கு வழிவகுக்கிறது.

## 1. வழிகாட்டி நிறுவனம் (Guidance)

இந்திய அளவில் முன்னோடி முதலீட்டு மேம்பாட்டு முகவாண்மை நிறுவனங்களில் ஒன்றான வழிகாட்டி நிறுவனம், 1992ஆம் ஆண்டு, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் என்ற பெயரில் நிறுவப்பட்டது. தமிழ்நாடு வணிகம் புரிதலை எளிதாக்குதல் சட்டம் 2018–ன் மூலம், புதிய மற்றும் விரிவாக்க திட்டங்களுக்கு அனைத்து ஆதரவுச் சேவைகள் வழங்குவதற்கும், ஒற்றைச் சாளர அனுமதிகள் உள்ளிட்ட, திட்டக்காலம் முழுவதும் ஆதரவுச் சேவைகள் அளிப்பதற்கும் வழிகாட்டி நிறுவனத்தினை முகவாண்மை அமைப்பாக தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. மேலும், தமிழ்நாடு தொழில் கொள்கை 2021 மற்றும் இதர துறை சார்ந்த கொள்கைகளின் அடிப்படையில், தொழில் நிறுவனங்களுக்கு அமைப்பு முறையிலான ஊக்கச் சலுகைகள் வழங்குவதற்கான பரிந்துரைகளை வழங்கும் பணிகளையும் வழிகாட்டி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

மாநிலத்தின் முதலீட்டு ஊக்குவிப்பு முகவாண்மை என்ற வகையில், முதலீட்டிற்கு மிகவும் உகந்த மாநிலமாக தமிழ்நாட்டினை மேம்படுத்தும் முயற்சிகளாக, தனது செயல்பாடுகளை வழிகாட்டி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. மேலும், முதலீடுகளுக்கான ஆதரவுச் சேவைகள், நிறுவனங்கள் அமைக்கப்பட்ட பிறகு தேவைப்படும் சேவைகள், வெளிப்புற ஒத்துழைப்பு மற்றும் தொடர்புகளை மேற்கொள்ளுதல், கொள்கைகள் வடிவமைத்தல், ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல் போன்ற பல்வகை சேவைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதுடன், தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு இடையே ஒரு பாலமாகவும் வழிகாட்டி நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. இந்தியாவில் தொழில் தொடங்க விரும்பும் நிறுவனங்கள், வேறு இடங்களிலிருந்து, தமிழ்நாட்டிற்கு இடம் பெயர விரும்பும் நிறுவனங்கள், இதுவரையில், தமிழ்நாட்டில் செயல்பாடுகள் துவங்கிடாத நிறுவனங்கள் மற்றும் விரிவாக்க நோக்கங்களுடன் உள்ள தற்போதைய நிறுவனங்கள் போன்ற பல்வேறு வகையான நிறுவனங்களை

அணுகி, முதலீடுகளை ஈர்ப்பதே, வழிகாட்டி நிறுவனத்தின் முக்கியமான முதலீட்டு மேம்பாட்டுச் சேவையாகும்.

பல ஆண்டுகளாக வழிகாட்டி நிறுவனம் மேற்கொண்ட சேவைகளை அங்கீகரித்திடும் வகையில், பசுமை ஆற்றல் முதலீடுகளை ஈர்ப்பதில் சிறந்து விளங்குவதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பிடமிருந்து (UNCTAD) 2023ஆம் ஆண்டிற்காக சிறந்த முதலீட்டு ஊக்குவிப்பு முகமை விருதினை வழிகாட்டி நிறுவனம் பெற்றுள்ளது. வருடாந்திர முதலீட்டு சந்திப்பு முதலீட்டு விருதுகள் நிகழ்வின்போது, ஐக்கிய அரபு எமிரேட் அரசால் நிறுவப்பட்ட, ஆசியா–ஓசியானியா மண்டலத்திற்கான சிறந்த முதலீட்டு ஊக்குவிப்பு முகமைக்கான விருதினை கடந்த இரண்டு ஆண்டுகளாக வழிகாட்டி நிறுவனம் பெற்று வருகிறது. இந்தியாவிலேயே, மின் வாகனத் துறையில், முன்னிலை வகித்திடும் தமிழ்நாட்டிற்கு, இந்நிலையை மேலும் வலுவூட்டும் வகையில், இந்திய எரிசக்தி சேமிப்புக் கூட்டமைப்பு

(India Energy Storage Alliance – IESA), 2023ஆம் ஆண்டிற்கான மின் வாகன உற்பத்தியில் "முன்னணி மாநிலம்" என்ற கௌரவத்தை தமிழ்நாட்டிற்கு அளித்துள்ளது.

## 1.1 முதலீட்டு ஊக்குவிப்பு

கடந்த மூன்றாண்டுகளில், வழிகாட்டி நிறுவனத்தின் சிறப்பான முயற்சிகளின் பலனாக ரூ.9,74,419 கோடி முதலீடு மற்றும் 31,12,929 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உறுதிசெய்யும் வகையில், தமிழ்நாட்டில் பல்வேறு திட்டங்கள் ஈர்க்கப்பட்டுள்ளன.

அதிக அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளப் படக்கூடிய தொழில் நுட்பம் சார்ந்த தொழில் முதலீடுகளையும் (capital intensive high–tech industries) மற்றும் பெருமளவிலான வேலைவாய்ப்புகளை அளிக்கக்கூடிய தொழில் முதலீடுகளையும் (employment intensive industries) ஈர்த்துள்ளதன் காரணமாக, மாநிலம் முழுவதும் பரவலான மற்றும் சமச்சீரான வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது. தோல் அல்லாத காலணிகள், மின்சார வாகனங்கள் மற்றும்

மின்னணுப் பொருட்கள் உற்பத்தி போன்ற முக்கிய துறைகளில் இம்முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. 33 சதவிகித பங்களிப்புடன் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில், இந்திய அளவில், தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. 2022–23ஆம் ஆண்டில் 5.37 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவில் இருந்த மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி, 2023–24ஆம் ஆண்டில், 9.5 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவிற்கு பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது. மேலும், தமிழ்நாட்டில் இருந்து வரும், வலிமையான அறிவுசார் பொருளாதாரத்தை கணிசமாக மேம்படுத்தும் வகையில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D), உலகளாவிய திறன் மையங்கள் (GCC), தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க மையங்களில் முதலீடுகளை ஈர்ப்பதில் வழிகாட்டி நிறுவனம் தனிக்கவனம் செலுத்தி வருகிறது.

### 1.1.1 முதலீட்டு நிகழ்வுகள் மற்றும் முதலீட்டு மாநாடுகள்

முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, வழிகாட்டி நிறுவனம், இந்திய மற்றும்

சர்வதேச சந்தைகளில், முதலீட்டு நிகழ்வுகள் மற்றும் மாநாடுகளை நடத்தி, மாநிலத்தில் வலுவான தொழில் சூழலமைப்பு மற்றும் முதலீடு மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் மற்றும் சாத்தியக்கூறுகளை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான உயர்நிலைக்குழு, 2023ஆம் ஆண்டு மே மாதம், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக தொழில்முறை பயணம் மேற்கொண்டது. இப்பயணத்தின்போது, ரூ.1,342 கோடி முதலீடு மற்றும் 2,271 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் திட்டங்கள் ஈர்க்கப்பட்டன. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான உயர்நிலைக்குழு ஸ்பெயின் நாட்டிற்கு பயணம் மேற்கொண்டு உலகளாவிய முன்னணி நிறுவனங்களை சந்தித்தது. இதன் விளைவாக, ரூ.3440 கோடி முதலீடுகள் மற்றும் 1150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் திட்டங்கள் ஈர்க்கப்பட்டன.

இவை மட்டுமின்றி, ஜெர்மனி, டென்மார்க், ஃபின்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளிலும், முதலீட்டுக் கண்காட்சிகள் மற்றும் முதலீட்டு மாநாடுகள் நடத்தப்பட்டன. இதுபோலவே, மும்பாய், புதுடில்லி மற்றும் பெங்களூரு ஆகிய உள்நாட்டு நகரங்களிலும் முதலீட்டாளர்களை இலக்கிட்டு, தமிழ்நாட்டில் முதலீடு செய்வதன் மூலம், தங்களின் இருப்பை விரிவுபடுத்தக் கோரி, முதலீட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெறும் உலகப் பொருளாதார மாநாட்டில், தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக தமிழ்நாடு கலந்து கொண்டு, தனது முதலீட்டு ஈர்ப்புத் திறனை வெளிப்படுத்தி வருகின்றது. 2024, ஜனவரி 15 முதல் 19 வரை நடைபெற்ற இம்மாநாட்டு நிகழ்வுகளில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலான ஒரு முதலீட்டுக்குழு கலந்து கொண்டு, தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு முதலீட்டு நடவடிக்கைகள், முதலீட்டு வாய்ப்புகள் ஆகியவற்றை காட்சிப்படுத்தியது.

மாநிலத்தின் மேம்பட்ட உற்பத்தித் திறன், சாதகமான வணிகச்சூழல், வளர்ந்து வரும் ஆராய்ச்சி & மேம்பாட்டுத் திறன் ஆகியவற்றை பிரகடனப்படுத்தும் விதமாக, தமிழ்நாடு அரங்கு ஒன்று இம்மாநாட்டில் அமைக்கப்பட்டது.

### 1.1.2 உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024

தமிழ்நாடு அரசின் முக்கிய நிகழ்ச்சியாக, கடந்த ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் சென்னை வர்த்தக மையத்தில், தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த மாபெரும் நிகழ்வைத் தொடங்கி வைத்தார். இம்மாநாட்டின் முக்கிய நிகழ்வாக, தமிழ்நாடு குறைகடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் கொள்கை 2024, பொது–தனியார் கூட்டாண்மைக் கொள்கை மற்றும் 'தமிழ்நாடு விஷன் $1 ட்ரில்லியன்' பொருளாதார அறிக்கையினை வெளியிட்டார். மேலும், இவ்விழாவின் ஒரு பகுதியாக சில முக்கிய திட்டங்களுக்கான தொடக்க விழா மற்றும் அடிக்கல்

நாட்டும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. தலைமைத்துவம், நீடித்த நிலைத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி (Leadership. Sustainability and Inclusivity) என்ற கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு இம்மாநாடு நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்சு, ஜெர்மனி, டென்மார்க், சிங்கப்பூர் மற்றும் தென்கொரியா ஆகிய 9 நாடுகள் பங்குதாரர் நாடுகளாகவும், மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தாய்பெய் பொருளாதார மற்றும் கலாச்சார மையம் (Taipei Economic & Cultural Centre in Chennai–TECC) ஆகியவை சர்வதேச பங்குதாரர்களாகவும் தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்பட்டன.

முன்னெப்போதும் இல்லாத அளவில், ரூ.6,64,180 கோடி அளவிலான முதலீடுகள், 14,54,712 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு உள்ளிட்ட மொத்தம் 26,90,657 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தும் வகையில், 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. மேலும் இவ்வாறு உறுதியளிக்கப்பட்ட முதலீடுகள்,

மாநிலம் முழுவதும் அமைக்கப்பட உள்ளதால், மாநிலத்தின் பரவலான மற்றும் சமச்சீரான வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது. இம்முதலீடுகள் பல்வேறு துறைகளிலிருந்து வரப்பெற்றுள்ளன. இம்முதலீடுகள் மேம்பட்ட மின்னணுப் பொருட்கள் உற்பத்தி, பசுமை எரிசக்தி, ஜவுளி, தோல் மற்றும் தோல் அல்லாத காலணிகள், மின் வாகனங்கள், வான்வெளி மற்றும் பாதுகாப்பு, தரவு மையங்கள், உலகளாவிய திறன் மையங்கள் மற்றும் தகவல் தொழில் நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இம்முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

மாநிலத்தின் பெருந்தொழில்களின் வளர்ச்சி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி, ஆகியவற்றை வெளிப்படுத்தும் விதமாக 8 துறை சார்ந்த அரங்குகள் மற்றும் தமிழ்நாடு சூழலமைப்பு அரங்கம் என பல்வேறு விதமான அரங்குகள் அமைக்கப்பட்டன. மற்றுமொரு சிறப்பம்சமாக, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், ஜெர்மனி, தென் கொரியா மற்றும் பிரான்சு ஆகிய 7 நாடுகள் தங்களது சர்வதேச அரங்குகளை

அமைத்து, மாநிலத்துடனான ஆழமான மற்றும் நீண்டகால தொழில் தோழமையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தின. இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில், 30–க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், உலகளாவிய நிறுவனங்களின் தலைமை செயல் அலுவலர்கள், முதலீட்டாளர்கள், வெளிநாட்டுத் தூதர்கள், அரசு மற்றும் தனியார் கல்லூரி மாணவர்கள் உட்பட 20,000–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். உலக முதலீட்டாளார்கள் மாநாட்டின் பல்வேறு நிகழ்ச்சிகளை சுமார் 39.3 இலட்சம் இளைஞர்கள், அரசு ஏற்பாடு செய்திருந்த இணையதளம் மூலம் கண்டுகளித்தனர்.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024–ல் பெறப்பட்ட முதலீடுகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் சிறப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் செயலாக்கத்தின்

போது, சிக்கல்கள் ஏதேனும் ஏற்படுமாயின், அவற்றை விரைந்து தீர்வு காண்பதற்கான பரிந்துரைகளை இக்குழு அளித்திடும்.

### 1.1.3 உலகளாவிய திறன் மையங்கள் (GCCs) மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில் முதலீட்டை ஊக்குவித்தல்

தமிழ்நாட்டில் நிலவி வரும், வலிமையான அறிவுசார் பொருளாதாரத்தை கணிசமாக மேம்படுத்தும் வகையில், ஆராய்ச்சி & மேம்பாடு (R&D), திறன் மையங்கள் (GCCs), தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க மையங்களில் முதலீடுகளை ஈர்ப்பதில் வழிகாட்டி நிறுவனம் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. இதன் காரணமாக முன்னணி உலகளாவிய நிறுவனங்கள், தங்கள் திறன்மிகு மையங்களை, மாநிலத்தில் அமைத்திட தமிழ்நாட்டினை தேர்வு செய்து வருகின்றன. 2022ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட, தமிழ்நாடு ஆராய்ச்சி & மேம்பாட்டுக் கொள்கை, மாநிலத்தின் திறன் சூழலமைப்பை அடையாளம் காண்பதிலும், ஊக்கத்தொகைகள் மூலம் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்தி,

அத்துறை சார்ந்த முதலீட்டாளர்களுக்கு ஆதரவுச் சேவைகள் அளிப்பதில் மாநிலத்தின், முனைப்பினை வெளிப்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

நமது மாநிலத்தின் திறன்மிகு பணியாளர்கள் இருப்பது, வங்கி, நிதி மற்றும் காப்பீட்டு சேவைகள் (BFSI), பொறியியல் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம், வான்வெளி, வணிக ஆலோசனை போன்ற முக்கிய துறைகளில் உலகளாவிய திறன் மையங்களை ஈர்ப்பதற்கு, ஒரு வலுவான காரணியாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் நிலவும் வலுவான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கல்வியமைப்பு காரணமாக சோதனை ஆராய்ச்சி மையங்கள், மற்றும் பாதுகாப்பு மையங்களின் சூழலமைப்பு மேலும் வலுப்படுத்துகின்றது. உலகளாவிய திறன் மையங்களை மேம்படுத்திட, வழிகாட்டி நிறுவனம் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கைகளால் UPS மற்றும் ஹிட்டாச்சி நிறுவனங்கள் தங்களது மிகப் பெரும் உலகளாவிய தொழில்நுட்ப மையங்களை சென்னையில் அமைத்துள்ளன. தமிழ்நாடு உலக

முதலீட்டாளர்கள் மாநாடு 2024 நிகழ்வின்போது, போயிங், அடிடாஸ், குவால்காம், ஃபைசர் மற்றும் பல்வேறு உலகப் புகழ் பெற்ற நிறுவனங்கள், தங்களது, உலகளாவிய திறன் மையங்கள் அமைப்பதற்கான முதலீட்டுத் திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டன.

அகில இந்திய அளவில், மாநிலத்தினை முதன்மையான உலகளாவிய திறன் மையம் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு திட்டங்களின் மையமாக, தமிழ்நாட்டை மேம்படுத்துவதற்காகவும், புதிய உலகளாவிய திறன் மையங்களில், அதிகளவு ஊதியம் அளிக்கக்கூடிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும் உலகளாவிய திறன் மையங்களை மேம்படுத்துவதற்கு ஒரு தனித்துவமான திட்டத்தை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாட்டில் புதிதாக அமைக்கப்படும் உலகளாவிய திறன் மையங்களில் அதிக ஊதியம் அளிக்கக்கூடிய பணியிடங்களுக்கான ஊதியப் பட்டியலில் முதலாவது ஆண்டில் 30 சதவிகிதம், இரண்டாவது ஆண்டு 20 சதவிகிதம், மூன்றாவது

ஆண்டிற்கு 10 சதவிகிதம் ஊதியப்பட்டியல் மானியமாக வழங்கப்படும். இந்த அறிவிப்பின் முக்கிய அம்சம் யாதெனில் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில், புதிய உலகளாவிய திறன் மையங்களை நிறுவுவதற்கும், அரசு அனைத்து ஆதரவுச் சேவைகளையும் வழங்கும் என்பதையும் இந்த அறிவிப்பு வெளிப்படுத்துகிறது.

## 1.2 கொள்கை மற்றும் ஆராய்ச்சி

கொள்கை மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, வழிகாட்டி நிறுவனம், துறை சார்ந்த முதலீட்டுக் கொள்கைகள், சூழலமைப்பு மேம்பாட்டு செயல் திட்டங்கள் மற்றும், வெளிப்புற பங்குதாரர்களுடன் இணைந்து தொழில்துறையை மையமாகக் கொண்ட ஆய்வுகளை மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. தமிழ்நாடு குறைகடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் கொள்கை 2024 வெளியீடு, உலகளாவிய திறன் மையங்களை ஈர்த்திடும் வகையில் சிறப்பு சலுகைத் திட்டங்கள் மற்றும்,

புதிய தொழில் திட்டங்களில், பெண்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளின் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்காக ஊதிய மானியம் அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஆகியவை இச்சிறப்பான முன்முயற்சிகளின் வெளிப்பாடாகும்.

தமிழ்நாட்டில், பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்கான சிறப்புத் திட்டத்தினை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம், புதிய திட்டங்களில் பணியமர்த்தப்படும் பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகிய ஊழியர்களின் ஊதியச் செலவில் 10 சதவிகிதம் ஊதிய மானியமாக இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உணவு பதப்படுத்துதல், மின் வாகனங்கள் சூழலமைப்பு, ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சி மற்றும் இன்னும் பிற முக்கியத்துவம் வாய்ந்த வளர்ச்சித் திட்டங்கள் சார்ந்த துறைகளில், ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக, வழிகாட்டி நிறுவனம், சுற்றுச்சூழல், எரிசக்தி மற்றும்

நீர் கவுன்சில் (CEEW), பொருளாதார மேம்பாட்டுக்கான அறக்கட்டளை (FED), வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகம் (FCDO), போக்குவரத்து மற்றும் மேம்பாட்டுக் கொள்கைக்கான நிறுவனம் (ITDP) போன்ற புகழ்பெற்ற நிறுவனங்களுடன் அறிவுசார் கூட்டாண்மை மேற்கொண்டுள்ளது.

2024ஆம் ஆண்டில், தொழில் துறையை மையமாகக் கொண்டு, அத்தியாவசிய முதலீடு மற்றும் பொருளாதாரம் சார்ந்த அளவீடுகளை கொண்ட தரவுதளம் (Dashboard) ஒன்றினை வழிகாட்டி நிறுவனம் உருவாக்கும். கொள்கை சார்ந்த முடிவுகளை எடுத்திட இத்தரவுகள் பயன்படும். மேலும், விரைவாக முதலீடுகளை ஈர்த்திடும் புதிய வளர்ச்சி மையங்களுக்கான மண்டல வளர்ச்சித் திட்டங்களை, வழிகாட்டி நிறுவனம் பல்வேறு பங்குதாரர்களுடன் இணைந்து, வடிவமைத்திடும்.

### 1.3 வணிகம் புரிதலை எளிதாக்குதல் (EoDB)

அரசு–வணிக சமூகத்திற்கு இடையேயான தொடர்பை மின்வணிகமயமாக்குதல், நியாயமான மற்றும் பயனுள்ள வணிக சீர்திருத்தங்கள்

மேற்கொள்ளுதல், முதலீட்டாளர்களுக்கு தகவல்களை அளித்தல் மற்றும் ஆதரவுச் சேவைகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மூலம், வணிகப் போட்டித் தன்மையை வெகுவாக மேம்படுத்திக் கொள்ள தமிழ்நாடு அரசு உறுதி கொண்டுள்ளது. அகில இந்திய அளவில், வணிகம் புரிதலை மேம்படுத்துதல் தர வரிசையில், "சாதனையாளர் மாநிலம்" என்ற பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.

முதலீட்டாளர்களுக்கு தடையற்ற, சிறப்பான வணிக அனுபவங்களை வழங்கிடும் வகையில், தமிழ்நாடு ஒற்றைச் சாளர இணையதளம் (TNSWP) மூலம், 30–க்கும் மேற்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைத்து, அனுமதிகள் மற்றும் செயல்முறைகளை மின்மயமாக்க, வழிகாட்டி நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த இணையதளத்தின் மூலம், வணிகம் தொடர்பான அனைத்து உரிமங்கள் / ஒப்புதல்கள் / தடையின்மைச் சான்றுகளை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இயலும். 29 அரசு நிறுவனங்களை உள்ளடக்கிய 183 வணிகம்

தொடர்பான சேவைகள் தற்போது, ஒற்றைச் சாளர இணையதளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. 31.03.2024 அன்றைய நிலவரப்படி, இதுவரை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் விண்ணப்பங்கள் உள்பட 45,893 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ஒற்றைச் சாளர இணையதளம் மூலம் பரிசீலிக்கப்பட்டுள்ளன. கூடுதலாக, மேலும் 353 சேவைகள் இணைக்க திட்டமிடப்பட்டு, அவை பல்வேறு நிலைகளில் செயலாக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் இணைப்பு பல்வேறு கட்டங்களில் தற்போது உள்ளது. 2025ஆம் நிதி ஆண்டிற்குள் இக்கூடுதல் சேவைகள் பயன்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறான முன்னேற்ற நடவடிக்கைகளுக்காக இந்த ஒற்றைச் சாளர இணையதளத்திற்கு, எகனாமிக் டைம்ஸ் நிறுவனம் தங்க விருது பிரிவில், டிஜிடெக் 2023–ற்கான விருதினை வழங்கி அங்கீகரித்துள்ளது.

ஒன்றிய அரசின் குறிக்கோள்களுக்கு ஏற்றவாறு, ஒழுங்குமுறை இணக்கச் சுமையைக் குறைக்க, தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை

மேற்கொண்டு வருகிறது. மேலும் இது குறித்து, வணிக ஒப்புதல்கள் மற்றும் தடையின்மைச் சான்றிதழ்கள் தொடர்பான 560 இணக்கத் தேவைகளை குறைப்பது உட்பட, பல்வேறு கணிசமான முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது மட்டுமின்றி, சிறிய குற்றங்கள் என்று வகைப்படுத்தப்பட்ட 1299 தண்டனை விதிகள், குற்றமற்றவை என்று திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஒற்றைச் சாளர இணையத்தில் அவ்வப்போது ஏற்படும் உள்நுழைவு சிக்கல்கள், கட்டண சிக்கல்கள் மற்றும் தொழில்நுட்ப சிக்கல்களை எதிர்கொள்வதற்காகவும், அவற்றை தீர்த்து வைப்பதற்காகவும், ஒரு உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வருடங்களில், பெறப்பட்ட அனைத்து 7654 உதவி அழைப்புகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும், தொழில் தோழன் (Biz Buddy) அமைப்பு, முதலீட்டாளர்களின் குறைகளை கவனமுடன் கேட்டு, தீர்வுகள் வழங்கப்படுவதை உறுதி செய்கிறது.

தீர்வு காண்பதில் இவ்வமைப்பு 90 சதவிகிதத்திற்கும் மேலான விகிதத்தைக் கொண்டுள்ளது.

அது மட்டுமின்றி, 2022-23ஆம் ஆண்டில் ரூ.6.94 கோடி என்ற அளவில் இருந்த தமிழ்நாடு ஒற்றைச் சாளர இணையம் மூலம் ஈட்டப்படும் வருவாய் 2023-24ஆம் ஆண்டில் ரூ.7.78 கோடி உயர்ந்துள்ளது. இது ஒப்புதல்கள் / உரிமங்கள் மற்றும் தடையின்மைச் சான்றிதழ்களைப் பெறுவதற்கான முழுமையான ஆன்லைன் மற்றும் வெளிப்படையான அமைப்பின் மீது, முதலீட்டாளர்கள் கொண்டுள்ள அதீத நம்பிக்கைக்கு சான்றாகும்.

மேலும், ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட தனித்துவ அடையாளங்காட்டியின் அடிப்படையில், தமிழ்நாடு ஒற்றைச் சாளர இணையம், தேசிய ஒற்றைச் சாளர முறையுடன் தொழில்நுட்ப ரீதியாக, வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே, இச்செயல்பாட்டினை வெற்றிகரமாக செயல்படுத்திய முதலாவது மாநிலமாக, தமிழ்நாடு விளங்குகிறது.

ஒன்றிய அரசால் வடிவமைக்கப்பட்ட வணிக சீர்திருத்த செயல் திட்டம் (BRAP) 2024–ன்படி, வணிகத்தை மையமாகக் கொண்ட 287 சீர்திருத்தங்களை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து வழிகாட்டி நிறுவனம் பணியாற்றி வருகிறது.

## 1.4 பணி ஆய்வகங்கள்

தொழிலகங்கள் கல்வியமைப்புகள் ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும், எளிதாக்கவும், விரிவுபடுத்தவும் வழிகாட்டி நிறுவனம் பணி ஆய்வகப் பிரிவினை அமைத்துள்ளது.

### 1.4.1 பாடத்திட்ட வடிவமைப்பு மற்றும் மேம்பாடு

தொழிலகங்கள் மற்றும் கல்வியமைப்புகள் ஒருங்கிணைந்து, தொழிலகங்களுக்கு ஏற்ற வகையில் பாடத்திட்டங்களை வடிவமைத்தல் மற்றும், புதிய தலைமுறைக்கு ஏற்றாற்போல புதிய படிப்புகளை அறிமுகப்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் (DOTE) மற்றும் முக்கிய பங்குதாரர் நிறுவனங்களான, Tata Electronics, First Solar, Hyundai மற்றும் Mando மற்றும்

பிற நிறுவனங்களுடன் இணைந்து பல்தொழில்நுட்ப (polytechnic) பாடத்திட்ட சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பல்தொழில்நுட்ப கல்லூரிகளிலும் 2023ஆம் கல்வியாண்டில், இப்பாடத்திட்டங்கள் வெற்றிகரமாக தொடங்கி வைக்கப்பட்டன.

மேலும், தொழிலக கூட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட தேவைகள் மற்றும் முன்மொழிவுகளின்படி அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் ஐந்து திறன்மிகு மையங்களை உருவாக்க வழிகாட்டி நிறுவனம் ஆதரவுச் சேவைகள் அளித்துள்ளது.

### 1.4.2 நான் முதல்வன் தொழில்துறை கூட்டாண்மை

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மேற்கொண்டுள்ள மாநிலத்தின் முதன்மை திறன் மேம்பாட்டு முயற்சியை ஆதரித்திடும் வகையில், வழிகாட்டி நிறுவனம், சுமார் 136 தொழிலகங்களை "நான் முதல்வன்" திட்டத்தில் பங்கு கொண்டு, வேலைவாய்ப்பு, மாணவர்களுக்கு கல்வி கற்கும் காலத்திலேயே பயிற்சி திறன் மற்றும் பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

## 1.5 வெளிப்புற ஈடுபாடு

வழிகாட்டி நிறுவனத்தில் உள்ள வெளிப்புற ஈடுபாட்டுக்குழு, அரசு நிறுவனங்கள், தூதரகங்கள் மற்றும் வர்த்தகச் சங்கங்கள் போன்ற முக்கிய உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்குதாரர்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், திட்டமிட்ட கூட்டாண்மைகளை வளர்ப்பதிலும், வழிகாட்டி நிறுவனத்தின் தெரிவுநிலை மற்றும் நற்பெயரை உயர்த்திடுவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இவை மட்டுமின்றி, குறிப்பிட்ட நாடுகளுடனான உறவினை மேலும் மேம்படுத்துவதற்காக, நாடுவாரியான தொடர்பு மையங்கள் வழிகாட்டி நிறுவனத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வெளிப்புற ஈடுபாடுகளின் ஒரு பகுதியாக, மாநிலத்தின் பொருளாதார திறன், வணிகம் புரிதலை எளிதாக்குதல், முதலீட்டு சூழலமைப்பு மற்றும் முதலீட்டிற்கான முக்கிய துறைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் விதமாக, வழிகாட்டி நிறுவனம் முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகள், மாநாடுகள், காட்சியரங்குகள் போன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்கிறது. அயல்நாட்டு தூதரகங்கள் மற்றும் வர்த்தக சங்கங்களுடன் இணைந்து நாடு சார்ந்த வட்டமேசை

மாநாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. பன்னாட்டு வர்த்தகம் மற்றும் வணிக அமைப்புகள் மாநிலத்தில் தொழில் தளங்களைப் பார்வையிடுவதற்கான சேவைகளையும் வழிகாட்டி நிறுவனம் வழங்கி வருகிறது.

ஜப்பான் மற்றும் தமிழ்நாடு இடையேயான வர்த்தக உறவுகளை பெருமளவில் மேம்படுத்திட கொச்சி, எஹிம் மற்றும் ஹிரோஷிமா மாகாணங்களுடன் பொருளாதார கூட்டாண்மை ஏற்படுத்தப்பட்டன. மேலும், ஜெர்மனி, ஆஸ்திரேலியா மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருகை தந்த பிரதிநிதிகள் சிறப்பாக உபசரிக்கப்பட்டனர்.

## 2. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பை திட்டமிடல், மேம்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல் ஆகியவை சிப்காட் நிறுவனத்தின் குறிக்கோள்கள் ஆகும். சிப்காட் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து, இதுவரை, 20 மாவட்டங்களில், 7 சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உள்ளடக்கி 40 தொழிற் பூங்காக்களை 40,839 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கியுள்ளது. மேலும், தொழில் மற்றும் சுற்றுச்சூழல் இடையே ஒரு சமநிலையினை பேணிட, போதுமான பசுமைவெளி மற்றும் சிறப்பான பராமரிப்புகளுடன் கூடிய திறந்தவெளி வசதிகள் உருவாக்கப்படுவதை சிப்காட் உறுதி செய்கிறது.

கடந்த 53 ஆண்டுகளில், 3,275 தொழில் நிறுவனங்கள் உருவாவதிற்கும் அதன் மூலம் மொத்தம் சுமார் ரூ.1.83 இலட்சம் கோடி முதலீடு மற்றும் 8.15 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடவும் சிப்காட் நிறுவனம் முக்கிய காரணியாகத் திகழ்கிறது.

தொழில் சூழலமைப்புக்கு ஏற்ற பன்முகத் தேவைகளை வழங்குவதுடன் பல்வேறு சிறந்த செயல்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் சிப்காட் நிறுவனம் மாநிலத்தில் தொழில் முனைவோருக்கு உகந்த சூழல் அமைவதற்கு முக்கிய பங்களித்து வருகிறது.

சிப்காட் தொழிற் பூங்காக்களில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளான அணுகுசாலையுடன் கூடிய தரமான சாலை வசதி, மழை நீர் வடிகால் அமைப்பு, தண்ணீர் வசதி, நிர்வாக அலுவலகம் மற்றும் செம்மையான கண்காணிப்பு அமைப்பு ஆகியன ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சிப்காட் தொழிற்பூங்காக்களின் அனைத்து தகவல்கள் மற்றும் ஒதுக்கீட்டிற்கு தயாராக உள்ள மனைகள் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள புவியியல் தகவல் முறைமை வரைதள (GIS portal) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வணிக வசதி சேவைகளான கோப்புகளை கணினி மயமாக்குதல், தரவு மேலாண்மை, இ–அலுவலக அமைப்பு (e–office), இணையவழி கொள்முதல் மற்றும் இணையவழி

கட்டண முகப்பு மற்றும் பல வணிக வசதி சேவைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இணையதள நில ஒதுக்கீட்டு விண்ணப்ப முகப்பு மூலம், விண்ணப்பதாரர்களுக்கு எளிய மற்றும் வெளிப்படையான சேவையினை தொடர்ந்து வழங்கி வருகிறது. சிப்காட் தனது தொழில் மனைகளை திறம்பட பயன்படுத்துவதை உறுதிசெய்ய, தேவைக்கேற்ப மனை அளவினை மாற்றுதல், ஒதுக்கீட்டாளர்களின் மனை பயன்பாட்டை தொடர் கண்காணிப்பு செய்தல், பயன்பாட்டிற்கு உட்படுத்தாத மனைகளை திரும்பப் பெறுதல் மற்றும் உள் குத்தகைக் கொள்கை ஆகியனவற்றை செயல்படுத்தி வருகிறது. சிப்காட் நிறுவனம் நில உரிமையாளர்களுடனான நேரடி பேச்சுவார்த்தை முறையை மேற்கொள்வதால் நில எடுப்பு விரைவுபடுத்தப்படுகிறது.

சிப்காட் நிறுவனம் அறைகலன், மருத்துவ சாதனங்கள், மின்னணுப் பொருட்கள் தயாரிப்புத் தொகுப்பு, உணவு பதப்படுத்துதல், வருங்கால நகர்திறன், ஜவுளி மற்றும் காலணி போன்ற துறை சார்ந்த தொழிற் பூங்காக்களை நிறுவுவதன் மூலம்,

இத்துறைகளில் மதிப்பு சங்கிலியோடு தொடர்புடைய பல்வேறு தொழில் பங்குதாரர்களுக்கு தொழில் சூழல் அமைப்பு உதவியோடு பெருமளவிலான பொருளாதார நன்மைகளை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. சிப்காட் நிறுவனம், அனுபவம் மிகுந்த தொழில்நுட்ப மற்றும் மேலாண்மை ஆலோசகர்கள் மூலம் துறை சார்ந்த நிறுவனங்களின் தேவைக்கேற்ப, விரிவான மண்டல மற்றும் பகுதிகளை உள்ளடக்கி ஒருங்கிணைந்த தொழிற்பூங்கா பெருந்திட்டத்தினை தயாரித்து வருகிறது.

நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு ஏற்ப உலகத்தரத்திலான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் மாநிலத்தில் அனைத்தும் உள்ளடக்கிய நிலையான தொழில்மயமாக்கல் உருவாக்கப்படுவதில் சிப்காட் நிறுவனம் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

சிப்காட் நிறுவனம் அமைத்து வரும் அனைத்து தொழிற் பூங்காக்களிலும் நிலையான மற்றும் ஒருங்கிணைந்த தொழிலக சூழல் அமைப்பினை ஏற்படுத்த முனைந்து வருகிறது. கழிவுநீரை

மறுசுழற்சி செய்து பயன்படுத்துதல், நீர்நிலைகளை புத்தாக்கம் செய்தல் மற்றும் பெருமளவில் மரம் வளர்ப்பு போன்ற செயல்கள் மூலம் கார்பன் மடுக்களை (carbon sinks) உருவாக்கி, சிப்காட் தனது தொழில் பூங்காக்களை பசுமையான மற்றும் நிலையான சுற்றுச்சூழல் பாதுகாப்பு கொண்ட பூங்காக்களாக தரம் உயர்த்தியுள்ளது. உள்கட்டமைப்பு மேம்பாட்டு பங்கேற்பு திட்டத்தின் (Participatory Infrastructure Development Program) கீழ், சிப்காட் நிறுவனம் அதன் நில ஒதுக்கீட்டாளர்களிடையே கூட்டுப் பொறுப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

## 2.1 தற்போதுள்ள தொழிற் பூங்காக்கள்

சிப்காட் நிறுவனம் கீழ்கண்ட தனது தொழிற் பூங்காக்கள் மூலம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை அளித்து வருகிறது:–

| வ. எண். | தொழிற் பூங்கா | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | திருப்பெரும்புதூர் (சிறப்பு பொருளாதார மண்டலம் உட்பட) (ம) மாம்பாக்கம் | 2374.00 |
| 2. | இருங்காட்டுக்கோட்டை | 1844.00 |
| 3. | பிள்ளைப்பாக்கம் | 1131.00 |

| வ. எண். | தொழிற் பூங்கா | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 4. | ஒரகடம் (சிறப்பு பொருளாதார மண்டலம் உட்பட) | 3198.57 |
| 5. | ஒரகடம் – மருத்துவ சாதனங்கள் பூங்கா | 350.00 |
| 6. | வல்லம் வடகால் | 1456.00 |
| 7. | வல்லம் வடகால் – வானூர்திப் பூங்கா | 234.00 |
| 8. | திருமுடிவாக்கம் | 82.00 |
| 9. | நெமிலி | 229.00 |
| 10. | கும்மிடிப்பூண்டி | 1478.00 |
| 11. | புதுவாயல், கும்மிடிப்பூண்டி | 72.75 |
| 12. | தேர்வாய்கண்டிகை | 1127.00 |
| 13. | மாநல்லூர் | 2040.00 |
| 14. | மப்பேடு | 122.00 |
| 15. | சிறுசேரி | 783.00 |
| 16. | பெருந்துறை (சிறப்பு பொருளாதார மண்டலம் உட்பட) | 2622.63 |
| 17. | ஓசூர் | 2093.00 |
| 18. | சூளகிரி | 689.10 |
| 19. | சூளகிரி – வருங்கால நகர்திறன் பூங்கா | 300.00 |
| 20. | பர்கூர்(சிறப்பு பொருளாதார மண்டலம் உட்பட) | 1379.00 |
| 21. | குருபரப்பள்ளி | 156.94 |
| 22. | இராணிப்பேட்டை (சிறப்பு பொருளாதார மண்டலம் உட்பட) | 1420.71 |
| 23. | மணப்பாறை (உணவுப் பூங்கா உட்பட) | 1097.36 |
| 24. | கடலூர் | 2625.00 |
| 25. | நிலக்கோட்டை | 387.00 |
| 26. | புதுக்கோட்டை | 421.00 |

| வ. எண். | தொழிற் பூங்கா | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 27. | மானாமதுரை | 492.00 |
| 28. | தூத்துக்குடி | 1357.00 |
| 29. | தூத்துக்குடி அறைகலன் பூங்கா | 1130.80 |
| 30. | சில்லாநத்தம் | 383.00 |
| 31. | வைப்பார் | 1019.00 |
| 32. | கங்கைகொண்டான் (சிறப்பு பொருளாதார மண்டலம் உட்பட) | 1991.59 |
| 33. | செய்யாறு | 2937.00 |
| 34. | எ. சாத்தனூர் சிறப்பு பொருளாதார மண்டலம் | 190.42 |
| 35. | தாராபடவேடு | 74.34 |
| 36. | திண்டிவனம் (உணவுப் பூங்கா உட்பட) | 694.00 |
| 37. | எறையூர் | 243.49 |
| 38. | பாடலூர் | 99.66 |
| 39. | தேனி (உணவுப் பூங்கா உட்பட) | 424.10 |
| 40. | கூலநாயக்கன்பட்டி | 89.87 |
| | **மொத்தம்** | **40,839.33** |

மேற்படி தொழிற் பூங்காக்களில், திருப்பெரும்புதூர் (191.32 ஏக்கர்), ஓரகடம் (182.83 ஏக்கர்), பெருந்துறை (140.37 ஏக்கர்), இராணிப்பேட்டை (133.76 ஏக்கர்), கங்கைகொண்டான் (128.27 ஏக்கர்), பர்கூர் (149.95 ஏக்கர்) மற்றும் எ.சாத்தனூர் (182.75 ஏக்கர்) ஆகிய சிறப்புப்

பொருளாதார மண்டலங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், திருப்பெரும்புதூரில், ஃப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ் டெக்னாலஜிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் நோக்கியா இந்தியா பிரைவேட் லிமிடெட், செய்யாறு, பர்கூர் மற்றும் திண்டிவனத்தில், செய்யாறு செஸ் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட், சிறுசேரியில் டாடா கன்சல்டன்ஸி சர்வீசஸ் லிமிடெட், சின்டல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட், காக்னிஸன்ட் டெக்னாலஜி சொலுஷன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் ஹெக்சாவேர் டெக்னாலஜீஸ் லிமிடெட் ஆகிய தனியார் சிறப்பு பொருளாதார மண்டலங்களும் சிப்காட் தொழிற் பூங்காக்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட மண்டலங்களில் அமைந்துள்ள சிப்காட் தொழிற் பூங்காக்கள், முக்கிய தொழில் நிறுவனங்களின் வருகையினால் துறை சார்ந்த தொகுப்புகளாக உருப்பெற்றுள்ளன.

திருப்பெரும்புதூர் தொழிற்பூங்காவைச் சுற்றி முன்னணி வாகன தயாரிப்பு நிறுவனங்களான, ஹூண்டாய் மோட்டார்ஸ், யமஹா மோட்டார்ஸ்,

எய்ச்சர் மோட்டார்ஸ், ரெனால்ட் நிசான், டெய்ம்லர், மோபிஸ், மேண்டோ ஹெல்லா எலக்ட்ரானிக்ஸ் ஆட்டோமோடிவ்ஸ், சிவிங் ஸ்டெட்டர் மற்றும் பிற நிறுவனங்கள் அமையப்பெற்றுள்ளதால், இப்பகுதி வாகன உற்பத்தி தொகுப்பாக உருவாகியுள்ளது.

திருப்பெரும்புதூர் பகுதி, எஃப்ஐஎச் இந்தியா டெவலப்பர், ஃப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ் டெக்னாலஜிஸ், சாம்சங் எலக்ட்ரானிக்ஸ், டெல், சால்காம்ப், சான்மினா எஸ்சிஐ டெக்னாலஜி, நோக்கியா சொல்யூஷன் & நெட்வொர்க்ஸ் மற்றும் பல நிறுவனங்கள் உள்ளடக்கிய மின்னணு தொகுப்பாகவும் உருவாகியுள்ளது.

அசோக் லேலண்ட், டைட்டன் இண்டஸ்ட்ரீஸ், டெரெக்ஸ், வெக் மற்றும் பிரெஸ்டீஜ் ஆகிய நிறுவனங்களால், ஓசூர் பொது பொறியியல் தொகுப்பாக உருப்பெற்றுள்ளது. கே.பிஆர் மில்ஸ், பிரீமியர் பாலிவீவ், ஸ்ரீ கண்ணபிரான் மில்ஸ், அமர்ஜோதி ஸ்பின்னிங் மில்ஸ், ஜேஜே மில்ஸ் ஆகிய நிறுவனங்களினால், பெருந்துறை ஜவுளித் தொகுப்பாக உருப்பெற்றுள்ளது. கெம்ப்ளாஸ்ட், கடலூர் வினைல்ஸ், டான்ஃபாக், டாக்ரோஸ், டாடா

கெமிக்கல்ஸ் மற்றும் பிற நிறுவனங்கள் கடலூர் வேதி பொருள் தொழில் தொகுப்பாக உருவாக உறுதியான அடித்தளமிட்டுள்ளது. பெருமளவிலான சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், இராணிப்பேட்டை தோல் தொழில் தொகுப்பாக (Leather Cluster) வளர்ச்சியடைவதில் முக்கிய பங்களித்துள்ளது.

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், சின்டெல் இன்டர்நேஷனல், காக்னிஸன்ட் டெக்னாலஜி சொலுஷன்ஸ், ஹெக்ஸாவேர் டெக்னாலஜீஸ், ஐகேட் குளோபல் சொலுஷன், ரிலையன்ஸ் ஜியோ இன்ஃபோகாம் போன்ற நிறுவனங்கள் அமையப் பெற்றதால் ஒரு முன்னோடி தகவல் தொழில்நுட்ப தொகுப்பாக சிறுசேரி உருப்பெற்றுள்ளது. மேலும், இப்பூங்கா, நேஷனல் பேமென்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா, சிஃபி இன்பினிட் ஸ்பேசஸ், நெக்ஸ்ட்ரா டேட்டா, டிசி டெவலப்மென்ட் சென்னை, டெக்னோ இன்ஃப்ரா டெவலப்பர்ஸ், ஈக்வினிக்ஸ் இந்தியா மற்றும் எஸ்டிடி குளோபல் டேட்டா சென்டர்ஸ் இந்தியா போன்ற நிறுவனங்கள்

அமையபெற்றுள்ளதால் பெரும் தரவு மையமாகவும் உருவாகி வருகிறது.

சிப்காட் தொழிற்பூங்காக்களில் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு முன்னணி தொழில் நிறுவனங்களான, செயின்ட் கோபெய்ன், அப்பல்லோ டயர்ஸ், அல்லிசன் ட்ரான்ஸ்மிஸ்ஸன், டெல்பி ஆட்டோமோடிவ், மிச்சலின் இந்தியா, ஏடிசி டயர்ஸ், மஹிந்திரா அண்டு மஹிந்திரா, டெல்டா எலக்ட்ரானிக்ஸ், மைலான் லேபரட்டரீஸ், டிபி சோலார், எஃப்.எஸ். சோலார், டான்ஃபாஸ் இண்டஸ்ட்ரீஸ், ஓலா எலக்ட்ரிக் டெக்னாலஜீஸ், ஆட்டோலிவ் இன்ஃப்ளேட்டர்ஸ், கிரேசிம் இண்டஸ்ட்ரீஸ், பிரிட்டானியா இண்டஸ்ட்ரீஸ், சுந்தரம் க்ளேடன், லூகாஸ் டி.வி.எஸ், பிசிபிஎல் (த.நா), ஸ்கேஃப்ளர் இந்தியா, அமரராஜா பேட்டரீஸ், சென்சுரி பிளைபோர்ட்ஸ் இந்தியா மற்றும் பல நிறுவனங்கள் அமையப்பெற்றுள்ளதால், சிப்காட் நிறுவனம் பெருமிதம் கொள்வதுடன், மாநிலத்தின் நிலையான முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு முக்கிய பங்களித்துள்ளது.

2023-2024ஆம் ஆண்டில், வின்ஃபாஸ்ட் ஆட்டோ இந்தியா பிரைவேட் லிமிடெட் உட்பட சைலோசுஸீ மற்றும் ஒன்வெப் இந்தியா கம்யூனிகேசன்ஸ் ஆகிய புதிய நிறுவனங்களை தூத்துக்குடி மாவட்டத்தில் தமது திட்டங்களை நிறுவிட சிப்காட் நிறுவனம் வரவேற்றது. மேலும், கள்ளக்குறிச்சி மாவட்டம் எ.சாத்தனூர் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ஹைகுளோரி ஃபுட்வேர், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டியில் ராம்கிருஷ்ணா டிட்டாகர்ஹ் ரெயில் வீல்ஸ், பெரம்பலூர் மாவட்டம் எறையூர் மற்றும் பாடலூரில் பீனிக்ஸ் கோத்தாரி ஃபுட்வேர், கோயம்புத்தூர் மாவட்டம், கூலநாயக்கன்பட்டியில் விவிடிஎன் டெக்னாலஜீஸ் போன்ற நிறுவனங்கள் வரப்பெற்றுள்ளன.

## 2.2 நில வங்கி

வருங்கால முதலீட்டாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய, சிப்காட் நிறுவனம் 45,000 ஏக்கர் நில வங்கியை உருவாக்கி வருகிறது. தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய மாவட்டங்களுக்கு

முக்கியத்துவம் அளித்து இந்நில வங்கி உருவாக்கப்பட்டு வருகிறது.

### 2.2.1 வரவிருக்கும் தொழிற்பூங்காக்களின் நில விவரம்

நில வங்கியை உருவாக்குவதன் ஒரு பகுதியாக, பின்வரும் சிப்காட் தொழிற் பூங்காக்களுக்கான நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது:

| வ. எண் | தொழிற்பூங்கா / திட்டம் | மாவட்டம் | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1. | இ. வேலாயுதபுரம் | தூத்துக்குடி | 355.16 |
| 2. | அதகபாடி நிலை– I | தருமபுரி | 1,733.03 |
| 3. | அதகபாடி நிலை–II | தருமபுரி | 689.83 |
| 4. | இ. குமாரலிங்கபுரம் நிலை–I | விருதுநகர் | 1,500.09 |
| 5. | இ. குமாரலிங்கபுரம் நிலை–II | விருதுநகர் | 581.14 |
| 6. | இலுப்பைக்குடி | சிவகங்கை | 775.79 |
| 7. | அ. மணக்குடி | இராமநாதபுரம் | 224.65 |
| 8. | சக்கரக்கோட்டை | இராமநாதபுரம் | 312.64 |
| 9. | கங்கைகொண்டான் (விரிவாக்கம்) | திருநெல்வேலி | 1,664.73 |
| 10. | அல்லிக்குளம் | தூத்துக்குடி | 2,233.87 |
| 11. | தொழிற்துறை புறம்போக்கு நிலம் | தூத்துக்குடி | 227.67 |
| 12. | வல்லப்பாக்கம் | காஞ்சிபுரம் | 118.64 |
| 13. | பனப்பாக்கம் | இராணிப்பேட்டை | 1213.43 |

| | | | |
|---|---|---|---|
| 14. | மாநல்லூர் (விரிவாக்கம்) | திருவள்ளூர் | 2,433.39 |
| 15. | மேல்மா | திருவண்ணாமலை | 3,174.33 |
| 16. | சூளகிரி (விரிவாக்கம்) | கிருஷ்ணகிரி | 1,918.27 |
| 17. | குருபரப்பள்ளி (விரிவாக்கம்) | கிருஷ்ணகிரி | 23.67 |
| 18. | நாகமங்கலம் | கிருஷ்ணகிரி | 1,440.90 |
| 19. | வண்டுவாஞ்சேரி | நாகப்பட்டினம் | 250.00 |
| 20. | மதுரமங்கலம் | காஞ்சிபுரம் | 422.35 |
| 21. | சேலம் ஜவுளிப் பூங்கா | சேலம் | 110.53 |
| | **மொத்தம்** | | **21,404.11** |

## 2.2.2 தெரிவு செய்யப்பட்டுள்ள நிலங்கள்

புதிய தொழிற் பூங்காக்களை ஏற்படுத்துவதற்கு சிப்காட் நிறுவனம் கீழ்காணும் இடங்களில் நிலங்களை தெரிவு செய்துள்ளது:

| வ. எண். | தொழிற்பூங்கா / திட்டம் | மாவட்டம் | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1. | வேம்பூர் | தூத்துக்குடி | 2,813.98 |
| 2. | காட்டுப்பள்ளி | திருவள்ளூர் | 768.80 |
| 3. | கொடூர் | செங்கல்பட்டு | 248.98 |
| 4. | அகத்தாகுளம் | விருதுநகர் | 924.53 |
| 5. | மகிமண்டலம் | வேலூர் | 316.73 |
| 6. | நாகமங்கலம் (விரிவாக்கம்) | கிருஷ்ணகிரி | 1,593.12 |
| 7. | நாமக்கல் | நாமக்கல் | 806.29 |
| 8. | தலைவாசல் | கள்ளக்குறிச்சி | 724.23 |
| 9. | கழனிவாசல் | சிவகங்கை | 101.46 |

| | | | |
|---|---|---|---|
| 10. | கரூர் | கரூர் | 214.88 |
| 11. | கரடிபுத்தூர் | திருவள்ளூர் | 3,027.61 |
| 12. | தெற்குவீரபாண்டியபுரம் | தூத்துக்குடி | 1,089.83 |
| 13. | செங்கிப்பட்டி | தஞ்சாவூர் | 311.07 |
| 14. | ஜெயங்கொண்டசோழபுரம் | அரியலூர் | 133.79 |
| 15. | தல்லாகுளம் | மதுரை | 14.49 |
| 16. | வஞ்சிநகரம் | மதுரை | 278.26 |
| 17. | மீளவிட்டான் | தூத்துக்குடி | 191.76 |
| 18. | இலந்தைபட்டி | திருச்சிராப்பள்ளி | 150.66 |
| 19. | பாடலூர் (கூடுதல் நிலம்) | பெரம்பலூர் | 81.27 |
| 20. | தொழிற்துறை புறம்போக்கு கூடுதல் நிலம் | தூத்துக்குடி | 34.71 |
| 21. | வெங்காரம்பேரையூர் | திருவாரூர் | 101.38 |
| 22. | எச்சூர் | காஞ்சிபுரம் | 741.92 |
| | | **மொத்தம்** | **14,669.75** |

## 2.3 நில ஒதுக்கீடு ஊக்கத்தொகை

தமிழ்நாடு அரசின் தொழில் கொள்கை 2021ன்படி, சிப்காட் நிறுவனம், "C" பிரிவு மாவட்டங்களில் நிலத்தின் விலையில், 50 சதவிகிதம் குறைத்து முன்னரே வழங்கப்படும் (front ended) ஊக்கத்தொகையாகவும், "A" மற்றும் "B" பிரிவு மாவட்டங்களில், நிலத்தின் விலையில் 10 சதவிகிதம் மீளப் பெறும் (back ended) ஊக்கத்தொகையாகவும் வழங்கி நில ஒதுக்கீடு செய்து வருகிறது.

## 2.4 குறிப்பிட்ட துறை சார்ந்த தொழிற் பூங்காக்கள்

### 2.4.1 சர்வதேச அறைகலன் பூங்கா

சிப்காட் நிறுவனம் தூத்துக்குடியில் 1130.80 ஏக்கர் பரப்பளவில் (நிலை–I&II – 957.56 ஏக்கர், நிலை–III–173.24 ஏக்கர்), ரூ.1000 கோடி திட்ட மதிப்பீட்டில் சர்வதேச அறைகலன் பூங்காவை அமைப்பதில் நாட்டிலேயே முன்னோடியாக உள்ளது. இப்பூங்காவானது கணிசமான வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையில் ஏற்றுமதி சார்ந்த அறைகலன் உற்பத்தி நிறுவனங்களை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். சிப்காட் நிறுவனம் இதுவரை 126 ஏக்கர் நிலத்தை 3 நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பூங்காவிற்கான பெருந்திட்டம் முடிக்கப்பெற்று, சாலைகள், தண்ணீர் வசதி உள்ளிட்ட முக்கிய உள்கட்டமைப்பு பணிகள் ரூ.279.62 கோடி ரூபாயில் சிறுதொழில் மேம்பாட்டு வங்கியின் (SIDBI) நிதி உதவியுடன் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**2.4.2 மருத்துவ சாதனங்கள் பூங்கா**

மருத்துவ சாதனங்கள் மற்றும் தொழில்நுட்ப துறையானது வளர்ந்துவரும் துறையாக (Sunrise sector) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு ஒரு விரிவான தொழில் சூழலை உருவாக்க சிப்காட் நிறுவனம் காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம் சிப்காட் தொழிற்பூங்காவில் மருத்துவ சாதனங்கள் பூங்கா ஒன்றினை 350 ஏக்கர் பரப்பளவில், ஒன்றிய அரசின் ரூ.100 கோடி மானியத்துடன், உருவாக்கி வருகிறது. ஒன்றிய அரசின் மருத்துவ சாதனப் பூங்காவை உருவாக்கும் திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெற்ற நான்கு பூங்காக்களில் இப்பூங்காவும் ஒன்றாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதல் நில ஒதுக்கீட்டு ஆணையினை ஜென்யூன் பயோ சிஸ்டம் பி. லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு 6.7.2022 அன்று வழங்கினார். இதுவரை 39 ஏக்கர் நிலம் 20 நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முக்கிய உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், தண்ணீர் வசதி மற்றும் பிற பணிகள் ரூ.212.40 கோடி மதிப்பீட்டில் சிறுதொழில் மேம்பாட்டு

வங்கியின் (SIDBI) நிதியுதவியுடன் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இப்பூங்காவில் பொது உள்கட்டமைப்பு வசதிகளான Electromagnetic Interference (EMI) / Electromagnetic Compatibility (EMC) மையம், சேமிப்பு கிடங்குகள், குளிர்சாதன வசதி, முப்பரிமாண முன்மாதிரி மையம், அளவுதிருத்த மையம், சோதனை மையம், உலோக பூச்சு வசதி, நுண்ணுயிரியல் ஆய்வகம் மற்றும் காமா கதிர்வீச்சு மையம் போன்ற வசதிகள் அமையப்பெறும்.

### 2.4.3 மின்னணு தயாரிப்பு தொகுப்பு

சிப்காட் நிறுவனம் இரண்டு மின்னணு தயாரிப்பு தொகுப்புகளை (i) மாநல்லூரில் 474 ஏக்கர் பரப்பளவிலும் (ii) பிள்ளைப்பாக்கத்தில் 379 ஏக்கர் பரப்பளவிலும் உருவாக்க முனைந்துள்ளது. ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகத்தின், மின்னணு தயாரிப்பு தொகுப்புகள் (EMC) 2.0 திட்டத்தின் கீழ், ரூ.328.35 கோடி மானியத்துடன் மாநல்லூரிலும், ரூ.220.78 கோடி மானியத்துடன் பிள்ளைப்பாக்கத்திலும் இம்மின்னணு தயாரிப்பு தொகுப்புகள் நிறுவப்படும்.

மாநல்லூர் மின்னணு தயாரிப்பு தொகுப்பில், முன்னோடி நிறுவனமான வோல்டாஸ் நிறுவனத்திற்கு 150 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது போன்று பிள்ளைப்பாக்கம் மின்னணு தயாரிப்பு தொகுப்பில், முன்னோடி நிறுவனமான எஃப் எஸ் சோலார் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் உட்பட 4 நிறுவனங்களுக்கு 276 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மின்னணு தயாரிப்பு தொகுப்புகளில் அதற்கு தேவையான முக்கிய மற்றும் பொது உள்கட்டமைப்பு வசதிகள் உள்ளடக்கிய தொழில் சூழலை உருவாக்கி மின்னணு உற்பத்தி நிறுவனங்களை கொண்டு ஒருங்கிணைந்த தயாரிப்பு தொகுப்பு அமையப்பெறும்.

### 2.4.4 மாபெரும் உணவுப்பூங்காக்கள்

மாநிலத்தில் உணவுசார் உற்பத்தி நிறுவனங்களை ஊக்குவிக்கும் நோக்கில் மணப்பாறை (138 ஏக்கர்), திண்டிவனம் (158 ஏக்கர்) மற்றும் தேனி (152 ஏக்கர்) ஆகிய மூன்று உணவுப் பூங்காக்களை சிப்காட் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

இவ்வுணவுப்பூங்காக்கள் ஒன்றிய அரசின் உணவு தயாரித்தல் மற்றும் பதப்படுத்தும் துறையால் மாபெரும் உணவுப் பூங்காக்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இப்பூங்காக்களில் ரூ.348.38 கோடி மதிப்பீட்டில் சாலைகள், தண்ணீர் வசதி மற்றும் பிற அடிப்படைக் கட்டமைப்புகள் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மணப்பாறை உணவுப்பூங்கா உள்ளிட்ட சிப்காட் தொழிற்பூங்காவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று திறந்து வைத்து, முதல் நில ஒதுக்கீட்டு ஆணையை வழங்கினார். இந்த மாபெரும் உணவுப் பூங்காக்களில் அகலமான சாலைகள், தண்ணீர் வசதி, தெரு விளக்குகள், மழைநீர் வடிகால் போன்ற முக்கிய உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகளான வகைப்படுத்துதல் மற்றும் வரிசைப்படுத்துதல், குளிர் சேமிப்புக் கிடங்கு, தனிப்பட்ட விரைவான உறைதல், கட்டுப்படுத்தப்பட்ட வளிமண்டல சேமிப்பு, கூழ் தயாரிப்பு, சேமிப்பு கிடங்கு, பயன்பாட்டு வசதிகள், ஆய்வகம், பொருட்கள்

கையாளும் உபகரணங்கள் போன்றவை பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து உருவாக்கப்படும். இந்த உணவுப் பூங்காக்களில் இதுவரை, 53 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.4.5 வருங்கால நகர்திறன் பூங்கா மற்றும் மின்வாகனப் பூங்கா

சுற்றுச் சூழலை நீடித்து பாதுகாக்கும் வகையிலும், நவீன போக்குவரத்துக்கு தீர்வு காணும் வகையிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி சிப்காட் தொழிற்பூங்காவில், ரூ.300 கோடி திட்ட மதிப்பீட்டில், வருங்கால நகர்திறன் பூங்கா ஒன்றினை 300 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இதுவரை, 13.43 ஏக்கர் நிலம் 5 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முக்கிய உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், தண்ணீர் வசதி, மழைநீர் வடிகால் வசதி ஆகியன நிறுவப்பட்டு வருகிறது.

சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகளான மின் வாகனங்களுக்கான இருவழி சோதனைப் பாதை / ட்ரோன்கள் / தானியங்கி வாகனங்கள், ஆராய்ச்சி மற்றும் சோதனை வசதி, ஆயத்த தொழிற்கூட வசதி,

பகிரப்பட்ட சேமிப்புப் பட்டியல், வணிக மையம், கலாச்சார மையம், செவிலியர் மையம், குழந்தைகள் பராமரிப்பு மையம் மற்றும் பிற வசதிகள், அனைத்து பயன்பாட்டாளர்களின் நலனுக்காக பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்படும்.

மேலும், மின் வாகனத் துறையில் புதிய முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில், சிப்காட் நிறுவனம் மாநல்லூரில் 300 ஏக்கர் பரப்பளவில், கூடுதலாக மின் வாகனப் பூங்கா ஒன்றை அமைத்து வருகிறது.

### 2.4.6 மாபெரும் காலணி மற்றும் துணைப்பொருட்கள் தொகுப்பு

சிப்காட் நிறுவனம், பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் 348 ஏக்கர் பரப்பளவில், (201 ஏக்கர் சிறப்பு பொருளாதார மண்டலம் உட்பட) மாபெரும் காலணி மற்றும் துணைப்பொருட்கள் தொகுப்பு ஒன்றினை அமைத்து வருகின்றது. இத்திட்டம் ரூ.271.33 கோடி மதிப்பீட்டில் ஒன்றிய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்தும் துறையின் (DPIIT) ரூ.125 கோடி

மானியத்துடன் நிறுவப்படும். சாலைகள், தண்ணீர் வசதி, மழைநீர் வடிகால் ஆகிய முக்கிய உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இப்பூங்காவில் ஆயத்த தொழிற்கூடங்கள், சேமிப்பு கிடங்குகள், வர்த்தக மையம், பொருள் வடிவமைப்பு மையம், பரிசோதனைக்கூடம் மற்றும் பிற வசதிகள் அமைக்கப்படும். தைவான் நாட்டின் ஹோங் ஃபூ இன்டஸ்டிரியல் குரூப் நிறுவனத்திற்கு 130 ஏக்கர் நிலம் கொள்கை ரீதியில் ஒதுக்கீட்டு ஆணை 3.4.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது.

**2.4.7 பிஎம் மித்ரா பூங்கா**

இந்தியாவிலேயே ஜவுளி மற்றும் ஆடை தயாரிக்கும் தொழில் நிறுவனங்களில் முன்னோடி மாநிலமாகத் திகழும் தமிழ்நாடு, இந்தியாவின் ஒட்டுமொத்த ஜவுளி மற்றும் ஆடை உற்பத்தியில் 30 சதவிகித தொழில் வளத்தினை தன்னகத்தே கொண்டுள்ளது. விருதுநகரில் மாபெரும் ஜவுளிப் பூங்காவினை அமைத்திட ஒன்றிய அரசு தமிழ்நாட்டினை பிஎம் மித்ரா திட்டத்தின் கீழ் தேர்வு செய்துள்ளது. இந்தியாவின் முதல் பிஎம் மித்ரா

பூங்காவினை விருதுநகரில் தொடங்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசிற்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 22.03.2023 அன்று மேற்கொள்ளப்பட்டது. சிப்காட் நிறுவனம் 1,052 ஏக்கர் நிலத்தினை இப்பூங்காவிற்காக ஒதுக்கியுள்ளது. இப்பூங்காவானது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கூட்டுத் திட்டமாக, ரூ.2,000 கோடி மதிப்பீட்டில் ஒன்றிய அரசின் ரூ.500 கோடி மானியத்துடன் ஏற்படுத்தப்படும். இப்பூங்காவின் மூலம் சுமார் 2 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். இப்பூங்கா தென் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும். "பிஎம் மெகா இன்டக்ரேட்டட் டெக்ஸ்டைல் ரீஜியன்ஸ் & அப்பேரல் பார்க் தமிழ்நாடு லிமிடெட்" என்ற பெயரில் சிறப்பு நோக்க முகமை 20.02.2024 அன்று ஏற்படுத்தப்பட்டது.

இப்பூங்காவில் தொழில் தொடங்க, தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் மற்றும் துணிநூல் துறை மூலமாக 11 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு

ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ரூ.1,231 கோடி முதலீடும் 6,315 நபர்களுக்கு வேலை வாய்ப்பும் உருவாக்கப்படும்.

### 2.5 சிறப்பு முன்னெடுப்புகள்

நிலையான தொழில் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப சிப்காட் நிறுவனம் பல்வேறு சிறப்பு திட்டங்கள் வாயிலாக தன்னுடைய சேவைகளின் நோக்கத்தை விரிவுபடுத்தியும் பன்முகத்தன்மையுடன் மேற்கொண்டு வருகிறது.

#### 2.5.1 தொழில் பயிற்சி மற்றும் பாதுகாத்து வளர்த்தல்

#### (அ) நான் முதல்வன் திட்ட முன்னெடுப்பு

சிப்காட் நிறுவனம், நான் முதல்வன் திட்ட முன்னெடுப்புகள் குறித்து அதன் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்கள் அனைத்துக்கும் தெரிவித்து, அவர்களின் தொழிற்கூடங்களிலுள்ள காலி பணியிடங்கள் / தொழிற் பயிற்சிக்கான வாய்ப்பு குறித்த தகவல்களை நான் முதல்வன் திட்ட இணைய முகப்பில் பதிவேற்றம் செய்வதன் மூலம்

அத்தொழில் நிறுவனங்களும், இளைஞர்களும் மற்றும் வேலை தேடுபவர்களும் பயனடைய வழிவகை செய்து வருகின்றது. சிப்காட் நிறுவனத்தின் இத்தொடர் முயற்சியால், இளைஞர்கள் வாழ்வு மேம்படுவதோடு, பொருளாதார வளர்ச்சியும் ஏற்படுகின்றது.

**(ஆ) சிப்காட் தொழில் புத்தாக்க மையம்**

சிப்காட் தொழில் புத்தாக்க மையங்கள் (SIIC) ஓசூர் மற்றும் திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற் பூங்காக்களில் ரூ.33.46 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு மாநில திட்டக் குழுவின் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் (TANII) திட்டத்தின்கீழ் மானியமாக பெறப்பட்ட ரூ.14.20 கோடியில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையங்கள், தொழில் புத்தாக்கங்களும், தொழில்நுட்பங்களும் கொண்டு தொழில் முனைவோரின் இயக்கங்களை, உலகளாவிய தரத்தில் பாதுகாத்து வளர்த்து விரைவாக செயல்பட வழிவகை செய்யும் மையங்களாக திகழ்கின்றன. இம்மையங்கள் உயர் தொழில்நுட்பத் துறைசார் தொழில்களை தமிழ்நாட்டில் மேம்படுத்திடவும்,

உற்பத்தித் திறனை பலப்படுத்தவும், சந்தையில் போட்டியிடும் தன்மையை வலுப்படுத்தவும் உதவிகரமாக உள்ளது.

இந்த மையங்கள் ஒவ்வொன்றும் 23,500 சதுர அடி கொண்ட கட்டிடங்களாக உருவாக்கப் பட்டுள்ளது. இம்மையங்களில், புதுமையாளர்கள் / புத்தொழில் தொடங்குபவர்கள் (Start – Ups) கூட்டாகப் பணிபுரியும் இடம் மற்றும் தொழில் 4.0 உபகரணங்கள், தயாரிப்புகள் மேம்பாட்டு மையம், முன்மாதிரி தயாரிப்பு வசதி (proto typing) மற்றும் பயிற்சி நிலையம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்கள் வாயிலாக 1000–க்கும் மேற்பட்ட புதுமையான சிந்தனைகள், 200–க்கும் மேற்பட்ட முன்மாதிரி தயாரிப்பு மற்றும் 30–க்கும் மேற்பட்ட புத்தொழில் தொடங்குபவர்களை ஊக்குவித்து தொழில் முனைவோர்களாக உருவாக்கிட சிப்காட் நிறுவனம் முனைந்துள்ளது.

இப்புத்தாக்க மையங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 24.06.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டன. கோயம்புத்தூர்

இன்னோவேஷன் மற்றும் பிசினஸ் இன்குபேட்டர் (Coimbatore Innovation and Business Incubator) நிறுவனம் தொழிநுட்ப பங்குதாரராக நியமிக்கப்பட்டு இப்புத்தாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுவரை, ஓசூர் புத்தாக்க மையத்தில் 11 புத்தொழில் தொடங்குபவர்களும், திருப்பெரும்புதூர் புத்தாக்க மையத்தில் 6 புத்தொழில் தொடங்குபவர்களும், இம்மையங்களில் உள்ள வசதிகளைப் பயன்படுத்த தொடங்கியுள்ளனர். மேலும், பல புத்தொழில் தொடங்குபவர்களும் இந்த வசதி மீது ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மேலும், சிப்காட் நிறுவனம், மதுரையில் புத்தொழில் தொடங்குபவர்களுக்கு தொழில்நுட்பம் சார்ந்த புத்தாக்க மையத்தை ரூ.24 கோடி மதிப்பீட்டில் நிறுவும் நடவடிக்கையில் உள்ளது.

சிப்காட் நிறுவனம், மாநிலத்தின் மூன்றாவது பெரிய தொழில் தொகுப்பான கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் ரூ.80 கோடி மதிப்பீட்டில் அதிநவீன திறன் மேம்பாட்டு மையத்தை நிறுவி

வருகிறது. இத்திட்டம் சிறப்பு நோக்க முகமை மூலம் நெட்டூர் தொழில்நுட்பப் பயிற்சி அறக்கட்டளையுடன் (NTTF) இணைந்து செயல்படுத்தப்படுகிறது. ரூ.34.53 கோடி மதிப்பிலான கட்டிடங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பிப்ரவரி 2025க்குள் பணிகள் முடிவுறும்.

### 2.5.2 புதிய ரக உள்கட்டமைப்பு வசதிகள்

#### (அ) தொழிலாளர் தங்குமிட வசதி

பாதுகாப்பான, தரமான, தங்குமிட வசதிகளை தொழிலாளர்களுக்கு ஏற்ற வகையில் வழங்குவது தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. மேலும், கொரோனா பெருந்தொற்று இந்த தேவையின் முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளது. சிப்காட் நிறுவனம் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்துடன் (TNIFMC) இணைந்து தமிழ்நாடு தொழிலாளர் குடியிருப்பு நிறுவனம் (TNIHPL) என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்கு முகமையினை ஏற்படுத்தி, அதன் மூலம் தொழிற்சாலை பணியாளர்களுக்கு நிலையான மற்றும் ஏற்ற வகையில் தங்குமிட வசதிகளை

உருவாக்கி வருகிறது. தற்போது, தமிழ்நாடு தொழிலாளர் குடியிருப்பு நிறுவனம், பணிபுரியும் மகளிருக்காக, சிப்காட் சிறுசேரி தொழிற் பூங்காவில் 807 படுக்கை வசதிகளுடன் கூடிய ஒரு தங்கும் விடுதியை உருவாக்கி வருகிறது. மேலும், தொழிலாளர் தங்குமிட வசதி திட்டத்தை மாநிலத்தில் பரவலாக ஏற்படுத்த ஏதுவான இடங்களை, இந்த சிறப்பு நோக்க முகமை அடையாளம் கண்டு வருகிறது.

மேலும், சிப்காட் நிறுவனம் நேரடியாக வல்லம்–வடகால் தொழிற்பூங்காவில் ரூ.706.50 கோடி திட்ட மதிப்பீட்டில் 18,720 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் தங்குமிட வசதியினை, ஒன்றிய அரசின் குறைந்த வாடகை வீட்டு வளாகம் (ARHC) திட்டத்தின்கீழ் பெறப்படும் ரூ.37.44 கோடி மானியம் மற்றும் பாரத ஸ்டேட் வங்கியிடமிருந்து ரூ.498 கோடி காலக்கடன் கொண்டும் ஏற்படுத்தி வருகிறது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

மேலும், சிப்காட் நிறுவனம் மற்றும் அதன் சிறப்பு நோக்க முகமை பின்வரும் தொழிற்பூங்காக்களில் தனிப்பட்ட தங்குமிட வசதிகளை ஏற்படுத்தி வருகின்றன:

| வ. எண். | தொழிற்பூங்கா | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | படுக்கை எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பெருந்துறை (மகளிர்) | 7.91 | 222 |
| 2. | தூத்துக்குடி (மகளிர்) | 6.92 | 252 |
| 3. | சூளகிரி (ஆடவர் மற்றும் மகளிர்) | 49.00 | 1495 |
| 4. | இருங்காட்டுக்கோட்டை (ஆடவர்) | 26.69 | 801 |
| 5. | செய்யாறு (ஆடவர்) | 13.54 | 441 |

இதற்கு முன்பாக, சிப்காட் நிறுவனம் மூன்று தங்கும் விடுதிகள் – (i) இருங்காட்டுக்கோட்டையில் மகளிர் தங்கும் விடுதி (330 நபர்கள்) (ii) திருப்பெரும்புதூரில் ஆடவர் தங்கும் விடுதி (400 நபர்கள்) (iii) திருப்பெரும்புதூரில் மகளிர் தங்கும் விடுதி (600 நபர்கள்) உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

மேலும், சிப்காட் நிறுவனம் திருப்பூர் மாவட்டத்தில் நெருப்பெரிச்சல் கிராமத்தில் ரூ.8.58 கோடி மதிப்பீட்டில் மகளிர் தங்கும் விடுதியொன்றை (600 நபர்கள்) சமூக பொறுப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக ஏற்படுத்தி பயன்பாட்டில் உள்ளது. இத்துடன் இதே இடத்தில் ரூ.10.18 கோடி மதிப்பீட்டில் சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்தவர்களுக்காக 400 நபர்கள் தங்கும் விடுதி, சமூக பொறுப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 06.07.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**(ஆ) சரக்கு வாகன நிறுத்தும் வசதிகள்**

தொழிற்சாலைகளின் சரக்கு வாகனங்கள் தடையின்றி எளிதாக இயங்கிடவும், அவற்றை நிறுத்த ஏதுவாகவும், சிப்காட் நிறுவனம், 13 தொழிற்பூங்காக்களான இருங்காட்டுக்கோட்டை, வல்லம்–வடகால், ஒரகடம், இராணிப்பேட்டை, பெருந்துறை, திருப்பெரும்புதூர், நிலக்கோட்டை, கங்கைகொண்டான், பிள்ளைப்பாக்கம், கும்மிடிப்பூண்டி, சிறுசேரி, செய்யாறு மற்றும் தேர்வாய்கண்டிகையில்

ரூ.72.39 கோடி மொத்த மதிப்பீட்டில், 1,898 சரக்கு வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதிகளை (Truck Parking Facilities) உருவாக்கியுள்ளது. மேலும், ஓசூர் தொழிற் பூங்காவில் இந்த வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளது.

**(இ) ஆயத்த தொழிற் கூட வசதிகள்**

நவீன உற்பத்தி முறையானது, ஆரம்ப நிலையிலிருந்து கட்டிடங்களை கட்டி, இயந்திரங்களை நிறுவி தொழிற்கூடங்களை துவக்கும் முறையிலிருந்து, ஆயத்த நிலையிலுள்ள தொழிற்கூடங்களில் இயந்திரங்களை நிறுவி உடனடியாக வணிக உற்பத்தியை மிக விரைவில் தொடங்குவதில் கவனத்தை திருப்பியுள்ளது. பெருந்துறை மற்றும் வல்லம் வடகால் ஆகிய சிப்காட் தொழிற்பூங்காக்களில் 50,000 சதுரஅடி மற்றும் 1,50,000 சதுரஅடி பரப்பளவில் ஆயத்த தொழிற்கூட வசதிகள் மற்றும் ஒரகடம் தொழிற்பூங்காவில் 1,00,000 சதுரஅடி பரப்பளவில் சேமிப்புக் கிடங்கு வசதியை உருவாக்க ரூ.85.20 கோடி மொத்த மதிப்பீட்டில் துரித தொழில்

வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட வசதிகள் ஒன்றிய அரசின் வணிகவியல் மற்றும் தொழில் துறையின் ஏற்றுமதிக்கான வர்த்தக உள்கட்டமைப்புத் திட்டத்தின் (TIES) கீழ் பெறப்படும் நிதியுதவியான ரூ.34.45 கோடி மானியத்துடன் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

### 2.5.3 பசுமை மற்றும் நிலைத்த முன்னெடுப்புகள்

**(அ) மூன்றாம் நிலை எதிர்சவ்வூடு முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் திட்டம் (TTRO Plant)**

நீர் நிலைகளைப் பாதுகாப்பதுடன், நிலத்தடி நீர் குறையாமல் இருப்பதை உறுதி செய்ய, சிப்காட் நிறுவனம் மூன்றாம் நிலை எதிர்சவ்வூடு முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீரை (TTRO) தொழில் நிறுவனங்கள் பயன்படுத்த ஊக்குவித்து வருகிறது. அதன்படி, இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர், ஒரகடம், பிள்ளைப்பாக்கம் மற்றும் வல்லம் வடகால் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு, கோயம்பேட்டில் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று

வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆலையின் மூலமாக சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்படுகிறது.

மேலும், ஓசூர் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக, சிப்காட் நிறுவனம், ரூ.182.19 கோடி திட்ட மதிப்பீட்டில் கௌவரப்பள்ளியில் நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட மூன்றாம் நிலை எதிர்சவ்வூடு முறையில் சுத்திகரிக்கும் ஆலையை சிறுதொழில் மேம்பாட்டு வங்கியின் (SIDBI) ரூ.104.99 கோடி நிதியுதவியுடன் இரண்டு கட்டங்களாக நிறுவி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டத்திற்கு 13.06.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் செப்டம்பர் 2024–க்குள் முடிக்கப்படும்.

**(ஆ) கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் (Desalination Plant)**

சிப்காட் நிறுவனம் தூத்துக்குடி மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையைக் கருத்தில் கொண்டு நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் ஆலையை தூத்துக்குடி முள்ளக்காடு கிராமத்தில் அமைக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. இதற்குண்டான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரித்து இத்திட்டத்தை ரூ.975.47 கோடி திருத்தப்பட்ட திட்ட மதிப்பீட்டில் HAM (Hybrid Annuity Model) முறையில் 40 சதவிகிதம் சிப்காட் பங்களிப்புடனும், 60 சதவிகிதம் தனியார் பங்களிப்புடனும் செயல்படுத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரும் பணி நடைபெற்று வருகிறது.

**(இ) தொழிற் பூங்காக்களைப் பசுமையாக்குதல்**

சிப்காட் நிறுவனம், பசுமை முன்னெடுப்பின் மூலம் அதன் தொழிற் பூங்காக்களை பசுமையாகவும்

மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் போதுமான பசுமை மேம்பாடு மற்றும் நன்கு பராமரிக்கப்படும் திறந்தவெளி பகுதிகளை (OSR) உறுதி செய்து வருகிறது. நிலையான சுற்றுச்சூழல் அமைப்பின் வளர்ச்சிக்காக மரக்கன்றுகளை வளர்ப்பதற்கு சிப்காட் நிறுவனம் வனத்துறையுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. இந்த முன்முயற்சியின் ஒரு பகுதியாக சிப்காட் நிறுவனம் மூலம் இதுவரை ரூ.24.84 கோடி செலவில் 5.41 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. 7 தொழிற்பூங்காக்களில் ரூ.6.11 கோடி செலவில் 1.50 இலட்சம் நாட்டு மரக்கன்றுகளை நடும் பணியையும் சிப்காட் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

### 2.5.4 தரவுகளை எளிமையாக அணுகுதல்

**புவியியல் தகவல் முறைமை வரைபடம்** (GIS Mapping) **மற்றும் புவியியல் தகவல் முறைமைக்கான தகவலமைப்பினை** (Geo Data Base) **தயாரித்தல்**

சிப்காட் தொழிற் பூங்காக்களில் ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் எளிதாக தொழில் மனைகளை

தேர்வு செய்திட, பயனீட்டாளர்கள் நட்புடன் கூடிய புவியியல் தகவல் முறைமை (GIS), செயல்பாட்டில் இருந்துவரும் சிப்காட் தொழிற் பூங்காக்கள் தொடர்பான தரவுகளைக் (Database) கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தரவு தளம் ட்ரோன் வழி நில அளவை (Drone Survey), முப்பரிமாணப்படம் (3D Imaging), தொலை உணர்வுத் தளம் (Remote Sensing) உள்ளடக்கிய அதிநவீன தொழில் நுட்பங்களைக் கொண்டு நிறுவப்பட்டுள்ளது. இத்தரவு (Database) சிப்காட் நில ஒதுக்கீட்டு வலைதளத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால், முதலீட்டாளர்கள் தொழிற்பூங்காக்களின் தளவமைப்புகள் / இருப்பில் உள்ள மனை விவரம் குறித்த தகவல்களை இடையூறு அற்ற வகையில் சீராகப் பெறுவதுடன், நில ஒதுக்கீட்டு விண்ணப்பத்தினை எளிதாக சமர்ப்பிக்க இயலும். மேலும், 2023–2024ஆம் நிதியாண்டில் சிப்காட் நிறுவனம் தனது புதிய நில வங்கியில் 3,142.52 ஏக்கருக்கு ட்ரோன் வழி நில அளவையை (Drone Survey) மேற்கொண்டுள்ளது.

**2.5.5 ஏற்றுமதிக்கான வர்த்தக வசதி மையம்**

சிப்காட் சிறுசேரி தொழிற் பூங்காவில் ரூ.34.81 கோடி மதிப்பீட்டில் 2.16 ஏக்கர் நிலப்பரப்பில் 85,000 சதுர அடி கொண்ட கட்டிடத்தில் ஏற்றுமதிக்கான வர்த்தக வசதி மையம் (Export Trade Facilitation Centre) ஒன்றிய அரசின் ஏற்றுமதிக்கான வர்த்தக உள்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் (TIES) ரூ.13.98 கோடி மானியத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 06.07.2022 அன்று இந்த வர்த்தக வசதி மையத்தினை தொடங்கி வைத்தார். இம்மையம், உடன் பணிபுரியும் இடம் (Co–working Spaces), மாநாட்டு அரங்கம் (Convention Centre), ஆலோசனைக் கூடம் (Conference Hall), நிர்வாக குழும கூடங்கள் (Executive Board Rooms), பார்வையாளர்கள் அரங்கம் (Auditorium), உணவகம் (Canteen) போன்ற வசதிகளை கொண்டுள்ளது.

**2.6 அமைப்பு ரீதியிலான தொகுப்பு ஊக்க நிதியுதவி வழங்குவதற்கான முகவாண்மை**

பெருந்தொழில் நிறுவனங்களுக்கு அமைப்பு ரீதியிலான தொகுப்பு ஊக்க நிதியுதவி வழங்கும்

திட்டத்தை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு சிப்காட் நிறுவனத்தை முகவாண்மை அமைப்பாக நியமித்துள்ளது. அரசு ஒப்புதல் வழங்கியபடி சிப்காட் நிறுவனம், இதுவரை 57 தொழில் நிறுவனங்களுக்கு பல்வேறு ஊக்க நிதியுதவியாக ரூ.18,240.97 கோடி வழங்கியுள்ளது.

| **வ. எண்.** | **நிதியுதவியின் வகைப்பாடு** | **வழங்கிய தொகை** (ரூபாய் கோடியில்) 2008–09 முதல் 2023–24 வரை |
|---|---|---|
| 1. | மென்கடன் | 2,312.64 |
| 2. | முதலீட்டு மேம்பாட்டு உதவித் தொகை (மின் உற்பத்தி வாகன உதவித் தொகை உட்பட) | 15,734.72 |
| 3. | மூலதன உதவித் தொகை | 46.33 |
| 4. | சுற்றுச்சூழல் பாதுகாப்பு – கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டத்திற்கான உதவித் தொகை | 8.42 |
| 5. | பயிற்சி உதவித் தொகை | 115.66 |
| 6. | முத்திரைத் தீர்வை திருப்பியளித்தல் | 18.36 |
| 7. | மின்கட்டண வரி திருப்பியளித்தல் | 2.84 |
| 8. | தொழில் கட்டமைப்பு பூங்கா உதவித் தொகை | 2.00 |
| **மொத்தம்** | | **18,240.97** |

**வரவு–செலவு திட்ட ஒதுக்கீடு**

2024–2025ஆம் நிதியாண்டில் ரூ.1,792 கோடி அமைப்பு ரீதியிலான தொகுப்பு சலுகைக்கான நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**2.7 நிதிச் செயல்பாடு**

சிப்காட் நிறுவனம், 2023–2024ஆம் நிதியாண்டில் ரூ.1,493.02 கோடி (தணிக்கை செய்யப்படாதது) அளவிற்கு வணிகம் புரிந்து, ரூ.232.45 கோடி இலாபம் ஈட்டியுள்ளது. சிப்காட் நிறுவனம், 2005–2006 முதல் தமிழ்நாடு அரசுக்கு தொடர்ந்து ஈவுத்தொகை வழங்கி வருகிறது. 2022–2023ஆம் நிதியாண்டில், மிகச்சிறந்த செயல்பாட்டினால், சிப்காட் நிறுவனம், தமிழ்நாடு அரசுக்கு ரூ.75.81 கோடியினை (மூலதனத்தில் 66.40%) ஈவுத்தொகையாக செலுத்தியுள்ளது.

## 3. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), மாநிலத்தில் கூட்டுமுயற்சிகள் மூலம் நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில்களை மேம்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசின் தொழில்துறையின் கீழ் செயல்படுகின்ற தொழில் வளர்ச்சிக்கான ஒரு முகமை நிறுவனமாக 1965ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தற்போது டிட்கோ நிறுவனம் அதன் செயல்பாடுகளை மறுவரையறை செய்யும் பணியில் உள்ளது மற்றும் இந்நிறுவனம் பரந்த அடிப்படையிலான பன்முகப்படுத்தப்பட்ட இலக்குகளையும் கொண்டுள்ளது. மேலும், இந்நிறுவனம் மாநிலத்தின் வளர்ந்துவரும் தொழில்துறை சூழ்நிலைக்கேற்ப செயல்படுகிறது.

### 3.1 தமிழ்நாட்டின் முதலீடுகளை மேற்கொள்ளும் ஒரு நிறுவனம்

டிட்கோ நிறுவனம், மாநிலத்தின் முதலீடுகளை மேற்கொள்கின்ற நிறுவனமாக, தனியார் தொழில் நிறுவனங்களுடனும், மாநில அரசு மற்றும் ஒன்றிய அரசு நிறுவனங்களுடனும் இணைந்து கீழ்க்காணும்

பல்வேறு கூட்டுமுயற்சி முறைகளின் மூலம் திட்டங்களின் முக்கிய தேவைகளுக்கு ஏற்ற வகையில் முதலீடு செய்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறது:–

- துணை நிறுவனம் (டிட்கோவின் பங்கு முதலீடு 50 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல்)
- கூட்டுத்துறை நிறுவனம் (டிட்கோவின் பங்கு முதலீடு 11 சதவிகிதம் முதல் 50 சதவிகிதம் வரை)
- இணைத்துறை நிறுவனம் (டிட்கோவின் பங்கு முதலீடு 2 சதவிகிதம் முதல் 11 சதவிகிதம் வரை)
- ஆதரவு சேவைத்துறை (டிட்கோவின் பங்கு முதலீடு 1 சதவிகிதம் அல்லது பங்கு முதலீடு இல்லை)

டிட்கோ நிறுவனம் உற்பத்தி, உள்கட்டமைப்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவைத்துறை என இதுவரை பல்வேறு துறைகளில் வெற்றிகரமாக 126 கூட்டாண்மை நிறுவனங்களை நிறுவி உள்ளது. இக்கூட்டு நிறுவனங்களின் வழியாக மாநிலத்தில் குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கும், பெரும் முதலீடுகள் ஈர்க்கப்படுவதற்கும், வேலை வாய்ப்புகள் மற்றும்

சிறந்த தொழில் சூழல் உருவாகவும் இந்நிறுவனம் வழிவகை செய்கிறது. டிட்கோ நிறுவனத்தின் முக்கிய கூட்டு நிறுவனங்களில் சில:

**உற்பத்தி வசதி :**

- டைட்டன்
- JSW ஸ்டீல்ஸ்

**வேதிபொருட்கள் மற்றும் பெட்ரோ வேதிப்பொருள் :**

- டான்பேஃக்
- ஸ்பிக்
- தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ்

**பூஞ்செடி வளர்ப்பு தொழில் கூடம் :**

- டான்ஃப்ளோரா இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பார்க்

**தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதை சார்ந்த சேவை துறை :**

- டைடல் பார்க்
- டைடல் பார்க் கோயம்புத்தூர்
- அசென்டாஸ் தகவல் தொழில் நுட்ப பூங்கா
- டிஎல்எஃப் இன்ஃபோ பார்க்

**உயிரி அறிவியல் :**

- டைசல் பயோ பார்க், சென்னை
- டைசல் பயோ பார்க், கோயம்புத்தூர்

**பொதுவான தொழில் உள்கட்டமைப்புகள் :**

- தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் (சென்னை வர்த்தக மையம்)
- மகிந்திரா வேர்ல்டு சிட்டி

**நகர்திறன், போக்குவரத்து மற்றும் சரக்குகளை கையாளுதல் :**

- மெரைன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் டெவலப்பர்ஸ் (காட்டுப்பள்ளி துறைமுகம்)
- தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்
- தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனம்

**எண்ணெய் மற்றும் எரிவாயு :**

- இந்தியன் ஆயில் எல்என்ஜி நிறுவனம்

## 3.2 பல்வேறு துறைகளில் தொழில் மேம்பாடு மற்றும் வளர்ச்சி

தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளிலும் தொழில் மேம்பாடு மற்றும் தொழில் வளர்ச்சியை எட்டுவதற்கு டிட்கோவின் பங்களிப்பு மிக

இன்றியமையாததாக இருக்கிறது. அந்த வகையில் முக்கிய திட்டங்களில் சில பின்வருமாறு :

### 3.2.1 இயக்கவியல் / நகர்திறன் போக்குவரத்து மற்றும் சரக்குகளை கையாளும் துறை சார்ந்தவை

#### 1) சென்னை புதிய விமான நிலையம்

மக்களின் விமானப் போக்குவரத்து வசதிக்காகவும் சரக்குப் போக்குவரத்திற்காகவும் வளர்ந்து வரும் வான்வெளி இணைப்புகளின் தேவையினை பூர்த்தி செய்வதற்காகவும், தமிழ்நாடு அரசு ஒரு விரிவான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி அதற்கேற்றார் போல் ஒரு புதிய விமான நிலையத்தை அமைக்க நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது. ஆண்டுக்கு 100 மில்லியன் பயணிகளை கையாளக் கூடிய வசதிகளுடன் காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் அமையவுள்ள இந்த புதிய விமான நிலையம் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த டிட்கோ நிறுவனத்தை ஒரு "முகமை நிறுவனமாக" அரசு நியமித்துள்ளது.

ஒன்றிய அரசின் புதிய விமான நிலையம் அமைப்பதற்கான கொள்கை மற்றும் வழிமுறைகளின்படி, விமான நிலையம் அமைப்பதற்கான "இட அனுமதி" (Site clearance) கோரும் விண்ணப்பத்தினை மத்திய விமான போக்குவரத்து அமைச்சகத்தின் செயலாக்க குழுவிடம் (Steering Committee) டிட்கோ நிறுவனம் சமர்ப்பித்துள்ளது. தற்போது விமான போக்குவரத்து அமைச்சகத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டதிற்கான விரிவான தொழில்நுட்ப பொருளாதார அறிக்கை தயாரிக்க, ஆலோசகர் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கை, இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் மற்றும் திருப்பெரும்புதூர் வட்டங்களிலுள்ள 20 கிராமங்களில், சுமார் 5,746 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தவும், நில உரிமை மாற்றம் செய்யவும் அரசாணை (நிலை) எண்.210, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, நாள் 31.10.2023–ல் மாநில அரசு நிர்வாக அனுமதியினை வழங்கியுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

**2) விமான நிலையங்கள் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டங்கள்**

தமிழ்நாடு மொத்தம் ஆறு விமான நிலையங்கள் அமையப்பெற்ற பெருமை கொண்டது (இதில் நான்கு சர்வதேச விமான நிலையங்கள் ஆகும்). இவ்விமான நிலையங்களோடு வேலூரில் தொடங்கப்படவுள்ள விமான நிலையமும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதியின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன. மாநிலத்தின் முழுமையான வளர்ச்சியை நோக்கியப் பயணத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் தற்போது உள்ள விமான நிலையங்களின் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் ஆகியவற்றை இந்திய விமான நிலைய ஆணையம் மேற்கொண்டு வருகிறது. இதற்கு நிலங்களின் தேவை மிக அவசியமானதாகும். மாநில அரசு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையால் தேவைப்படும் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, வழங்கப்படும்.

தமிழ்நாடு அரசு ரூ.2782.90 கோடி செலவில் இவ்விமான நிலையங்களை விரிவாக்குவதற்கும் மற்றும் நவீனமயமாக்குவதற்கும் 1810.86 ஏக்கர் பட்டா நிலங்களை கையகப்படுத்தியுள்ளது. மேலும், சுமார் 302.08 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களும் கண்டறியப்பட்டுள்ளன. இதுதவிர, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி விமான நிலையங்களை விரிவாக்கம் செய்வதற்காக சுமார் 315.06 ஏக்கர் நிலங்களை பாதுகாப்பு அமைச்சகத்திடம் இருந்து பெறுவதற்கான நடவடிக்கைகளில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டு வருகிறது.

**3) பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்காக்கள்**

ஒன்றிய அரசின் போக்குவரத்து கொள்கையின் வெளிப்பாடாக, தேசிய நெடுஞ்சாலை சரக்கு போக்குவரத்து மேலாண்மை நிறுவனத்தின் (NHLML) தலைமையில், பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா திட்டம் உருவாக்கப்பட்டது. டிட்கோ, NHLML, சென்னை துறைமுக கழகம் (ChPA), இரயில் விகாஸ் நிகாம் லிமிடெட் (RVNL) ஆகிய நிறுவனங்கள் இணைந்து ஒரு சிறப்பு நோக்க நிறுவனமான

"சென்னை பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா நிறுவனம் (Chennai Multimodal Logistics Park Private Limited)" என்ற நிறுவனம் மூலம், சென்னை அருகே திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மப்பேடு கிராமத்தில் சுமார் 182 ஏக்கர் நிலப் பரப்பில், ரூ.1,423 கோடி திட்ட மதிப்பீட்டில், "பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்காவை" அமைத்து வருகிறது.

**முன்மொழியப்பட்ட பங்களிப்பு முறை பின்வருமாறு:**

| வ. எண். | பங்குதாரர்கள் | முதலீடுகள் (ரூ. கோடியில்) | பங்கு சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | சென்னை துறைமுக கழகம் | 166.78 | 26.02 |
| 2 | TIDCO | 50.00 | 7.80 |
| 3 | RVNL | 166.64 | 26.00 |
| 4 | NHLML | 257.50 | 40.18 |

இத்திட்டத்திற்கு, NHLML, ChPA மற்றும் TIDCO ஆகிய நிறுவனங்கள் 12.10.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா 26.05.2022 அன்று நடைப்பெற்றது.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ரிலையன்ஸ் இன்டஸ்டீரிஸ் லிமிடெட் (RIL) நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான இரயில் இணைப்பை வழங்கும் பொருட்டு சுமார் 88.22 ஏக்கர் நிலங்களை டிட்கோ கையகப்படுத்தி வருகிறது. மேலும், இரயில்வே பணிமனையை (Yard) ஏற்படுத்துவதற்காக, சுமார் 23.79 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்த முன்மொழிந்துள்ளது. இத்திட்டம் பல கட்டங்களாக செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் முதல் கட்டம் 2026–இல் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

NHLML, RVNL, VOC போர்ட் டிரஸ்ட், தூத்துக்குடி மற்றும் டிட்கோ ஆகியவற்றை உள்ளடக்கிய சிறப்பு நோக்க அமைப்பு (SPV) மூலம் கோவையில் மற்றுமொரு MMLP–ஐ உருவாக்க முன்மொழியப்பட்டுள்ளது. இதற்காக சுமார் 216 ஏக்கர் நிலங்கள் கண்டறியப்பட்டு, தற்போது நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

**4) தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம், 2023**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் "தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம் 2023" 18.03.2023 அன்று வெளியிடப்பட்டது. இது மாநிலத்தின் வளர்ச்சிப் பாதையில் ஒரு மைல்கல் ஆகும்.

சரக்கு போக்குவரத்து கொள்கையானது, தமிழ்நாடு மாநிலத்தில் செலவு குறைந்த, நம்பகமான மற்றும் நிலையான சரக்கு போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்துவதை வலியுறுத்தும், ஐந்தாண்டு காலத்திற்கான தெளிவான பார்வையை விளக்குகிறது. இந்த பார்வையை நனவாக்க, வலுவான ஒழுங்குமுறை கட்டமைப்பை நிறுவுதல், ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பில் முன்னேற்றம், தொழில்நுட்ப கண்டுபிடிப்பு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகள் தனியார் துறை பங்கேற்பை ஊக்குவித்தல் உள்ளிட்ட உத்திகள் கவனம் செலுத்தும் பகுதிகளை இக்கொள்கை வலியுறுத்தி மாநிலத்தின் சரக்கு போக்குவரத்துத் துறையின்

ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்துகிறது. இதை ஆதரித்து இதற்கேற்ப நிதி ஊக்கத் தொகைகளும் வழங்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.

மாநில ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம் (SILP) என்பது மாநிலத்தின் சரக்கு போக்குவரத்துத் திறனை மேம்படுத்துவதற்காக, அடுத்த 10 ஆண்டுகளுக்கு சரக்கு போக்குவரத்துத் துறையில் அடையாளம் காணப்பட்ட 50 கருத்துருக்கள் / செயல் திட்டங்களைக் கோடிட்டுக் காட்டும் முக்கிய திட்டமாகும். இந்த தலையீடுகள் சரக்கு போக்குவரத்து செயல்திறனை மேம்படுத்துதல், கையாளுதல் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல், மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் தீர்வுகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் நிலைத்தன்மையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. அடையாளம் காணப்பட்ட முன்முயற்சிகள் மற்றும் கருத்துருக்கள் / செயல் திட்டங்கள் 1.60 இலட்சம் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு பங்களிக்கும் வகையில், மாநிலத்தில் உள்ள மூன்று சரக்கு வழித்தடங்களில் ரூ.63,000 கோடி ஆரம்ப முதலீட்டை ஈர்க்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கொள்கை மற்றும் திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள், மாநிலத்தின் சரக்குபோக்குவரத்து செயல்திறன் குறியீட்டை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்து, பல்வேறு மாநிலங்களில் ஒன்றிய அரசால் நடத்தப்பட்ட சரக்கு போக்குவரத்தை எளிதாக்கும் (Logistics Ease Across Different States – LEADS) சர்வே 2023–இல் 'சாதனையாளர்' பிரிவில் சரக்கு போக்குவரத்து துறையில் சிறந்த செயல் திறன் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு முன்நிறுத்தப்பட்டுள்ளது.

### 3.2.2 நிதிநுட்பத் துறை

#### 1) நிதிநுட்ப நகரம்

டிட்கோ நிறுவனம், சென்னை நந்தம்பாக்கத்தில் ரூ.82.87 கோடி முதலீட்டில் முதற்கட்டமாக 56 ஏக்கர் நிலப்பரப்பில் "நிதிநுட்ப நகரம்" ஒன்றினை அமைத்து வருகின்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17.06.2023 அன்று இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். இத்திட்டம் மூலம் வங்கி சேவை, வங்கி சாரா நிதிசேவைகள், ஒழுங்குமுறை நிறுவனங்கள்

மற்றும் நிதி சந்தை செயல்பாடுகள் போன்ற நிதித்துறை மற்றும் நிதிநுட்பத்துறை சார்ந்த நிறுவனங்களுக்கு தேவையான பொது உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய நிலங்களை வழங்கும். அலுவலகக் கட்டிடங்கள், நட்சத்திர விடுதிகள், குடியிருப்பு மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை இத்திட்டம் உள்ளடக்கியிருக்கும். தற்போது நிதிநுட்ப நகரத்தில் நிலங்களை ஒதுக்கீடு செய்யும் பணியினை டிட்கோ நிறுவனம் தொடங்கியுள்ளது.

**2) நிதிநுட்ப கோபுரம்**

சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள நிதிநுட்ப நகரத்தில் நிதி மற்றும் நிதிநுட்ப நிறுவனங்களுக்காக முதன் முறையாக பிரத்யோகமான உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய "நிதிநுட்ப கோபுரம்" ஒன்றை டிட்கோ நிறுவி வருகின்றது. இத்திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17.06.2023 அன்று அடிக்கல் நாட்டினார். இத்திட்டம் 5.56 இலட்சம் சதுர அடி கட்டிடப் பரப்பளவில், சுமார் ரூ.234 கோடி திட்ட மதிப்பீட்டில் கூட்ட அரங்குகள்,

குழந்தைகள் காப்பகம், உணவகங்கள், உடற்பயிற்சிக் கூடம், கலையரங்கம் மற்றும் பிற வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகின்றன. தற்போது, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றது. இத்திட்டம் ஆகஸ்டு 2025–ல் முடிவடையும் என எதிர்பாக்கப்படுகிறது.

### 3.2.3 தகவல் தொழில் நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகள்

**1) டைடல் பார்க், சென்னை**

டைடல் பார்க் நிறுவனம், டிட்கோ (25.80 சதவிகிதம்) மற்றும் எல்காட் (5.91 சதவிகிதம்) ஆகியவற்றின் கூட்டு நிறுவனமாக 2000 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. டைடல் பார்க் நிறுவனம், சென்னை தரமணியில் ரூ.293 கோடி செலவில் முதல் தகவல் தொழில்நுட்ப பூங்காவை சுமார் 8.01 ஏக்கரில் 12.80 இலட்சம் சதுர அடி கட்டிடப் பரப்பளவில் நிறுவப்பட்டது. இப்பூங்கா நிறுவப்பட்டதன் தொடக்கத்திலிருந்தே மாநிலத்தின் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஒரு அடித்தளமாக அமைந்துள்ளது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த

தொழில்துறைக்கு "டைடல் பார்க்" சென்னை ஒரு கலங்கரை விளக்கமாகும். இப்பூங்காவானது 40 முன்னனி நிறுவனங்களுக்கு நவீன வசதியுடன் பணிபுரியும் இடங்களை வழங்கி, 12,000–க்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கி உள்ளது.

**டைடல் பூங்காவின் 2023–24 ஆம் நிதியாண்டின் நிதி செயல்திறன் (தணிக்கை செய்யப்படாதது)**

| **விவரங்கள்** | (ரூ. கோடியில்) |
|---|---|
| செயல்பாடுகளிலிருந்து ஈட்டிய வருவாய் | 90.30 |
| நிகர இலாபம் | 57.17 |

**2) டைடல் பார்க், கோயம்புத்தூர்**

தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை கோயம்புத்தூரில் ஏற்படுத்துவதற்காக டிட்கோ, எல்காட், டைடல் மற்றும் எஸ்டிபிஐ ஆகிய நிறுவனங்களின் கூட்டு நிறுவனமாகிய "டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட்" நிறுவனம் கோயம்புத்தூரில் 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தில் டிட்கோ (26.41 சதவிகிதம்), எல்காட் (33.05 சதவிகிதம்), டைடல் (39.56

சதவிகிதம்) மற்றும் எஸ்டிபிஐ (0.99 சதவிகிதம்) ஆகியன முக்கிய பங்குதாரர்களாக உள்ளன.

இரண்டாம் நிலை நகரத்தில் தனது முதல் தகவல் தொழில்நுட்ப பூங்காவை 9.5 ஏக்கர் பரப்பளவில் கோயம்புத்தூரில் உள்ள எல்காட் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் நிறுவியுள்ளது. 17 இலட்சம் சதுர அடி தளப்பரப்பில், 9.14 இலட்சம் சதுர அடி இடம் குத்தகைக்கு விடப்படும் பரப்புடன் உள்ள இப்பூங்காவில் தற்போது சுமார் 80 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்பூங்காவில் "குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்" மற்றும் "புத்தொழில் நிறுவனங்கள்" தங்கள் நிறுவனங்களை 952 இருக்கை வசதிகள் உட்பட சமகாலத்திற்கு தேவையான அனைத்து வசதிகளுடன் கூடிய தயார்நிலை கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது இப்பூங்காவில் Accenture Solutions, IBM India, LTI Mindtree, Tech Mahindra, Cameron, Corrohealth, Value Momemtum மற்றும் Omega Healthcare போன்ற

முன்னணி பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவனங்கள் தங்களது அலுவலகத்தை அமைத்து 24,480 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளன. 2023–2024ஆம் ஆண்டில் இப்பூங்காவிலிருந்து ரூ.2,980 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

**கோயம்புத்தூர் டைடல் பூங்காவின் 2023–24ஆம் நிதியாண்டின் நிதி செயல்திறன்**

| **விவரங்கள்** | (ரூ. கோடியில்) |
|---|---|
| செயல்பாடுகளிலிருந்து ஈட்டிய வருவாய் | 86.48 |
| நிகர இலாபம் | 38.39 |
| அரசுக்கு செலுத்தப்பட்ட ஈவுத்தொகை | 7.50 |

**3) டைடல் பார்க், பட்டாபிராம்**

ஆவடி பட்டாபிராம் பகுதியில் தனித்துவம் வாய்ந்ததாகவும், பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும் ஒரு "புதிய தகவல் தொழில்நுட்ப பூங்காவை" டைடல் பார்க் (சென்னை) நிறுவனம் அமைத்து வருகிறது. இது, சுமார் 11.41 ஏக்கர் நிலப்பரப்பில், 5.57 இலட்சம் சதுர அடி கட்டிட பரப்பளவில் தலைசிறந்த முன்னணி தகவல்

தொழில்நுட்ப நிறுவனங்கள், வணிக செயல்முறை மேலாண்மை (பிபிஎம்) நிறுவனங்கள் மற்றும் புத்தாக்க நிறுவனங்களுக்கு இடமளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு வருகிறது. இப்பூங்கா வாடிக்கையாளர்களுக்கு ஏற்றவாறு முழுமையான சூழல் கொண்ட பல்வேறு நவீன வசதிகளை உள்ளடக்கியுள்ளது. இப்பூங்கா விரைவில் திறப்பு விழா காண உள்ளது.

**4) டைடல் பார்க், மதுரை**

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களும், நிதிநுட்ப நிறுவனங்களும் ஒரு சிறந்த உள்கட்டமைப்பு வசதியை பயன்படுத்தும் வகையில், டைடல் பார்க் (சென்னை) நிறுவனம் மதுரை மாட்டுத்தாவணியில் 5.60 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.400 கோடி மதிப்பீட்டில், ஒரு தகவல் தொழில்நுட்ப பூங்காவை அமைக்க உள்ளது.

இத்திட்டத்தின் படி, 6.86 இலட்சம் சதுர அடி கட்டிட பரப்பளவிலான உள்கட்டமைப்பு வசதியினை தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், வணிக செயல்முறை மேலாண்மை (BBM) நிறுவனங்கள்

மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் (Start ups) பயன்படுத்திக்கொள்ளும். இப்பூங்காவானது அதிநவீன தகவல் தொழில்நுட்ப கட்டிடமாக வடிவமைக்கப்பட உள்ளது. அதாவது உணவுக்கூடங்கள், மாடித் தோட்டம், பணி அழுத்த நிவர்த்தி இடங்கள் மற்றும் மழலையர் காப்பகம் போன்ற புதிய வசதிகள் இடம்பெறும். இந்த நவீன தகவல் தொழில்நுட்ப பூங்கா கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகளை கோரும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

**5) டைடல் பார்க், திருச்சிராப்பள்ளி**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சி–மதுரை நெடுஞ்சாலையில், பஞ்சப்பூரில் அமைந்து வரும் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு அருகில் ஒரு "தகவல் தொழில்நுட்ப பூங்காவினை" டைடல் பார்க் (சென்னை) நிறுவனம் அமைக்க உள்ளது. இப்பூங்காவானது 14.16 ஏக்கர் நிலப்பரப்பில் 6 இலட்சம் சதுர அடி கட்டிட பரப்பளவில் சுமார் ரூ.400 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது. மேலும், இதை கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

**6) தரமணியில் DLFன் தகவல் தொழில்நுட்ப பூங்கா**

டிட்கோ, DLF நிறுவனத்துடன் இணைந்து, சென்னை தரமணியில் சுமார் 27.05 ஏக்கர் நிலப்பரப்பளவில், 6.8 மில்லியன் சதுர அடி கட்டுமான பரப்பளவில், "தகவல் தொழில்நுட்ப பூங்கா" ஒன்றினை சுமார் ரூ.5,000 கோடி மதிப்பீட்டில் உருவாக்கி வருகிறது. இந்த நிறுவனத்தில் டிட்கோ 6.17 சதவீகித மூலதன பங்குகளைக் (ரூ.50 கோடி) கொண்டுள்ளது.

சுமார் 2.5 மில்லியன் சதுர அடி பரப்பளவில் ரூ.1,200 கோடி திட்ட மதிப்பீட்டில், திட்டத்தின் முதல் கட்ட பணிகள் (Phase–I) முடிவுறும் தருவாயில் இருக்கிறது.

இரண்டாம் கட்டமாக (Phase–II) "ஸ்டான்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ் (SCGBS)" என்ற நிறுவனத்துக்காக ரூ.650 கோடி மதிப்பீட்டில் சுமார் 7.7 இலட்சம் சதுர அடி பரப்பளவில் அதற்கென தனியே ஒரு கட்டிடத்தை கட்டி வருகிறது. இத்திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்கள் 14.03.2022 அன்று அடிக்கல் நாட்டினார். இக்கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

இத்திட்டம், பத்து வருடங்களில் சுமார் ரூ.47,000 கோடி முதலீடுகளை ஈர்க்கும் எனவும், 70,000-க்கும் அதிகமான "தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு" வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**7) மினி டைடல் பூங்காக்கள்**

சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள டைடல் பூங்காக்களின் வெற்றியைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு வளர்ச்சியை தமிழ்நாட்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு (Tier-2 & Tier-3 cities) எடுத்துச் செல்வதற்காக "மினி தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை" நிறுவ தமிழ்நாடு அரசு அறிவித்தது. "டைடல் நியோ" என்னும் சிறப்பு நோக்க நிறுவனம் மூலமாக 50,000 முதல் 1 இலட்சம் சதுர அடி வரை கட்டட பரப்பளவில் தஞ்சாவூர், தூத்துக்குடி, சேலம், வேலூர், திருப்பூர், காரைக்குடி மற்றும் ஊட்டி ஆகிய இடங்களில் இவை

அமைக்கப்பட உள்ளன. ஒவ்வொரு இடத்திலும் சுமார் 500 தகவல் தொழில்நுட்ப நிபுணர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும். இதில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், வணிகச் செயலாக்க அயலாக்க நிறுவனங்கள் (BPO), புத்தொழில் நிறுவனங்கள் (Startups) மற்றும் இணைப்பணிக்கான பணிபுரியும் இடங்கள் (Co–working spaces) முதலியவைகள் இடம்பெறும் வகையில் வடிவமைக்கப்பட உள்ளன.

இதில் "விழுப்புரம் டைடல் நியோ பார்க்" மாநிலத்தின் முதல் மினி டைடல் நியோ பார்க்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 17.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. தரை மற்றும் நான்கு தளங்களுடன் 63,000 சதுர அடி கட்டிட பரப்பளவில் கட்டப்பட்டு, நவீன வடிவமைப்பைக் கொண்டுள்ள இந்த மினி தகவல் தொழில்நுட்ப பூங்கா, புதுச்சேரியில் இருந்து 8 கிமீ தொலைவிலேயே அமைந்துள்ளது.

தஞ்சாவூர், தூத்துக்குடி, சேலம், வேலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் மினி டைடல் நியோ பார்க்கிற்கான கட்டுமானப் பணிகள் விரைந்து

நடைபெற்று வருகின்றன, காரைக்குடி மற்றும் நீலகிரியில் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது.

### 3.2.4 உயிரி அறிவியல் துறை டைசல் உயிரி பூங்கா

தமிழ்நாட்டில் உயிரி தொழில்நுட்ப வளர்ச்சிக்காக, உயிரி தொழில்நுட்பம் மற்றும் மருந்தியல் நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், டிட்கோ மற்றும் டைடல் பார்க் (சென்னை) நிறுவனம் இணைந்து, டைசல் உயிரி பூங்கா (TICEL Bio Park) என்ற நிறுவனத்தை (டிட்கோ–37.83 சதவிகிதம் பங்கு, டைடல் – 44.60 சதவிகிதம் பங்கு), பல்வேறு விரிவான உள்கட்டமைப்பு வசதிகளுடன் உருவாக்கியுள்ளது.

2004ஆம் ஆண்டு, 5 ஏக்கர் நிலப்பரப்பில், 1.42 இலட்சம் சதுர அடி பரப்பளவில், ரூ.54 கோடி செலவில் டைசல் நிலை–I, சென்னை தரமணியில் நிறுவப்பட்டது.

அதன் வெற்றியைத் தொடர்ந்து, டைசல் நிலை–2 அதே வளாகத்தில் 6.49 இலட்சம் சதுர அடி பரப்பளவில், ரூ.168 கோடி செலவில் நிறுவப்பட்டது.

மேலும், டைசல் நிலை–3, கோவையில் 2.29 இலட்சம் சதுர அடி பரப்பளவில், ரூ.85 கோடி செலவில் நிறுவப்பட்டது. தற்போது இம்மூன்று பூங்காக்களும் மாநிலத்தின் உயிரி தொழில்நுட்ப வளர்ச்சியில், சிறப்பாக செயல்பட்டு வருவதோடு, 2022–23 ஆம் ஆண்டில் ரூ.52.63 கோடி வருவாயும், ரூ.9.58 கோடி லாபமும் ஈட்டியுள்ளது.

ஒன்றிய அரசின் உயிரி தொழில்நுட்ப துறையும், டிட்கோவும் இணைந்து, ரூ.19.30 கோடி செலவில், டைசல் நிலை–2ன் உள்பகுதியில் "உயிரி தொழில்நுட்ப முதன்மை கருவிகள் வசதி மையம் (Bio Technology Core Instrumentation Facility)" ஒன்றினை உருவாக்கியுள்ளது. இம்மையம் மூலம் புத்தொழில் நிறுவனங்கள், புத்தொழில் பேணும் மையங்கள் மற்றும் இதர உயிரி தொழில்நுட்ப நிறுவனங்கள், தங்களுடைய உயர்நிலை ஆராய்ச்சி மற்றும் சிறிய அளவிலான உற்பத்தி மற்றும் சோதனைகளை மேற்கொள்ள பயன்படுத்தி வருகின்றன.

டைசல் உயிரி தொழில்நுட்ப பூங்காவானது உயிரி துறையில் புதிய கண்டுபிடிப்பு, ஆராய்ச்சி மற்றும் புதிய தொழில் முனைவோர்களை உருவாக்குதல் ஆகிய செயல்பாடுகளை ஊக்குவிப்பதற்காக 'டைசல் புத்தாக்க மையத்தை' (TICEL Innovation Hub), சென்னையில் உருவாக்கியுள்ளது. மேலும், இதன் மூலம் பல புத்தொழில் (Start–up) நிறுவனங்கள் தங்கள் தொழில்களை துவக்க அது செயல் வடிவம் பெறும் வகையில் புத்தொழில் ஆதரவு வசதிகள் (Incubation Facilities) அமைக்கப்பட்டுள்ளன. இம்மையம் பயிற்சி பட்டறைகள் (workshops), கருத்தரங்குகள் (Seminars), சான்றிதழ் பெறும் திட்டங்கள் (certification programs), குறியீடுகொண்ட கணினி மென்பொருள்கள் (hackathons), தொழில் முறை கற்றல்கள் (Internships), கூட்டு ஆராய்ச்சி திட்டங்கள் (joint research proposals), புத்தொழில் (incubation) போன்ற பல்வேறு செயல்பாடுகளை வழி நடத்துகிறது. இதனை கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள், உயிரி தொழில்நுட்ப நிறுவனங்கள், ஆகியவற்றுடன் டைசல் புத்தாக்க மையம் இணைந்து

கூட்டு முயற்சியில் செயல்படுத்தி, தமிழ்நாட்டில் உயிரி தொழில்நுட்ப வளர்ச்சியில் மிகப் பெரிய பங்கு வகிக்கிறது.

### 3.2.5 வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறை

தமிழ்நாடு பாதுகாப்பு தொழில்துறை பெருவழித்தடத்தை (TNDIC) செயல்படுத்துவதற்கான ஒரு "முகமை நிறுவனமாக" டிட்கோ செயல்பட்டு வருகிறது. இது இந்தியாவில் அமைந்துள்ள இரண்டு பாதுகாப்பு தொழில்துறை பெருவழித்தடங்களில் ஒன்றாகும். வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறையில் டிட்கோ மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகள் கீழே பட்டியலிடப்படுகிறது:

#### 1) தமிழ்நாடு பாதுகாப்புதுறை பெருவழித்தடம் (TNDIC)

சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஓசூர் ஆகிய ஐந்து முனையங்களை உள்ளடக்கிய ஒரு "தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில்துறை பெருவழித்தடம் (TNDIC)" உருவாக்கப்பட்டு வருகிறது. இப்பெருவழித்தடத்தை உருவாக்குவதற்கான பல்வேறு உத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அ) பொது வசதி மையங்கள் (CFC)**

வான்வெளி மற்றும் பாதுகாப்புத்துறையின் உற்பத்தியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (MSME) பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். அதனால் MSME நிறுவனங்களின் தேவைகளை கண்டறிந்து, அவற்றின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில், டிட்கோ நிறுவனம் பொது வசதி மையங்களை நிறுவி வருகின்றது. மிகப்பெரிய முதலீடுகளை பயன்படுத்துவதற்கும், அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கும் மற்றும் வான்வெளி மற்றும் பாதுகாப்புத்துறையின் (A&D) அங்கமாக திகழ்வதற்கும் இம்மையம் உதவி புரிகிறது.

"திருச்சி பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கூட்டமைப்பு" (TREAT) மூலம் உருவாக்கப்பட்ட பொது வசதி மையத்தில் டிட்கோ ரூ.10 கோடி முதலீடு செய்துள்ளது. டாடா மற்றும் OEM நிறுவனங்களிடமிருந்து பெரிய அளவிலான உதிரி பாகங்கள் கொள்முதல் செய்து, TREAT மையமானது, திருச்சி மற்றும் அதனை சுற்றியுள்ள 90−க்கும்

மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு (MSME) தொழில் நுட்ப ஆதரவை வழங்குகிறது.

மேலும், டிட்கோ கோயம்புத்தூர் ஃபவுண்டரி டெவலப்மென்ட் ஃபவுண்டேஷனுடன் (FDF) இணைந்து, கோயம்புத்தூரில் வார்ப்பு உலோகத் தொழிற்சாலைகளுக்கு (Casting & Foundry) பயன்படும் வகையில் சுமார் ரூ.30 கோடி செலவில் ஒரு "பொது வசதி மையம்" அமைக்கப்பட உள்ளது.

வான்வெளி பாகங்கள் உற்பத்தி தொழில்களில், உலோங்களுக்கான புறப்பரப்பு சீரமைப்பு பணிகளும் (Surface Treament) மற்றும் சீரமைப்பு பிந்தைய செயல்முறைகளும் (Post processing) அவசியமானதாகும். இவ்வகை நுணுக்கங்களை பயன்படுத்தக்கூடிய தொழில் நிறுவனங்கள் கோயம்பத்தூரில் அதிக எண்ணிக்கைகளில் இருப்பதால், டிட்கோ மற்றும் GTN தொழில் நிறுவனமும் இணைந்து, வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் அலகுகளுக்கான சீரமைப்புக்கு

பின்னர் உள்ள தேவைகளுக்காக ஒரு "பொது வசதி மையத்தை" கோயம்புத்தூரில் உருவாக்கி உள்ளது.

மேலும், டிட்கோ டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் (TTL) என்ற நிறுவனத்துடன் இணைந்து கோயம்பத்தூரில் ஒரு "பொது பொறியியல் வசதி மையத்தை" முதல் கட்டமாக ரூ.166.83 கோடி மதிப்பீட்டில் உருவாக்க உள்ளது. இதில் ரூ.102.97 கோடி ரூபாயை TTL நிறுவனம் வழங்கும். புத்தாக்க நிறுவனங்கள், MSME துறை சார்ந்த நிறுவனங்களுக்கு விமான வடிவமைப்பு மற்றும் மேம்பாடு (Aero Design & Development), தொழில்துறை எந்திரவியல் (Industrial Robotics), உற்பத்தி (Manufacturing), மின்சாரவியல் (Electrical), கலப்புப்பொருட்கள் (Composites), விமான மின்னணுவியல் (Avionics), இயந்திர மின்னணுவியல் மற்றும் பரிசோதனைகள் (Mechatronics & Testing) போன்ற வசதிகளை இம்மையம் வழங்கும். இம்மையம் வடிவமைப்பு மற்றும் உருவகப்படுத்தும் ஆய்வகம், மெஷினிங் மற்றும் ஷீட் மெட்டல் ஆய்வகம், ஜெனரேட்டிவ் இன்ஜினியரிங் ஆய்வகம், ஆய்வு

மற்றும் சரிபார்ப்பு ஆய்வகம் (Inspection and Validation lab) ஆகியவைகளை கொண்டு செயல்படும். இதை நடைமுறைப்படுத்துவதற்காக தமிழ்நாடு பொறியியல் புத்தாக்க மையம் ("TN ENGINE") என்ற ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

**ஆ) பொது சோதனை மையங்கள்**

பாதுகாப்பு அமைச்சகத்தின் (MoD) பாதுகாப்பு சோதனை உள்கட்டமைப்பு திட்டத்தின் (DTIS) கீழ் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து பொது சோதனை மையங்களை அமைக்க டிட்கோ திட்டமிட்டுள்ளது. முன்மொழியப்பட்ட பொது சோதனை மையங்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

**i) ஆளில்லா விமான தொழில் அமைப்புகளுக்கான பொது சோதனை மையம்**

கெல்ட்ரான், சென்ஸ் இமேஜ், STC மற்றும் அவிஷ்கா ஆகிய நிறுவனங்களின் கூட்டமைப்பு ரூ.45 கோடி செலவில் ஆளில்லா விமான தொழில் அமைப்புகளுக்கான பொது சோதனை மையத்தை உருவாக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதில்

ரூ.33.75 கோடி மானியம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தால் (MoD) வழங்கப்படும். சென்னையை அடுத்துள்ள வல்லம் வடகாலில் இந்த மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு நோக்க நிறுவனமான அசோசியேஸ் ஃபார் ட்ரோன் ஏவியனிக்ஸ் ரிசர்ச் அன்ட் டெஸ்ட்டிங் (ADART)–ல் டிட்கோ 40 சதவிகிதம் (ரூ.4.50 கோடி) பங்குகளைக் கொண்டிருக்கும். இந்த சிறப்பு நோக்க நிறுவனம் விரைவில் கட்டுமானப் பணிகளைத் தொடங்கும்.

**ii) மின்னனு போர் முறைக்கான பொது சோதனை மையம் (EW Testing Centre)**

பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட், ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட், இந்தியா ஆப்டெல் லிமிடெட் மற்றும் பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் இனணந்து கூட்டமைப்பு ரூ.46.9 கோடி செலவில் "மின்னனுவியல் போர் முறைக்கான பொது சோதனை மையத்தை" உருவாக்குவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.35.22 கோடி மானியம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தால்

வழங்கப்படும். இந்த சிறப்பு நோக்க நிறுவனமான எலக்ட்ரானிக் வார்ஃபேர் டெஸ்ட்டிங் (ELEWATE)–ல் டிட்கோ 10 சதவிகிதம் (ரூ.1.17 கோடி) பங்குகளைக் கொண்டிருக்கும். சென்னை ஏரோஸ்பேஸ் பூங்காவில் இந்த மையம் அமைக்கப்படும். இந்த சிறப்பு நோக்க நிறுவனம் விரைவில் கட்டுமான பணிகளை தொடங்கும்.

**iii) எலக்ட்ரோ ஆப்டிக்ஸ் பொது சோதனை மையம் (EO Testing Centre)**

இந்தியா ஆப்டெல் லிமிடெட், ஆர்மெர்டு வெகிக்கல்ஸ் நிகாம் லிமிடெட், பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் மற்றும் கோவா ஷிப்யார்ட் லிமிடெட் ஆகிய கூட்டமைப்பு நிறுவனங்கள் ரூ.41.22 கோடி செலவில் "எலக்ட்ரோ ஆப்டிக்ஸ் (EO) பொது சோதனை மையம்" அமைப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.30.91 கோடி மானியம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தால் (MoD) வழங்கப்படும். இந்த சிறப்பு நோக்க நிறுவனமான லேபோரட்டரி ஃபார் எலக்ட்ரோ ஆப்டிகல் நேவிகேஷன் சிஸ்டம்ஸ் (LENS)–ல், TIDCO

5 சதவிகிதம் (ரூ.0.51 கோடி) பங்குகளை கொண்டிருக்கும். இந்த சிறப்பு நோக்க நிறுவனம் விரைவில் கட்டுமான பணிகளை தொடங்க உள்ளது.

**iv) உலோகவியல் மற்றும் இயந்திரங்களுக்கான பொது சோதனை மையம் (Mechanical & Material Common Testing Centre)**

மைக்ரோலேப், பாரத் எர்த் மூவர்ஸ் லிமிடெட், ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் மற்றும் வைதீஸ்வரன் இண்டஸ்ட்ரீஸ் ஆகிய நிறுவனங்களின் கூட்டமைப்பு ரூ.49.7 கோடி செலவில் "இயந்திரவியல் மற்றும் உலோகவியல் பொது சோதனை மையத்தை" உருவாக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.36.86 கோடி மானியம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தால் (MoD) வழங்கப்படும். இந்த SPV நிறுவனத்தில் டிட்கோ 30 சதவிகிதம் (ரூ.3.84 கோடி) பங்குகளைக் கொண்டிருக்கும். இந்த பொது சோதனை வசதி, திருச்சிராப்பள்ளியில் உள்ள TREATல் அமைய உள்ளது.

**2) தொழிற்பூங்காக்கள் மற்றும் வசதிகள்**

வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறையின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் துறை பெருவழித் தடத்தின் பல்வேறு முனையங்களில் தொழிற்பூங்காக்களை டிட்கோ அமைத்து வருகிறது.

**அ) பாதுகாப்பு உபகரண உற்பத்தி பூங்கா, வாரப்பட்டி**

கோயம்புத்தூர் மாவட்டம், வாரப்பட்டி கிராமத்தில் சுமார் 372 ஏக்கர் பரப்பளவில், வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்களுக்குத் தேவையான பொதுவான உள்கட்டமைப்பு வசதிகளை வழுங்குவதற்காக "பாதுகாப்பு உபகரண உற்பத்தி பூங்கா உருவாக்கப்படும்".

இத்திட்டத்தை டிட்கோ & சிப்காட் நிறுவனங்கள் இணைந்து செயல்படுத்தும். தொழிற்சாலைகளின் அலகுகள் அமைப்பதற்காக மேம்படுத்தப்பட்ட மனைகள் ஒதுக்கப்படும். சுமார் 209 ஏக்கர் நிலத்திற்கான விருப்ப கோரிக்கை பல்வேறு தொழில் நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், 5 நிறுவனங்களுக்கு

98 ஏக்கர் நிலங்கள் ஒதுக்கீடு செய்வதற்கான கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளது.

**ஆ) வான்வெளி தொழிற்பூங்கா, சூலூர்**

சூலூரில் உள்ள விமானப்படை நிலையத்தை ஒட்டி டிட்கோ ஒரு வான்வெளி தொழில் பூங்காவை சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் உருவாக்க உள்ளது. இராணுவ தளங்களின் எதிர்கால உற்பத்தி / Assembly பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் சீரமைத்தல் (MRO) போன்ற வசதிகள் இப்பூங்காவில் இடம் பெறும். இதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

**இ) விண்வெளி தொழிற் பூங்கா மற்றும் உந்து சக்தி எரிபொருள் பூங்கா, தூத்துக்குடி**

குலசேகரப்பட்டினத்தில் இஸ்ரோ (ISRO)–வின் புதிய விண்வெளி நிலையத்திற்கு அருகில், ஒரு விண்வெளி தொழிற்பூங்கா மற்றும் திட எரிபொருள் பூங்காவை தூத்துக்குடியில் டிட்கோ உருவாக்க திட்டமிட்டுள்ளது. சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள இந்தப் பூங்கா, விண்வெளி தொடர்பான தொழில்களுக்கு ஆதரவளிப்பதோடு

இத்துறையில் முதன்மை பாகங்கள் உற்பத்தி தொழிற்சாலைகள் (Up stream Industries) மற்றும் துணை பாகங்கள் உற்பத்தி தொழிற்சாலைகள் (Down Stream Industries) ஆகியவைகள் உருவாகுவதோடு, இப்பகுதியின் வளர்ச்சியும், சுற்றுச்சூழல் தகவமைப்பும் மேம்படும். மேல்நிலை மற்றும் கீழ்நிலைத் தொழில்களின் வளர்ச்சிக்கும் பயன்படும். மேலும், இப்பகுதியில் விண்வெளி தொழில் சூழல் அமைப்பை மேம்படுத்தவும் இப்பூங்கா பெரிதும் உதவும்.

தமிழ்நாட்டில் விண்வெளி தொழிற்சாலை ஊக்குவிப்பதற்காக டிட்கோ IN–SPACe உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 06.03.2024 அன்று கையெழுத்திட்டுள்ளது.

**ஈ) விமான பயிற்சி நிறுவனங்களை (FTO) உருவாக்குதல்**

டிட்கோ, அதிகரித்து வரும் பயிற்சி பெற்ற விமானிகளுக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, விமானப் பயிற்சி நிறுவனங்களை (FTO) அமைக்கும் பணியை செயல்படுத்தி வருகிறது.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் முதல் விமான பயிற்சி நிறுவனத்தை அமைக்க டிட்கோ உத்தேசித்துள்ளது. இதற்காக நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்து இடையூறு வரம்பு பரப்புகளுக்கான ஆய்வு (Obstruction Limitation Surfaces Study) நடைபெற்று வருகிறது.

**உ) வானூர்தி மையம் (Aero Hub)**

வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்களில் ஒரு புதிய தொடக்கத்தை உருவாக்குவதற்கும், புதுமைகளை உருவாக்குவதற்கும் தேவையான பொது வசதிகளை வழங்குவதற்கு ஏதுவாக, டிட்கோ நிறுவனமும், டைசல் நிறுவனமும் இணைந்து உருவாக்கிய "சென்னை ஏரோஸ்பேஸ் பார்க் லிமிடெட்" என்ற நிறுவனம் மூலம் வான்வெளி மையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம், சுமார் ரூ.230 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூரில் 10.73 ஏக்கர் நிலப்பரப்பில் 3.04 இலட்சம் சதுர அடி கட்டட பரப்பளவில், அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வானூர்தி மையத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3) **தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கை, 2022**

தமிழ்நாட்டில் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் தொழில்நுட்பம், திறன், நிதி, உள்கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு செயலாக்கிகள் போன்றவற்றை பயன்படுத்தி தமிழ்நாட்டில் உள்ள வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறை நிறுவனங்கள் வளர்ச்சியடையும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.11.2022 அன்று "தமிழ்நாடு வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கை 2022" (Tamil Nadu Aerospace & Defence Industrial Policy 2022) வெளியிடப்பட்டது. இக்கொள்கையின் மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் சுமார் ரூ.75,000 கோடி (10 பில்லியன் அமெரிக்க டாலர்கள்) முதலீட்டை ஈர்க்கவும், 1 இலட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பினை உருவாக்கவும் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.2.6 ஆராய்ச்சி, அறிவுசார் மற்றும் வளர்த்துறை

**1) தமிழ்நாடு அறிவுசார் நகரம்**

தமிழ்நாடு அறிவுசார் நகரம் (TKC) ஒரு அறிவு மையமாக செயல்பட்டு, உயர்மட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள், அறிவு சார்ந்த உயர் தொழில்நுட்ப தொழில்கள் மற்றும் உலகத் தரம் வாய்ந்த நிலையான வாழ்வை ஒரே இடத்தில் கொண்டு வந்து, உலகளாவிய அறிவுச் சூழலை உருவாக்கும்.

TKC ஒரு தனித்துவமான கல்வியை மையமாகக் கொண்ட பசுமை நகரமாக இருக்கும், இது புகழ்பெற்ற சர்வதேச மற்றும் தேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் முன்னணி நிறுவனங்களை ஈர்க்கும், அத்துடன் பல்வேறு துறைகளில் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட தயாரிப்பு மற்றும் சேவை நிறுவனங்களை ஈர்க்கும். தமிழ்நாடு / இந்தியா மற்றும் உலகின் பிற பகுதிகளுக்கு இடையே அறிவை பெறுதல் மற்றும் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் வகையில், திறந்த மற்றும் சாதகமான சூழலை இந்த நகரம் வழங்கும்.

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் இத்திட்டத்தை அமைக்க நிலம் கண்டறியப்பட்டுள்ளது.

தற்போது, நிலம் கையகப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப–பொருளாதார சாத்தியக்கூறு ஆய்வுகள் நடந்து வருகின்றன.

**2) பல்கலைக்கழக ஆராய்ச்சி பூங்காக்கள்**

பல்கலைக்கழக ஆராய்ச்சி பூங்காக்கள் (URP) கல்வித்துறை, தொழில்துறை மற்றும் அரசாங்கத்தை ஒன்றிணைத்து புத்தாக்கம், ஆராய்ச்சி, அறிவுசார் சொத்துரிமை உருவாக்கம் (IP) மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு ஆகியவற்றைக் கொண்டுவரும் கூட்டு சுற்றுச்சூழல் அமைப்பாகும். இந்த பூங்காக்கள் கல்வி ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி முடிவுகளின் வணிகமயமாக்கலுக்கு இடையே ஒரு பாலமாக செயல்படும், அறிவு பரிமாற்றம், தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் தொழில் முனைவோர் முயற்சிகளின் வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்கும். URPகளில் நிறுவன ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) அலகுகள், புத்தொழில் நிறுவனங்கள் (startups), பாதுகாப்பு அமைப்புகள் (Incubators), விரைவுபடுத்திகள் (Accelerators) மற்றும் பல நவீன பொது உள்கட்டமைப்பு வசதிகள், ஆய்வகங்கள் மேலும் பல களங்களில் சிறப்பான மையமாக இருக்கும்.

முதற்கட்டமாக, கோயம்புத்தூரில் பல்கலைக் கழக ஆராய்ச்சி பூங்கா அமைக்க அதற்கான நிலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சிப் பூங்காவின் மூலம் தீர்க்கப்பட வேண்டிய தொழில் சிக்கல்களைக் கண்டறிவதற்காக கோயம்புத்தூரைச் சேர்ந்த தொழில்துறை மற்றும் கல்வித்துறைப் பிரதிநிதிகளுடனும், இது தொடர்பான பங்குதாரர்களுடனும் ஆலோசனைகள் நடத்தப்பட்டன. கோயம்புத்தூரில் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பூங்காவை செயல்படுத்த தற்போது நிறுவன சட்டத்தின் பிரிவு–8 நிறுவனமாக (Section 8 Company) அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் கோயம்புத்தூரில் உள்ள TICEL வளாகத்தில் இருந்து முதற்கட்டமாக தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**3) தமிழ்நாட்டில் உருவாகும் வளர் துறைகளுக்கான ஊக்க நிதியம் (Tamil Nadu Emerging Sector Seed Fund)**

புதிய கண்டுபிடிப்பு (Innovation), ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) மற்றும் தொழில் முனைவு (Entrepreneurship) ஆகியவற்றை மென்மேலும் ஊக்குவிக்க, தமிழ்நாடு அரசு டிட்கோ மற்றும்

டைடல் பூங்கா நிறுவனங்கள் மூலமாக ரூ.500 கோடியை தமிழ்நாடு வளர் துறைகளுக்கான ஊக்க நிதியம் ஏற்படுத்த ஒதுக்கியுள்ளது. இந்நிதியத்திற்கு தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் நிதி மேலாளராக நியமிக்கப்பட்டு, SEBI–ல் பதிவு செய்யப்பட்ட வகை I தொழில் முனைவு மூலதன நிதியமாகவும் (Venture Capital Fund) 09.03.2022 அன்று SEBI–ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வான்வெளி மற்றும் பாதுகாப்பு (A&D), ஆழ் தொழில் நுட்பம் (DeepTech), மேம்பட்ட உற்பத்தி (Advanced Manufacturing), ரோபாட்டிக்ஸ் (Robotics), மின்னணு வர்த்தகம் (E–Commerce), நகர்திறன் மற்றும் போக்குவரத்து சரக்குகளை கையாளுதல் (Mobility & Logisitics), வேளாண்மை மற்றும் உணவு பதப்படுத்துதல் (Agri and Food Processing), உயிரி அறிவியல் (Life Sciences), கல்வி தொழில் நுட்பம் (EdTech), நிதி தொழில்நுட்பம் (FinTech), விண்வெளி தொழில்நுட்பம் (SpaceTech) ஆகியவை இந்நிதியத்தின் சிறப்பு கவனம் பெறும் துறைகளுள் முக்கியமானவை ஆகும்.

டிட்கோ, தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC) மற்றும் ஸ்டார்ட்அப் தமிழ்நாடு நிறுவனங்கள் மூலமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, பல்வேறு படிநிலைகளில் விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டு. "முதலீட்டு வல்லுநர் குழுவால்" நிறுவனங்கள் தேர்வு செய்யப்படுகின்றன. இந்நிதியம் ஜூன் 2024-ல் உள்ளவாறு ஒன்பது புத்தொழில் நிறுவனங்களில் (இ-சந்தை, காய்கள், பிலணிடிக்ஸ், சுரிநோவா, மிஸ்டர்மெட், டோரஸ் ரோபாடிக்ஸ், புல்ஃபிலி, ஆக்ஸிஜன் எக்ஸ்பிரஸ் மற்றும் ஃபயாகிரி) ரூ.36.40 கோடி முதலீடு செய்துள்ளது.

### 3.2.7 திறன்மிகு மையங்கள்

உலகளவில் பெரிய நிறுவனங்களான Dassault Systemes, GE Aviation, மற்றும் Siemens ஆகிய நிறுவனங்களுடன் டிட்கோ இணைந்து மூன்று திறன்மிகு மையங்களை (Centres of Excellence), மொத்தம் ரூ.600 கோடி மதிப்பிட்டில் டிட்கோ சென்னையில் அமைத்துள்ளது.

**அ) தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்திக்கான மையம் (TANCAM)**

டசால்ட் சிஸ்டம்ஸ் (Dassault Systemes) நிறுவனத்துடன் இணைந்து சுமார் ரூ.210 கோடி செலவில் TANCAM திறன்மிகு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையம் 24.06.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. TANCAM வான்வெளி மற்றும் பாதுகாப்புத்துறை, தானியங்கி (Automotive) மற்றும் மின்னணு வாகனங்கள் போன்ற பல்வேறு தொழில் துறைக்கு தனது சேவையை வழங்குகிறது. TANCAM தனது முப்பரிமான (3D) சேவை தளத்தின் மூலம் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSME) தேவையான தொழில் நுட்பத்தையும் அவர்களது வணிக மேம்பாட்டிற்கு தேவையான புதிய உத்திகளையும் வழங்கி வருகிறது.

இதுவரை, 54 சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தாக்க நிறுவனங்கள் (Startups) இந்த திறன்மிகு மையம் மூலம் பயனடைந்துள்ளன. "நான் முதல்வன் திட்டத்தின்"

கீழ் TANCAM சுமார் 10,200 மாணவர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. மேலும், கல்வி நிறுவனங்களை மையப்படுத்தி இரண்டு மையம் கோயம்புத்தூரிலும், மூன்று மையம் தலா சேலம், நாமக்கல் மற்றும் சென்னையில் மொத்தம் ஐந்து மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல் தொழில் நிறுவனங்களை மையப்படுத்தி நான்கு மையங்கள் தலா திருச்சி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**ஆ) தமிழ்நாடு நுண்திறன் மற்றும் மேம்பட்ட உற்பத்திக்கான மையம் (TANSAM)**

சீமென்ஸ் இண்டஸ்ட்ரியல் சாப்ட்வேர் லிமிடெட் (Siemens Industrial Software Limited) நிறுவனத்துடன் இணைந்து ரூ.250 கோடி செலவில் TANSAM மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 08.11.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது. தயாரிப்பில் புத்தாக்கம் (Product innovation), முன்கணிப்பு பொறியியல் பகுப்பாய்வு மையம் (Centre for Predictive Engineering Analytics), நுண்திறன் (Smart) தொழிற்சாலை ஆராய்ச்சி, சொத்து செயல்திறன் மேலாண்மை (IoT)

ஆராய்ச்சி மையம், உற்பத்திப் பொருள்களின் வாழ்க்கை சுழற்சி மேலாண்மைக்கான ஆராய்ச்சி மையம், உற்பத்தியில் புதுமை, Augmended Reality / Vitual Reality / Mixed Reality Research மற்றும் திறன் பயிற்சி உள்ளிட்ட ஏழு சிறப்புகளை இந்த மையம் கொண்டுள்ளது. TANSAM பெரிய தொழில்துறை அலகுகள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு புதிய கண்டுபிடிப்பு மற்றும் தயாரிப்பு மேம்பாட்டிற்கான சேவைகளை வழங்குகிறது. இதுவரை, 71 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் TANSAM மூலம் பயனடைந்துள்ளன. TANSAM மையம் சுமார் 60,239 மாணவர்களுக்கு நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**இ) தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்திக்கான திறன்மிகு மையம் (TAMCOE)**

GE ஏவியஷேன் நிறுவனத்துடன் இணைந்து ரூ.140 கோடி திட்ட மதிப்பீட்டில் TAMCOE அமைக்கப்பட்டு, 08.11.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்த மையம்

திறந்து வைக்கப்பட்டது. மேலும், விமான இயந்திர பாகங்கள், மருத்துவ சாதன பாகங்கள் மற்றும் வாகனங்களுக்கான பாகங்கள் ஆகியவற்றின் தயாரிப்பில் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் மற்றும் எளிதாக்குவதற்கும் TAMCOE மையம் உதவுகிறது. இதோடு மட்டுமன்றி, TAMCOE மையம் சேர்க்கை உற்பத்தியில் வடிவமைப்பு (Design for Additive Manufacturing) மேம்பட்ட முன்மாதிரி சோதனை (Prototype development), மறுசீரமைப்பு மற்றும் மறு பொறியியல் (Reverse & Re–Engineering) போன்ற தொழில்நுட்ப சேவைகளை பிற துறைகளிலும் வழங்கி வருகிறது.

### 3.2.8 இதர தொழில் துறை உள்கட்டமைப்பு செயல் திட்டங்கள் / முயற்சிகள்

**1) சென்னை வர்த்தக மையம்**

டிட்கோ நிறுவனம், இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்துடன் (ITPO) இணைந்து சிறப்பு நோக்கு நிறுவனமான தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தை (TNTPO) ஏற்படுத்தி அதன் மூலம் சென்னை வர்த்தக மையத்தை உருவாக்கியது.

இந்நிறுவனத்தில் ITPO மற்றும் TIDCO ஆகியவை முறையே 51 சதவிதம் மற்றும் 49 சதவிகிதம் மூலதன பங்குகளை கொண்டுள்ளது. ஆரம்பத்தில், சென்னை வர்த்தக மையம் 1,13,666 சதுர அடியில் ஒரு கண்காட்சி அரங்கு பகுதியினையும் மற்றும் 2000 நபர்கள் அமரும் வசதி கொண்ட மாநாட்டு கூடத்தையும் உருவாக்கியது. பெரிய அளவிலான தேசிய மற்றும் சர்வதேச நிகழ்வுகளை நடத்துவதற்காக, சென்னை வர்த்தக மையம் 9,02,000 சதுர அடி பரப்பளவில் விரிவுபடுத்தப்பட்டது. இந்த திட்டத்தின் முக்கிய அம்சங்களாக 1,22,063 சதுர அடி பரப்பளவில் கண்காட்சி அரங்குகள், 43,200 சதுர அடி பரப்பளவை உள்ளடக்கிய 4000 நபர்களுக்கான இருக்கை வசதி கொண்ட மாநாட்டு மையம், 1306 வாகனங்கள் நிறுத்தும் வசதி கொண்ட பல அடுக்கு வாகன நிறுத்துமிடமும் அமைந்துள்ளது. இது தவிர, மாநாட்டு கூட்ட அரங்குகள், முக்கிய பிரமுகர்களின் தங்கும் அறைகள், மருத்துவ மையங்கள் போன்ற வசதிகளையும் கொண்டுள்ளன. இந்த திட்டம் மொத்தம் ரூ.384 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. உலக முதலீட்டாளர்கள்

மாநாடு 2024, இந்த புதிய வசதியில் 2024 ஜனவரி 7 மற்றும் 8 ஆம் தேதிகளில் நடைபெற்றது.

**நிதிநிலை செயல்பாடு**

**(ரூ. கோடியில்)**

| **வ. எண்.** | **ஆண்டு** | **வருவாய்** | **நிகர இலாபம்** |
|---|---|---|---|
| 1. | 2020–21 | 19.62 | 5.78 |
| 2. | 2021–22 | 18.85 | 3.67 |
| 3. | 2022–23 | 46.87 | 28.85 |

**2) தயார் நிலை உற்பத்தி வசதி (Plug & Play) – வல்லம் வடகால்**

தயார் நிலை உற்பத்தி (Plug & Play) கூடங்கள்–I அமைக்கும் திட்டம் ரூ.45.37 கோடி மதிப்பீட்டில் டைடல் பூங்காவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உற்பத்தி நிறுவனங்கள் குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரதொழில் நிறுவனங்கள் (MSME) உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு கட்டமைப்புகளை நிறுவும் நேரம் மற்றும் மூலதனச் செலவினத்தை குறைக்கும் நோக்கத்துடனும், உடனடியாக உற்பத்தியினை துவங்க ஏதுவாகவும் இந்த வசதி உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 11.74 ஏக்கர் நிலத்தில் 1.25 இலட்சம் சதுரஅடி பரப்பளவில்

நிறுவப்பட்டு வருகின்றன. தற்போது, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றது, கட்டுமானப் பணிகள் ஜனவரி 2025ல் நிறைவு பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**3) பாலிமர் தொழிற்பூங்கா**

டிட்கோ மற்றும் சிப்காட் இணைந்து, தமிழ்நாடு பாலிமர் இண்டஸ்ட்ரீஸ் பார்க் லிமிடெட் (TPIPL), என்ற நிறுவனம் மூலம், திருவள்ளூர் மாவட்டத்தில், புழுதிவாக்கம் மற்றும் வாயலூர் கிராமங்களில், சுமார் 239.82 ஏக்கர் பரப்பளவில், ஒரு பாலிமர் தொழிற் பூங்காவினை அமைத்து வருகிறது. இத்திட்டத்தின் மொத்த திட்ட மதிப்பீடு ரூ.216 கோடி ஆகும். இந்த நிறுவனத்தில் டிட்கோ மற்றும் சிப்காட் தலா ரூ.49.40 கோடி முதலீடுகளுடன் 50 சதவிகித மூலதன பங்குதாரர்களாக உள்ளனர். இத்தொழிற் பூங்காவில் பாலிமர் பொருட்கள் தயாரிக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்பிரிவுகள் இடம் பெறும். இப்பூங்காவானது, ஒன்றிய அரசின் இரசாயன மற்றும் பெட்ரோலிய இரசாயனத்துறையின் (DC&PC), 'நெகிழி பூங்கா' திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது, முதற்கட்டமாக 180.91 ஏக்கர் பரப்பளவில் அடிப்படை உள்கட்டமைப்பு, நிர்வாகக் கட்டிடம், தொழில்நுட்ப மையம், பயிற்சி மையம் மற்றும் நிர்வாகப் பணிக்களுக்கான கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இப்பணிகள் தற்போது முடிவடையும் நிலையில் உள்ளது.

**4) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொழிலக வீட்டுவசதி திட்டம்**

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை தாலுகாவில், நாகமங்கலம் கிராமத்தில், டாடா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (TEPL) பணியாளர்கள் தங்குவதற்கு, தொழிலக வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 64 ஏக்கரில் "விடியல் ரெசிடென்சி பிரைவேட் லிமிடெட் (VRPL)" என்ற கூட்டு நிறுவனத்தின் மூலம் தேவையான உள்கட்டமைப்பு வசதியினை ஏற்படுத்தி வருகிறது. இந்த கூட்டு நிறுவனத்தில் TEPL, தமிழ்நாடு செல்டர் பண்ட் (Tamilnadu Shelter Fund–TNSF) மற்றும் டிட்கோ ஆகியோர் பங்குதாரர்கள் ஆவர்.

முன்மொழியப்பட்ட பங்களிப்பு முறை பின்வருமாறு:

| வ. எண். | பங்குதாரர்கள் | முதலீடுகள் (ரூ. கோடியில்) | பங்கு (சதவிகிதத்தில்) |
|---|---|---|---|
| 1. | TEPL | 1.48 | 74 |
| 2. | TIDCO | 0.22 | 11 |
| 3. | TNSF | 0.30 | 15 |

இந்திய அரசின் கட்டுப்படியாகக்கூடிய வாடகை வீட்டு வளாகங்கள் திட்டத்தின் (Affordable Rental Housing Complexes Scheme–ARHS) கீழ் VRPL செயல்படுத்தப்படுகிறது. தற்போது, திட்டத்தின் முதல் கட்டமாக 10,400 பேர் தங்கும் வசதி கொண்ட 13 குடியிருப்புத் தொகுதிகள் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த 13 தொகுதிகளில் 8 தொகுதிகள் விரைவில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவான சமையலறை, வணிக மற்றும் பொழுதுபோக்கு பகுதிகள் மற்றும் பிற துணை வசதிகளும் குடியிருப்புத் தொகுதிகளுடன் இணைந்து உருவாக்கப்படுகின்றன.

**5) தொழில்களுக்கான சூழலமைப்பு நிதியம் (IEF)**

தொழில் சூழல் அமைப்பை மேம்படுத்தவும் சிறு உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு ரூ.500 கோடியில்

"தொழில்களுக்கான சூழல் அமைப்பு நிதியம்" ஒன்றினை உருவாக்கியுள்ளது. இந்நிதியத்தை நிர்வகிக்கும் முகமையாக செயல்பட டிட்கோ நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. சிப்காட், டிட்கோ, வழிகாட்டி நிறுவனம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து இந்நிதியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு கோரும் கருத்துருக்கள் பெறப்பட்டு. இக்கருத்துக்களை "உயர் அதிகாரக் குழு" பரிசீலினை செய்து, நிதி வழங்க ஒப்புதல் அளிக்கும்.

இதுவரை. உயர் அதிகாரக் குழு 12 கருத்துருக்களுக்கு ரூ.272.90 கோடி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. கடந்த 2023–24 நிதியாண்டிற்கு ரூ.156.12 கோடி தொழில் அபிவிருத்திப் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

### 3.2.9 பெட்ரோலியம் மற்றும் எரிவாயு துறை

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் நகர எரிவாயு விநியோக திட்டங்களும் தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு டிட்கோ ஒரு "முகமை நிறுவனமாக" இருக்கிறது.

**1) நகர எரிவாயு விநியோக திட்டங்கள்**

இந்தியாவிலேயே முதன் முதலாக, "தமிழ்நாடு நகர எரிவாயு விநியோக கொள்கை 2023" என்ற சிறப்பு கொள்கையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. இக்கொள்கை மூலம் தமிழ்நாட்டில் நகர எரிவாயுவை விநியோகிக்கும் உள்கட்டமைப்பு வசதியினை தடையின்றி உருவாக்க அங்கீகாரம் பெற்ற 7 நகர எரிவாயு விநியோக்கும் நிறுவனங்களை ஒருங்கினைத்து செயல்பட டிட்கோ உதவுகிறது.

2030–ஆம் ஆண்டுக்குள் இயற்கை எரிவாயுவின் ஆற்றல் கலவை விகிதத்தை 6.7 சதவீதத்திலிருந்து 15 சதவிகிதம் வரை உயர்த்துவதற்காக, ஒன்றிய அரசு, தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் இத்திட்டத்தினை செயல்படுத்த ஏழு நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 2785 அழுத்தப்பட்ட எரிவாயு விநியோக நிலையங்களும், 2.30 கோடி வீடுகளுக்கு குழாய் மூலம் எரிவாயு விநியோகமும் எட்டு ஆண்டு கால

அளவில் நிறைவு பெறுவதோடு சுமார் 35,000 கோடி முதலீடுகள் ஈர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது வரை சுமார் 326 எரிவாயு விநியோக நிலையங்கள் பல்வேறு மாவட்டங்களின் முக்கிய நகரங்களில் செயல்பாட்டில் உள்ளன. நகர எரிவாயுவை விநியோகிக்கும் நிறுவனங்கள் சுமார் 30,000 வீடுகளுக்கு குழாய் மூலம் இயற்கை எரிவாயு வழங்க உறுதிபடுத்தியதோடு அந்நிறுவனங்களால் சுமார் 1000 வீடுகளுக்கும் 11 தொழிற்சாலைகளுக்கும் இயற்கை எரிவாயுவினை விநியோகம் செய்து வருகிறது.

**2) பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு குழாய் திட்டங்கள்**

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் குழாய் பதிக்கும் திட்டங்களால், தொழிற்சாலைகள், போக்குவரத்து செயல்பாடுகள் மற்றும் வீடுகளுக்கு பாதுகாப்பாகவும், திறன் குறையாமலும், சிக்கனமாகவும், தங்கு தடையின்றி சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

இக்குழாய் திட்டங்கள் நகர எரிவாயுவை விநியோகம் செய்வதற்கு வழிவகை செய்கிறது.

இத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதற்கு டிட்கோ-வை முகவாண்மை நிறுவனமாக அரசு நியமித்துள்ளது.

## 3.3 டிட்கோ நிதிச் செயல்பாடு

(ரூ. கோடியில்)

| **விவரங்கள்** | **நிதி ஆண்டு 2022-23** | **நிதி ஆண்டு 2023-24 (தணிக்கை செய்யப்படாதவை)** |
|---|---|---|
| செயல்பாடுகளிலிருந்து ஈட்டிய வருவாய் | 279.40 | 353.97 |
| இதர வருவாய் | 5.61 | 27.88 |
| **மொத்தம்** | **285.01** | **381.85** |
| நிகர லாபம் | 228.79 | 337.79 |
| அரசுக்கு செலுத்தப்பட்ட ஈவுத்தொகை | 204.01 | அறிவிக்கப்படவுள்ளது. |

## 4. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக 1949ஆம் ஆண்டில் இந்திய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட முன்னோடி மாநில அளவிலான மேம்பாட்டு நிதி நிறுவனமாகும். இக்கழகம் மாநிலத்தில் உள்ள குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களின் நிதித்தேவையைப் பூர்த்தி செய்வதோடு முதல் தலைமுறை தொழில் முனைவோர்களின் கனவுகளை நனவாக்குவதன் மூலம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி மேம்பட வழிவகுக்கிறது. இக்கழகத்தின் நிதி உதவியில், 90 விழுக்காடுக்கு மேலாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

கடந்த 74 ஆண்டுகளாக, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் குறிப்பிடத்தக்க அளவில் பங்காற்றியுள்ளது. மேலும், 1,33,000 தொழில் முனைவோர்களின் கனவுகளை நனவாக்கியுள்ளது. இந்நிறுவனம் 31.03.2024 வரை 1,33,889 நிறுவனங்களுக்கு ரூ.24,705.80 கோடி

அளவிற்கு கடன் அனுமதி வழங்கியுள்ளது. இக்கழகம் 2003–04ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கடந்த 21 வருடங்களாக இலாபம் ஈட்டி வருகிறது. தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வரும் ஆதரவினாலும், இக்கழகத்தில் பணியாற்றும் ஊழியர்களின் தொடர் முயற்சியுடனும் 2023–24ஆம் நிதியாண்டில், இக்கழகம் ரூ.139 கோடி (தற்காலிகம்) நிகர லாபத்தை ஈட்டியுள்ளது.

இந்நிறுவனம் நிதிச் செயல்திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்தியதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தேவையான கடனுதவியை வழங்கி, முதன்மையான கடன் வழங்கும் நிறுவனமாக தன்னை மாற்றிக் கொண்டு 2022–23 ஆம் நிதியாண்டில், இக்கழகம் தனது நிர்வாகக் கடன் தொகையை (நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துக்கள்) குறிப்பிடத்தக்க நிதிச் செயல்திறனுடன் ரூ.2526.77 கோடியை எட்டியது. இதன் விளைவாக, இந்நிறுவனத்தின் தரம் "BBB+" இல் இருந்து "A" ஆக முன்னேறியுள்ளது. இந்நிறுவனம் இதே நிலையான வளர்ச்சி

உத்வேகத்துடன் செயல்பட்டு கடந்த ஆண்டை விட 8.95 சதவிகிதம் வளர்ச்சி விகிதத்துடன் 2023–24ஆம் ஆண்டு, அதிகபட்ச கடன் தொகுப்புத் தொகை ரூ.2753.07 கோடியை எட்டியுள்ளது.

இக்கழகம் 2015–16ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஈவுத்தொகை வழங்கி வருகிறது. கடந்த 2022–23 ஆம் நிதியாண்டின் ஈவுத் தொகையான ரூ.15.17 கோடியினை தமிழ்நாடு அரசிடம் இக்கழகம் வழங்கியுள்ளது.

### 4.1 கடன் தொகுப்பு தொகை

இந்நிறுவனத்தின் மொத்த கடன் தொகுப்பு தொகை 31.03.2024–ன்படி 2753.07 கோடி ரூபாயாக உள்ளது. இதன் தொழில் வாரியான சதவிகிதம் பின்வருமாறு:

| துறைகள் | துறை வெளிப்பாடு (%) |
|---|---|
| பொறியியல் | 17.66 |
| மின்னணு மற்றும் மின்சார | 17.42 |
| நெகிழி | 13.17 |
| உணவு பதப்படுத்துதல் | 11.25 |
| பட்டி நிதியுதவி திட்டம் | 10.42 |
| ஜவுளித் துறை | 8.53 |
| ஆட்டோமொபைல் | 6.52 |
| கல்குவாரி மற்றும் களிமண் அலகுகள் | 5.34 |
| இதர துறைகள் | 9.69 |

## 4.2. நிதித் திட்டங்கள்

இந்நிறுவனம் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனத்திற்கான கடன் வழங்கும் உச்சவரம்பை ரூ.59 கோடியாகவும், கூட்டாண்மை மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மை நிறுவனங்களுக்கு ரூ.39 கோடியாகவும், தனியுரிமை / ஒரு மனித நிறுவனத்திற்கு ரூ.31 கோடியாகவும் வகைப்படுத்தியுள்ளது.

தொழில்முனைவோரின் மாறுபட்ட நிதித் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக இக்கழகம், ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் கடன் திட்டங்களை, 2023–24 ஆம் ஆண்டு 15 திட்டங்களாக திருத்தியமைத்துள்ளது. இக்கழகத்தால் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வரும் சில முக்கிய கடன் திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### 4.2.1 பொது காலக்கடன் (General Term Loan)

இக்கழகம், தொழில் நிறுவனங்களின் புதிய திட்டங்கள் மற்றும் நடைமுறையில் உள்ள திட்டங்களின் விரிவாக்கம், நவீனமயமாக்கல் மற்றும் பல்வகைப்படுத்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும்

திட்டங்களுக்கு காலக் கடன் மூலம் கடனுதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 2023–24ஆம் நிதியாண்டில் 248 தொழில் முனைவோர்களுக்கு ரூ.320.72 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.2. எளிய நடைமுறை மூலதனத் திட்டம் (Flexi Working Capital Term Loan)

உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்களின் நடைமுறை மூலதனத் தேவைகளை தொடர்ந்து பூர்த்தி செய்யும் விதமாக இந்த எளிய நடைமுறைக் காலக் கடன் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் புதிய தொழில் நிறுவனங்களுக்கு அதிகபட்ச கடனுதவியாக ரூ.1 கோடியும், ஏற்கனவே இயங்கிவரும் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.4 கோடியும், கடனுதவியாக வழங்கப்படுகிறது. மேலும் கடன் பெற்ற நிறுவனங்கள் மேற்படி கடனை ஒரு வருடத்திற்குப் பிறகு புதுப்பிப்பதற்கான வசதியும் அல்லது 30 மாதத்தவணைகளில் கடனை திருப்பிச் செலுத்தவும் வசதி உள்ளது. இத்திட்டத்தின் கீழ், 2023–2024ஆம் நிதியாண்டில், 84 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.63.60 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.3. இயந்திர நிதியுதவித் திட்டம் (Machinery Finance Scheme)

இக்கடன் திட்டம், திறம்பட கடனை திருப்பிச்செலுத்தும் தொழில் நிறுவனங்களுக்கு 0 முதல் 15 சதவிகித பங்களிப்பு தொகையுடன் 25 சதவிகிதத்திற்கு மிகாமல் குறைந்த பிணைய சொத்தின் அடிப்படையில், தொழில் நிறுவனங்கள் இயந்திர தளவாடங்கள் வாங்கி, விரிவாக்கம் / பல்வகைப்படுத்துதல் / நவீனமயமாக்கல் மற்றும் ஏற்கனவே உள்ள இயந்திரங்களை மாற்றுவதற்கும், துணைபுரிகிறது. 2023–24ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் 232 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.238.86 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.4. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (New Entrepreneur cum Enterprise Development Scheme – NEEDS)

படித்த இளைஞர்கள், முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவெடுக்க உதவுவதை குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில்

நிறுவன மேம்பாட்டு (NEEDS) திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இக்கழகம் பெரும் பங்கு வகிக்கிறது. இந்த திட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசு 25 சதவிகிதம் மூலதன மானியமும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மாற்றுத் திறனாளி தொழில் முனைவோர்களுக்கு 10 சதவிகித கூடுதல் மூலதன மானியமும் வழங்குகிறது. இதன் மூலம் அதிகபட்சமாக ரூ.75 இலட்சம் வரை மூலதன மானியம் கிடைக்கும். மேலும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்களுக்கு 3 சதவிகிதம் வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தொழில் முனைவோரின் சொந்த மூலதனமாக, சிறப்பு பிரிவினருக்கு, அதாவது மகளிர், மாற்றுத் திறனாளிகள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு 5 சதவிகிதமாகவும், மற்ற பிரிவினருக்கு 10 சதவிகிதமாகவும் இருப்பது, இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத்திட்டத்தின் கீழ் 31.03.2023 வரை 1044 முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கு ரூ.72.71 கோடி மூலதன மானியத்துடன் ரூ.618.93 கோடி கடன் அனுமதி

வழங்கப்பட்டுள்ளது. 2023-24ஆம் நிதி ஆண்டில், 67 தொழில் முனைவோருக்கு ரூ.13.74 கோடி மூலதன மானியத்துடன் ரூ.53.64 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**4.2.5. அண்ணல் அம்பேத்கர் வணிக சாம்பியன்ஸ் திட்டம் (Annal Ambedkar Business Champions Scheme)**

2023ஆம் ஆண்டு ஜூலை மாதம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியின (SC/ST) தொழில்முனைவோர் புதிய தொழில் நிறுவனங்களை நிறுவுவதற்கும், வளர்ச்சி அடைவதற்கும் "அண்ணல் அம்பேத்கர் வணிக சாம்பியன்ஸ் திட்டம் (AABCS)" என்ற புதிய திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. தமிழ்நாடு அரசு 35 சதவிகித மூலதன மானியமும், 10 ஆண்டுகளுக்கு மிகாமல் 6 சதவிகித வட்டி மானியத்தையும் வழங்குகிறது. 2023-24ஆம் நிதி ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 4 தொழில் முனைவோர்களுக்கு ரூ.0.37 கோடி மூலதன மானியத்துடன் ரூ.4.17 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.6. தொழில் உள்கட்டமைப்பு முன்னெடுப்பு திட்டம் (Industrial Infrastructure Initiative Scheme)

இத்திட்டத்தின் கீழ், புதிய மற்றும் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள நிறுவனங்கள் சிட்கோ / சிப்காட் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தொழில் மனைகளை வாங்குவதற்கு தேவையான நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தின் மூலம் சிட்கோ / சிப்காட் நிறுவனங்களிடமிருந்து தொழிற்கூடங்களுக்கான நிலம் வாங்குவதற்கு, இந்தத் துறைகளுடன் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்படி பெறப்பட்ட ஒதுக்கீடு உத்தரவின் அடிப்படையில் நிதி உதவி வழங்கப்படுகிறது. 2023–24ஆம் நிதி ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 39 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.52.97 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.7. பெருநிறுவன கடன் திட்டம் (Corporate Loan Scheme)

தொழில் நிறுவனங்களின் எதிர்பாராத முதலீடு மற்றும் அவசரச் செலவினங்கள் மேற்கொள்வதற்கு ஏதுவாக, ரூ.10 கோடி உச்சவரம்புடன் கூடிய கடனுதவி அளிக்க இத்திட்டம் வகை செய்கிறது.

2023–24ஆம் நிதியாண்டில், இந்தத் திட்டத்தின் கீழ் 26 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.45.73 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**4.2.8. பட்டியல் நிதியுதவி திட்டம் (Bills Financing Scheme)**

இக்கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழக நிறுவனம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றின் வழங்குநர்கள் / ஒப்பந்ததாரர்களுக்கு தள்ளுபடி செய்யப்பட்ட பட்டியல் நிதியுதவி இத்திட்டத்தின் மூலம் ரூ.59 கோடி உச்சவரம்புடன், பிணையில்லா கடன் உதவி வழங்கி வருகிறது. மேலும் இக்கழகம் பட்டி நிதியுதவி திட்டத்தின் கீழ் தங்களது நிர்வாக கடன் தொகையை உயர்த்த ஏதுவாக "வர்த்தக வரவுகள் தள்ளுபடி அமைப்பில்" (TN Trade Receivables Discounting System–TReDS) அங்கத்தினராகி உள்ளது. 2023–24ஆம் நிதியாண்டில், இந்தத் திட்டத்தின் கீழ் 86 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.437.49 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.9. திறந்த கால கடன் திட்டம் (Open Term Loan Scheme)

இக்கழகத்தில் கடன் தொகை பெற்று மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நல்ல முறையில் கடனை திருப்பிச்செலுத்தும் தொழில் நிறுவனங்களுக்கு, இத்திட்டம் உதவிபுரிகிறது. இத்திட்டத்தின் மூலம் அதிகபட்ச உச்சவரம்பாக ரூ.2 கோடி வரை கடனுதவி வழங்கப்படுகிறது. 2023–2024ஆம் நிதியாண்டில், இந்தத் திட்டத்தின் கீழ் 58 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.49.69 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.10 சிறப்பு வாடிக்கையாளர் திட்டம் (Privileged Customer Scheme)

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தில் நிதியுதவி பெற்று நல்ல முறையில் சிறப்பாக செயல்பட்டுவரும் நிறுவனங்களுக்கு, அவர்களது அவசர மற்றும் தொழில் ரீதியான தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தொழில் முனைவோரின் சொந்த மூலதனம் இன்றி இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அதிகபட்ச உச்சவரம்பு கடன் தொகையாக

ரூ.2 கோடி வரை வழங்கப்படுகிறது. 2023–2024ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் 228 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.141.18 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.11. நிதிநுட்பத் திட்டம் (Fintech Scheme)

இத்திட்டத்தின் கீழ், மதிப்பிடப்பட்ட வங்கி அல்லாத நிதிநுட்ப நிறுவனங்களுக்கு கடனுதவி அளிக்கப்படுகிறது. நிதிநுட்ப நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடனுதவி வழங்கி உதவி புரிவதற்கும், சிறிய சாலை போக்குவரத்து வாகனங்களை வாங்குவதற்கு நிதியுதவி அளிப்பதற்கும், நிதிநுட்ப நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், அதிகபட்ச கடன் தொகையாக ரூ.15 கோடி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 2023–24 ஆம் நிதியாண்டில் ரூ.13.50 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**4.2.12. மைக்ரோ கடன் திட்டம் (Micro Finance Scheme)**

இத்திட்டம், ஏற்கனவே தொடங்கப்பட்ட மற்றும் மதிப்பிடப்பட்ட மைக்ரோ நிதி நிறுவனங்களுக்கு (MFI) கடனுதவி வழங்குவதற்காக தொடங்கப்பட்ட திட்டம். மைக்ரோ நிதி நிறுவனங்கள், தங்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை மூலம், சிறு நிறுவனங்கள் / சுய உதவிக் குழுக்கள் / தனிநபர்கள் (ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்படாத துறைகள்) ஆகியவற்றிக்கு கடனுதவி வழங்கும். இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அதிகபட்ச நிதி உதவி ரூ.15 கோடி ஆகும். 2023-24ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.10 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**4.2.13. வெள்ள நிவாரணத் திட்டம் (Flood Relief Scheme)**

2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மிக்ஜாங் (Michaung) புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டமான சென்னை மற்றும் அதை ஒட்டிய மாவட்டங்கள் மற்றும் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உதவுவதற்காக

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சிறப்பு "குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான வெள்ள நிவாரணத் திட்டம்" அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களான சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தங்கள் வணிகத்தை மீண்டும் புதுப்பிக்க இத்திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ், 3330 உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், ஒரு தொழில் நிறுவனத்திற்கு ரூ.3 இலட்சம் வரையில், ஆண்டொன்றுக்கு 6 சதவிகித சிறப்புச் சலுகை வட்டி விகிதத்தில் கடன் அனுமதி வழங்குவதற்காக ரூ.100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த கடன் தொகையை 3 மாத கால அவகாசம் நீங்கலாக 18 மாதாந்திர தவணைகளில், தொழில் நிறுவனங்கள் திருப்பிச் செலுத்த வேண்டும் மற்றும் இத்திட்டத்தால்

வழங்கப்படும் கடன் தொகை, தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டத்தின் (TNCGS) கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 13.05.2024 வரை ரூ.108.41 கோடி மதிப்பிலான 3723 கடன் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 2363 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.61.37 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.3. மானியம் (Subsidy)

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் கடன் பெற்று நிறுவப்பட்ட நிறுவனங்களுக்கு, இக்கழகம் அரசு வழங்கும் பல்வேறு மானியங்களுக்கான முகவராக செயல்பட்டு வருகிறது.

#### 4.3.1 பின்தங்கிய பகுதிகள் மற்றும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான சிறப்பு மூலதன மானியம் (Backward area subsidy and Specific Thrust Sector Subsidy)

மாநிலத்தின் பின்தங்கிய ஒன்றியங்கள் மற்றும் சிப்காட் / சிட்கோ தொழிற்பேட்டைகளில் அமைக்கப்படும் நிறுவனங்களுக்கும், முன்னுரிமை உற்பத்தி நிறுவனங்களுக்கும், இயந்திர மதிப்பீட்டில்

25 சதவிகிதம், அதிகபட்சமாக ரூ.150 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. 2023-2024ஆம் ஆண்டில், இக்கழகம் மாநில மூலதன மானியமாக (State Capital Subsidy) ரூ.40.39 கோடியை 197 பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது.

**4.3.2. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான வட்டி மானிய திட்டம் (Interest Subvention Scheme for MSMEs)**

இக்கழகத்தால் கடன் உதவி பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் திறமையாக செயல்பட, சலுகை வட்டி விகிதத்தில் கடன் பெற உதவும் வகையில், தமிழ்நாடு அரசின் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 3 சதவிகித வட்டி மானியமும், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு 6 சதவிகித வட்டி மானியமும் கொண்ட வட்டி மானிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 3 சதவிகித வட்டி மானியத்தின் கீழ், இக்கழகம் ரூ.2763.51 கோடி வரையிலும், 6 சதவிகித வட்டி மானியத்தின் கீழ், ரூ.1569.33 கோடி வரையிலும் கடனுதவி வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு, 31.03.2024 வரை,

3 சதவிகிதம் மற்றும் 6 சதவிகிதம் வட்டி மானிய திட்டத்தின் கீழ் முறையே ரூ.152.80 கோடி மற்றும் ரூ.107.11 கோடியை வட்டி மானியமாக வழங்கியுள்ளது.

**4.3.3. 5% பின் வழங்கு வட்டி மானியத் திட்டம் (Back Ended Interest Subsidy Scheme)**

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள், கடன் இணைக்கப்பட்ட மானிய திட்டத்தின் (CLCSS) வழிகாட்டுதல்களில் பட்டியலிடப்பட்டுள்ள, தொழில்நுட்ப மேம்படுத்தல் / நவீன மயமாக்கலுக்கான இயந்திரங்களை, வாங்கி பொருத்துவதற்கு ஏதுவாக 5 சதவிகித பின் வழங்கு வட்டி மானியத் திட்டத்தை இக்கழகம் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், ரூ.5 கோடி வரை அனுமதிக்கப்பட்ட கடன் தொகைக்கு, அதிகபட்ச வட்டி மானியமாக ரூ.25 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. இக்கழகம், இத்திட்டத்தின் மூலம் 2023–2024ஆம் நிதியாண்டில், 235 பயனாளிகளுக்கு 5 சதவிகித பின் வழங்கு வட்டி மானியமாக ரூ.4.70 கோடியை வழங்கியுள்ளது.

**4.4. நிதிநிலை செயல்பாடு**

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 2022-23 நிதியாண்டில் ரூ.1777.03 கோடி கடன் அனுமதி வழங்கி, ரூ.1720.44 கோடி கடன் தொகை விடுவித்துள்ளது. இக்கழகத்தின் நிர்வாக கடன் தொகை ரூ.2517.73 கோடியாக இருந்தது. மேலும் ரூ.185.54 கோடி செயல்பாட்டு இலாபத்துடன், நிகர இலாபமாக ரூ.136.15 கோடியை ஈட்டி, தமிழ்நாடு அரசுக்கு ஈவுத்தொகையாக ரூ.15.17 கோடியினை செலுத்தியுள்ளது.

## 5. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தை, கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாக கொண்டு செய்தித்தாள், அச்சு மற்றும் எழுது காகிதம் தயாரிக்க, 1979 ஆம் ஆண்டு நிறுவியது. இந்நிறுவனத்தின் அலகு 1 ஆலை கரூர் மாவட்டம் புகளூரில் நிறுவப்பட்டது. ஆண்டொன்றுக்கு 90,000 டன் காகித உற்பத்தி திறன் கொண்ட காகித ஆலை 1985 ஆம் ஆண்டு செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. பல்வேறு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆலையின் செயல்முறை மேம்பாட்டின் மூலமாக தற்போது, ஆலையின் காகித உற்பத்தி திறன் ஆண்டொன்றுக்கு 4,00,000 டன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், ஆண்டொன்றுக்கு 2,00,000 டன் திறன் கொண்ட, இருபுறமும் பூச்சிடப்பட்ட பன்னடுக்கு காகித அட்டை தயாரிக்கும் ஆலையை (அலகு–2) 2016ஆம் ஆண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் நிறுவியது.

இந்நிறுவனத்தின் காகிதம் மற்றும் பன்னடுக்கு காகித அட்டையின் மொத்த உற்பத்தி ஆண்டொன்றுக்கு 6,00,000 டன் ஆகும். இதன் மூலம், இந்திய அளவில் மொத்த உற்பத்தியில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மூன்றாம் இடம் வகிக்கிறது. இதற்கேற்ப ஆலையின் மொத்த காகித கூழ் உற்பத்தியும் (அலகு 1 மற்றும் 2) அதிகரிக்கப்பட்டுள்ளது (நாளொன்றுக்கு 1580 டன்).

பயனாளர்களின் தேவைகளுக்கேற்ப உயர்ரக காகிதங்கள் மற்றும் பன்னடுக்கு காகித அட்டைகளை இந்நிறுவனம் தயாரித்து வருகிறது. தனது உற்பத்திப் பொருட்களை, இந்தியா முழுவதும் விற்பனை செய்து வருவதோடு, தனது காகித உற்பத்தியில் சுமார் 20 சதவிகிதத்தை, உலகளவில் 35–க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இந்நிறுவனம் அச்சு மற்றும் எழுது காகிதம் ஏற்றுமதியில் இந்தியாவின் மிகப்பெரும் ஏற்றுமதியாளராக திகழ்கிறது.

**5.1 சிமெண்ட் ஆலை**

காகித தயாரிப்பின்போது உருவாகும் திடக்கழிவுகளான சுண்ணாம்பு சேற்றையும், எரிசாம்பலையும் பயன்படுத்தி, இந்நிறுவனம் ஆண்டொன்றுக்கு 2,97,000 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட, சிமெண்ட் தொழிற்சாலையை நிறுவியுள்ளது.

**5.2 மூலப்பொருளுக்கான ஒப்பந்த விவசாயம்**

வளர்ந்து வரும் மூலப்பொருள் தேவையைப் பூர்த்தி செய்யவும், கூழ் மரத்தில் தன்னிறைவு பெறவும், இரண்டு ஒப்பந்த விவசாயத் திட்டங்களை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதாவது பண்ணைக் காடுகள் மற்றும் மூலதனக் காடுகள் வளர்ப்பு திட்டங்கள். இந்தத் திட்டங்களின் கீழ், விவசாயிகளின் பங்கேற்புடன் கூழ் மரத்தோட்டத்தை இந்நிறுவனம் செயல்படுத்துகிறது. 31.03.2024 வரையில், தமிழ்நாடு முழுவதும், 51,676 விவசாயிகளை ஈடுபடுத்தி 2,56,756 ஏக்கர் நிலப்பரப்பில் கூழ் மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன.

**5.3 மின்சார உற்பத்தி**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மின் உற்பத்தியில் தன்னிறைவினைப் பெற்றுள்ளது. ஆலையின் சுய தேவைக்காக, 103.62 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்திப் பிரிவினை காகித ஆலையின் வளாகத்திலும் மற்றும் 50 மெகாவாட் மின் உற்பத்திப் பிரிவினை பன்னடுக்கு காகித அட்டை வளாகத்திலும் நிறுவியுள்ளது. மேலும், 35.5 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு காற்றாலை பிரிவுகளை திருநெல்வேலி மாவட்டத்தில் நிறுவியுள்ளது. ஆலையின் தேவைக்குப் பின் மீதமுள்ள உபரி மின்சாரம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**5.4 பங்கு விகிதாச்சாரம்**

இந்நிறுவனத்தில், தமிழ்நாடு அரசு 35.32 விழுக்காடு பங்கும், தமிழ்நாடு அரசு சார்ந்த நிறுவனங்கள் 4.06 விழுக்காடு பங்கும் வைத்துள்ளன. மீதமுள்ள பங்குகள் வெளிநாட்டு நிதி முதலீட்டாளர்கள், இந்திய நிதி நிறுவனங்கள்,

பரஸ்பரநிதிகள், கூட்டாண்மை அமைப்புகள், காப்பீட்டு நிறுவனங்கள் பெருநிறுவன அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் வசம் உள்ளன.

## 5.5 உற்பத்தி மற்றும் பயன்பாட்டளவு

| | | |
|---|---|---|
| காகித உற்பத்தி | : | 4,22,742 டன் |
| பயன்பாட்டளவு | : | 106 சதவிகிதம் |
| காகித அட்டை உற்பத்தி | : | 1,95,437 டன் |
| பயன்பாட்டளவு | : | 98 சதவிகிதம் |
| சிமெண்ட் உற்பத்தி | : | 2,00,155 டன் |
| பயன்பாட்டளவு | : | 67 சதவிகிதம் |

31 மார்ச் 2024 வரை, 3,81,860 டன் காகிதம் மற்றும் 1,77,748 டன் காகித அட்டையும் விற்பனை செய்துள்ளது.

## 5.6 மொத்த வருவாய் மற்றும் இலாபம்

31 மார்ச் 2024 வரையில் மொத்த வருவாய் ரூ.4761.80 கோடியாகும். 31 மார்ச் 2024 வரையில் வரிக்கு முந்தைய இலாபம் ரூ.324.76 கோடி மற்றும் வரிக்குப் பிந்தைய இலாபம் ரூ.208.16 கோடியாகும். இந்நிறுவனத்தின் 2022–2023 நிதியாண்டில் வரிக்குப் பிந்தைய இலாபம் ரூ.387.87 கோடியாகும்.

**5.7 ஈவுத் தொகை**

இந்நிறுவனம் 2022–23ஆம் நிதி ஆண்டிற்கான ஈவுத் தொகையாக, 50 விழுக்காட்டினை, பங்குதாரர்களுக்கு வழங்கியுள்ளது. இதன்படி, இந்நிறுவனம், 2022–23ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசுக்கு ஈவுத் தொகையாக ரூ.12.22 கோடியினை வழங்கியுள்ளது. இந்நிறுவனம் 2023–2024ஆம் நிதியாண்டிற்கான இடைக்கால ஈவுத்தொகையாக 30% (ரூ.7.33 கோடி பகிர்ந்தளிக்கப்பட்டது) மேலும் 10% (ரூ.2.44 கோடி) இறுதி ஈவுத் தொகையை அனுப்பப்பட உள்ளது.

**5.8 ஏற்றுமதி**

31 மார்ச் 2024 வரையில், இந்நிறுவனம் 83,718 டன் காகிதத்தையும் மற்றும் 4,807 டன் காகித அட்டைகளையும் ஏற்றுமதி செய்துள்ளது.

**5.9 வேலை வாய்ப்பு**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சுமார் 3000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையும், ஏறத்தாழ 3000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பினையும் அளித்து வருகிறது.

## 5.10 திட்டங்கள்

### 5.10.1 TNPL அலகு–1 ல் நீராவி மற்றும் மின் ஆலை மறுசீரமைப்பு

இந்நிறுவனத்தின் செயல்பாட்டிற்கான நீராவி மற்றும் மின்சாரம் போன்ற பயன்பாடுகளை நம்பகமான முறையில் வழங்குவதற்காக அலகு–1ல் ஏற்கனவே உள்ள நீராவி மற்றும் மின்னாக்கி அமைப்பை மறுசீரமைத்தல் பலகட்டங்களாக செய்யப்படுகின்றன. இந்நிறுவனம் 1985ல் தொடங்கப்பட்டபோது நிறுவப்பட்ட பழைய குறைந்த அழுத்த கொதிகலன்களை சில கட்டங்களாக பயன்பாட்டிலிருந்து நீக்கவும், மாற்றவும் முடிவு எடுக்கப்பட்டதன் அடிப்படையில், இரண்டு உயர் அழுத்த கொதிகலன்களை நிறுவ முன்மொழியப்பட்டது. முதல் கட்டத்தின் ஒரு பகுதியாக, ரூ.100 கோடி மதிப்பீட்டில் அதன் துணைப் பொருட்களுடன் கூடிய உயர் அழுத்த கொதிகலன் கொள்முதல் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணி ஜூன் 2026–க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.10.2 TNPL அலகு I & II இல் மேற்கூரை சூரிய மின் நிலையம்

சுற்றுச்சூழல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டிற்கு இணங்க, ஒரு மெகாவாட் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் இந்நிறுவனத்தின் இரண்டு அலகுகளிலும் கட்டிடங்களின் மேற்கூரையின் மேல் நிறுவப்படுகின்றன. ரூ.8 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம், கார்பன் தடயத்தைக் குறைப்பதற்கான நிறுவனத்தின் முயற்சிகளுக்குப் பங்களிக்கும். இத்திட்டப்பணிகள் ஜூலை 2024–க்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.11 சமூக நல நடவடிக்கைகள்

நிறுவனத்தின் முந்தைய 3 நிதி ஆண்டுகளில் பெற்ற சராசரி நிகர இலாபத்தில் 2 சதவிகித இலாபத் தொகையினை சமுதாய நலப்பணிகளுக்காக செலவழித்து வருகிறது. கல்வி, சுகாதாரம், கட்டுமானம், பொருளாதார மேம்பாடு, சுற்றுச்சூழல், குடிநீர் வசதி, கலாச்சாரம் மற்றும் மரபுகள் மேம்பாடு

போன்ற சமுதாயப் பணிகளை, நிறுவன சமூக பொறுப்பு நடவடிக்கைகளின் பகுதியாக, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், செயல்படுத்தி வருகிறது. 2023–24ஆம் ஆண்டில் சமுதாய நலப்பணிகளுக்காக சுமார் ரூ.3.71 கோடி இந்நிறுவனம் செலவழித்து உள்ளது.

**5.12 பெருநிறுவனங்களின் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு**

2022–23ல் பல்வேறு சுற்றுச்சூழல் பொறுப்பு நடவடிக்கைகளுக்காக, கல்வி, சுகாதாரம், சமூக பொருளாதார மேம்பாடு, சுற்றுச்சூழல் மற்றும் பாரம்பரிய மேம்பாடு, கலாச்சாரம் போன்ற பணிகளுக்காக ரூ.66.60 இலட்சம் செலவழித்து உள்ளது. இந்நிறுவனம் 2023–24ஆம் ஆண்டில் இதுவரை ரூ.1.04 கோடி சுற்றுச்சூழல் பொறுப்பு நடவடிக்கைகளுக்காக செலவிட்டுள்ளது.

**விருதுகள்**

- புது தில்லி Institute of Directors அமைப்பால் 2024 ஆம் ஆண்டிற்கான "Golden Peacock Business Excellence" வெற்றியாளர் விருது தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது.
- மும்பையில் உள்ள "World Manufacturing Congress" அமைப்பால் 2024 ஆம் ஆண்டிற்கான "மிகவும் நிலையான மற்றும் புதுமையான உற்பத்தி நடைமுறைகள்" என்ற பட்டம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனமானது பாதுகாப்பு சிறப்புகளில் அதன் சிறந்த சாதனைகளுக்காக 8வது ஆண்டு "OHSSAI HSE Excellence & ESG Global Award 2023"இன் "வெற்றியாளர்"ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு 2024 ஆம் ஆண்டின் சிறந்த தொழில்நுட்ப கொள்முதல் பிரிவில் மதிப்பிற்குரிய "வெற்றியாளர்" பட்டத்தை மும்பையை சார்ந்த Invention Business Intelligence, Mumbai நிறுவனம் வழங்கியுள்ளது.

- சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் சிறந்த பங்களிப்பிற்காகவும் மற்றும் தர மேம்பாட்டில் சிறந்த சாதனைகளுக்காகவும் 23–வது வருடாந்திர "Greentech Environment Awards 2023" இல் "வெற்றியாளர்" ஆக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனமானது அங்கீகரிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது.
- செப்டம்பர் 2023 இல் ஹைதராபாத்தில் உள்ள CII அமைப்பின் ஆற்றல் மேலாண்மை நிறுவனத்தில் சிறந்து விளங்குவதற்கான 24வது தேசிய விருதின் போது, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஆற்றல் திறனுக்கான அர்ப்பணிப்புக்கு, இரண்டு மதிப்புமிக்க விருதுகளுடன் அங்கீகரிக்கப்பட்டது.
- 11th Golden Globe Tigers Award 2023" என்ற பிரிவில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு "சிறந்த மனிதவள நிறுவனம்" மற்றும் "சிறந்த நிறுவன சமூகப் பொறுப்பு நடைமுறைகள்" என்றும் மும்பையை சார்ந்த "Fun and Joy at Work" என்ற நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது.

## 6. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) 1969ஆம் ஆண்டில் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை துவக்கியது. இதன் மூலம் இந்தியாவிலேயே பொதுத்துறையில் சிமெண்ட் உற்பத்தி செய்யும் முதல் மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாடு பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) 11.02.1976 அன்று டிட்கோ நிறுவனத்திற்கு முழுமையாக சொந்தமான துணை நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு, 31.12.1994 முதல் அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனமாக இயங்கி வருகிறது.

தற்பொழுது, டான்செம் நிறுவனம், அரியலூர் மாவட்டம் அரியலூரில் ஆண்டொன்றுக்கு 15 இலட்சம் மெட்ரிக் டன் சிமெண்ட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு ஆலைகளையும், விருதுநகர் மாவட்டம் ஆலங்குளத்தில் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் மெட்ரிக் டன் சிமெண்ட் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு ஆலையையும் இயக்கி வருகிறது.

டான்செம் நிறுவனம் தற்போது அரசு, அரசு சூப்பர் ஸ்டார், வலிமை மற்றும் வலிமை சூப்பர் ஸ்டார் என நான்கு விதமான தரவகை பெயர்களில் (Brand) சிமெண்ட் விற்பனை செய்து வருகிறது. அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டத்திற்கான மாநில அளவிலான முகமையாகவும் டான்செம் நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட மக்களின் நலனுக்காக ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான சிமெண்ட்டை அரசு நிர்ணயித்த விலையில் டான்செம் நிறுவனம் விநியோகம் செய்து வருகிறது. மேலும், டான்செம் நிறுவனம், தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களை விட கணிசமாக குறைவான விலையில் வெளிச்சந்தையில் சிமெண்டை விற்பனை செய்து வருவதன் மூலம் வெளிச்சந்தையில் சிமெண்ட் விலையை கட்டுப்படுத்த உதவுகிறது.

டான்செம் நிறுவனம், சுமார் 1165 தொழிலாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையும், சுமார்

3000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் வழங்கி வருகிறது.

டான்செம் நிறுவனம், தரத்திற்காக வழங்கப்படும் ISO 9001:2015 தரச் சான்றிதழ் பெற்றுள்ளது. மேலும் ISO 14001:2015 (சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு) மற்றும் ISO 45001:2018 (தொழில்சார் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேலாண்மை அமைப்பு) சான்றிதழ் பெற நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் மூலம் சிமெண்டின் தரம் உறுதி செய்யப்படுவதுடன், சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை பேணப்படுவதால் திறந்த வெளிச்சந்தையில் டான்செம் நிறுவனத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது.

### 6.1 வெளிச்சந்தையில் சிமெண்ட் விற்பனை

டான்செம் நிறுவனம் வெளிச்சந்தையில் முகவர்கள் மூலம் சிமெண்ட் விற்பனை செய்து வருகிறது. இதன் மூலமாக வெளிச்சந்தையில் சிமெண்ட் விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடிகிறது. டான்செம் நிறுவனம் 2022-23ஆம் ஆண்டில் 13,14,694 மெட்ரிக் டன் சிமெண்ட்

மற்றும் 2023-24ஆம் ஆண்டில் 10,71,285 மெ.டன் சிமெண்ட் விற்பனை செய்துள்ளது. தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்கள் விற்பனை விலையை குறைத்ததாலும், கட்டிட பணிகளின் தேக்கத்தினாலும் மற்றும் காலநிலை மாற்றத்தினாலும் டான்செம் விற்பனை குறைந்ததற்கு காரணங்களாகும்.

### 6.2 அரசு துறைகளுக்கு சிமெண்ட் விற்பனை

சிமெண்ட் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு பல்வேறு அரசுத் துறைகள், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கட்டுமான பணிகளுக்கு நியாயமான விலையில் உயர்ரக சிமெண்டினை விநியோகம் செய்து வருகிறது. டான்செம் நிறுவனம் 2023-24ஆம் ஆண்டில், 2,23,514 மெ.டன் சிமெண்ட் அரசுத் துறைகளுக்கு விநியோகம் செய்துள்ளது.

### 6.3 வலிமை சிமெண்ட்

பொதுமக்களுக்கு நியாயமான விலையில் சிமெண்ட் விற்பனை செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் "வலிமை சிமெண்ட்" என்ற புதிய உயர்ரக சிமெண்ட் 16.11.2021 அன்று

அறிமுகப்படுத்தப்பட்டது. வலிமை என்ற புதிய சிமெண்ட் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்கள் சந்தையில் தங்களது சிமெண்ட் விலையை வெகுவாகக் குறைத்து, இதன் மூலம் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் சிமெண்ட் கிடைக்க டான்செம் நிறுவனம் வழிவகுத்தது. வலிமை சிமெண்ட் விற்பனை துவங்கியது முதல் மார்ச் 2024ஆம் ஆண்டு வரை 20 இலட்சம் மெ. டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது, மேலும் 2023-24ஆம் நிதியாண்டில், 9.68 இலட்சம் மெட்ரிக் டன் வலிமை சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 6.4 சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள்

சிமெண்ட் உற்பத்திக்கு சுண்ணாம்புக்கல் முக்கிய மூலப்பொருளாகும். டான்செம் நிறுவனம், அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் ஆலங்குளம் ஆகிய இடங்களில் சுண்ணாம்புக்கல் சுரங்கங்களைக் கொண்டுள்ளது.

**அ) ஆலங்குளம் சிமெண்ட் ஆலையின் சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள்**

ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, அரசால் வழங்கப்பட்ட ஐந்து சுண்ணாம்புக்கல் சுரங்க குத்தகை உரிமங்களை கொண்டுள்ளது. 901.76.0 ஹெக்டேர் பரப்பளவில் சுரங்கங்கள் உள்ளன. மேலும் 31 மில்லியன் டன் சுண்ணாம்புக்கல் இருப்பு உள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. டான்செம் நிறுவனம் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் பந்தப்புள்ளி சுண்ணாம்புக்கல் சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற்றுள்ளது. மேலும் நான்கு சுரங்க குத்தகைகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆ) அரியலூர் சிமெண்ட் ஆலையின் சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள்**

அரியலூர் சிமெண்ட் ஆலை அரசால் வழங்கப்பட்ட 703.79 ஹெக்டேர் நிலப்பரப்புடைய எட்டு சுண்ணாம்புக்கல் சுரங்க குத்தகை உரிமங்களை கொண்டுள்ளது, மொத்த பயன்படுத்தக் கூடிய சுண்ணாம்புக்கல் கனிம இருப்பு 63 மில்லியன் டன்கள் என்று மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது,

இதன் மூலம் அரியலூர் சிமெண்ட் ஆலையை நீண்ட காலம் இயக்க இயலும். டான்செம் நிறுவனம் ஆறு சுண்ணாம்புக்கல் சுரங்கங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற்றுள்ளது. மீதமுள்ள சுரங்கங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

## 6.5 அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம்

பொதுமக்களுக்கு சலுகை விலையில் சிமெண்ட் வழங்கும் நோக்கத்துடன் அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம் 05.01.2015 அன்று அறிமுகப்படுத்தப் பட்டது. இத்திட்டத்தின் கீழ், நியமிக்கப்பட்ட ஏழு தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களிடமிருந்து சிமெண்ட் கொள்முதல் செய்யப்பட்டு, 11.12.2020 முதல் 501 கிடங்குகள் மூலம் மூட்டை ஒன்றுக்கு ரூ.216/– வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஒரு பயனாளிக்கு 100 சதுர அடிக்கு 50 மூட்டைகள் வீதம் அதிகபட்சமாக 1500 சதுர அடிக்கு 750 மூட்டைகள் வரை வழங்கப்படுகிறது. புதிய வீடு கட்ட விண்ணப்பிக்கும் பயனாளியின் தனி நபர் ஆண்டு வருமானம் மூன்று இலட்சத்திற்குள் இருக்க

வேண்டும். மேலும் வீடு பழுது பார்க்கும் பணிக்கு 10 மூட்டைகள் முதல் 25 மூட்டைகள் வரை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கிய முதல் 31.03.2024 வரை அம்மா சிமெண்ட் 57,85,853.30 மெட்ரிக் டன் (11,57,17,066 மூட்டைகள்) விற்பனை செய்யப்பட்டு இதன்மூலம் 19,58,248 பயனாளிகள் அம்மா சிமெண்ட் விற்பனை திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

## 6.6 2023-24ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

அ) மழைக்காலங்களில், அரியலூர் சிமெண்ட் ஆலையில் உள்ள நிலக்கரியை பாதுகாக்க ரூ.2.38 கோடி மதிப்பீட்டில் தற்போதுள்ள சேமிப்பு கிடங்குடன் கூடுதலாக 10,000 மெட்ரிக் டன் நிலக்கரி கொள்ளளவு கொண்ட புதிய நிலக்கரி சேமிப்பு கிடங்கினை கட்டியுள்ளது.

ஆ) அரியலூர் சிமெண்ட் ஆலையில் புதிய ஆலை சிமெண்ட் மில்லிலிருந்து நான்கு பழைய ஆலையின் சிமெண்ட் சைலோக்களுக்கு சிமெண்ட்டை கொண்டு சென்று சேமிப்பு திறனை அதிகரிக்க Air slide conveyor system அமைப்பை

டான்செம் நிறுவனம் ரூ.4.57 கோடி மதிப்பீட்டில் நிறுவியுள்ளது.

இ) அரியலூரில் உள்ள டான்செம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் தொழில்நுட்ப மேம்பட்ட கற்றல், கற்பித்தல் மற்றும் செயல்முறைகளுக்கான ஸ்மார்ட் வகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## 6.7 2023–2024ல் செயல்திறன்

2023–24ஆம் ஆண்டில், 12.95 இலட்சம் மெட்ரிக் டன் சிமெண்ட் உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளது. இதன் மூலம் டான்செம் நிறுவனம் ரூ.60.69 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது (வரிக்கு முந்தைய இலாபம்)

**உற்பத்தி மற்றும் நிதிச் செயல்திறன்**

| ஆலையின் பெயர் | 2022–23 | | | 2023–24 (தோராயமாக) | | |
|---|---|---|---|---|---|---|
| | உற்பத்தி (மெ.டன்) | விற்பனை (மெ.டன்) | நிகர இலாபம் / நட்டம் (ரூ. இலட்சத்தில்) | உற்பத்தி (மெ.டன்) | விற்பனை (மெ.டன்) | நிகர இலாபம்/ நட்டம் (ரூ. இலட்சத்தில்) |
| அரியலூர் சிமெண்ட் ஆலை – பழைய ஆலை | 4,88,636 | 4,85,844 | 4,211.40 | 2,85,465 | 2,87,728 | 1,231.07 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அரியலூர் சிமெண்ட் ஆலை – புதிய ஆலை | 9,62,685 | 9,59,618 | 8,422.72 | 7,72,900 | 7,72,131 | 4,558.30 |
| ஆலங்குளம் சிமெண்ட் ஆலை | 3,55,160 | 3,51,934 | 3,055.22 | 2,36,360 | 2,34,943 | 339.21 |
| ஆலங்குளம் கல்நார் தகடு ஆலை | – | – | –20.77 | – | – | –4.25 |
| விருத்தாசலம் கற்குழாய் ஆலை | – | – | –65.58 | – | – | –34.58 |
| அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம். | 2,80,485 | 2,80,159 | 35.05 | 1,51,380 | 1,49,914 | –20.15 |
| **மொத்தம்** | | | **15,638.04** | | | **6,069.60** |

## 7. தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி, அவர்களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்திடும் நோக்கில் 1974ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய செயல்பாடுகள், உப்பு மற்றும் உப்பின் உடன் விளை பொருட்களை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விற்பனை செய்வதாகும். தமிழ்நாடு அரசு, இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டத்தில் உள்ள வாலிநோக்கம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களைச் சார்ந்த 5,236 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கியது, மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டத்தில் 3,010 ஏக்கர் நிலத்தினை 2019ஆம் ஆண்டில் நீண்ட கால குத்தகைக்கு தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு வழங்கியது.

இந்நிறுவனம், 1976ஆம் ஆண்டு முதல், இராமநாதபுரம் மாவட்டத்தில் வணிக அடிப்படையில் உப்பு உற்பத்தியினைத் துவங்கியது. இதில் தொழிலக தரமுடைய உப்பு, அயோடின் உப்பு, இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவை அடங்கும்.

### 7.1 நிறுவனத்தின் செயல்பாடுகள்

**அ) தொழிலக தரமுடைய உப்பு உற்பத்தி**

தமிழ்நாடு உப்பு நிறுவனம், இராமநாதபுரம் மாவட்டம் மாரியூர் வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் ஆண்டிற்கு சராசரியாக 1.50 இலட்சம் டன் உப்பினை உற்பத்தி செய்கின்றது. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் மொத்த உற்பத்தியில் சுமார் 70 விழுக்காடு உப்பு குளோர் அல்கலி தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிறது, மீதம் 30 சதவிகித உப்பு அயோடின் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பாக மதிப்பு கூட்டப்பட்டு பொது விநியோகத் திட்டம் மற்றும் மதிய உணவு திட்டங்களுக்கு வழங்கப்படுகிறது. 2023–24ஆம் ஆண்டு 1,55,444 மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் 2024–25ஆம் ஆண்டில் 1.70 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் திருப்போரூரில் வழங்கியுள்ள 3010 ஏக்கர் நிலத்தில்

முதற்கட்டமாக 500 ஏக்கர் நிலத்தில் உப்பு உற்பத்திக்கான பணிகளை மேற்கொண்டுள்ளது. எனினும், பருவம் தவறிய மழை / தொடர்மழை மற்றும் பக்கிங்காம் கால்வாயில் கடல்நீர் வரத்து இல்லாததாலும் இங்கு உப்பு உற்பத்தி மேற்கொள்ள முடியவில்லை.

**ஆ) செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி**

மாரியூர் – வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் செறிவூட்டப்பட்ட உணவு உப்பு வகைகளான அயோடின் கலந்த கல் உப்பு, சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் சரியான அளவில் செறிவூட்டப்பட்ட அயோடின் உப்பு IS 7224:2006 தரப்படி தயாரித்து நியாயமான விலையில் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், உலக சுகாதார நிறுவனத்தின் அனைவரும் அயோடின் உப்பினை பயன்படுத்தும் திட்டத்தில் (Universal Salt Iodisation

Programme) முக்கிய பங்காற்றியுள்ளது. இந்நிறுவனம், பொதுமக்கள் பயன்பெறும் பொருட்டு, 1998–99ஆம் ஆண்டு முதல் 2023–24ஆம் ஆண்டு வரை மொத்தம் 8,00,029 டன் செறிவூட்டப்பட்ட உப்பினை உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.

2023–24ஆம் ஆண்டில் 22,541 மெட்ரிக் டன் உப்பு, பொது விநியோகத் திட்டம் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் இரும்பு மற்றும் அயோடின் பற்றாக்குறையுடைய சிறார்களுக்கு இரும்பு மற்றும் அயோடின் கலந்த இருவித செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி செய்து, பள்ளி மதிய உணவு திட்டத்திற்கும், அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்குகிறது.

2023–24ஆம் ஆண்டில் 2,287 மெட்ரிக் டன் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு பள்ளி மதிய உணவு திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

### 7.2 இயந்திரம் மூலம் உப்பு உற்பத்தி

உப்பு உற்பத்தியை பெருக்க, மனித உழைப்பின் மூலம் உப்பு உற்பத்தி செய்வதுடன், இயந்திரங்களைக் கொண்டு உப்பு அறுவடை

செய்யும் முறை 2020–21ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. முதற்கட்டமாக 30 ஏக்கரில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2021–22ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பின்படி, மேலும் 80 ஏக்கரில் இயந்திரங்களைக் கொண்டு உப்பு அறுவடை செய்யும் பணி வாலிநோக்கம் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. 2023–24ஆம் ஆண்டு இந்நிறுவனம் இயந்திரம் மூலம் உப்பு உற்பத்தி செய்யும் முறையில் வாலிநோக்கத்தில் 23,483 டன் உப்பு உற்பத்தி செய்துள்ளது.

### 7.3 உப்பு சுத்திகரிப்பு நிலைய செயல்பாடு

2017ஆம் ஆண்டில் டாடா அறக்கட்டளையின் நிறுவன சமூக பொறுப்பு திட்ட (CSR) நிதியுதவியுடன் புதிய உப்பு சுத்திகரிப்பு நிலையத்தினை தமிழ்நாடு உப்பு நிறுவனம் அமைத்துள்ளது. 2023–24ஆம் ஆண்டு இச்சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் 6,379 மெட்ரிக் டன் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

## 7.4 பெற்றுள்ள தரச்சான்றிதழ்கள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், அயோடின் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பினை உற்பத்தி செய்துவருவதற்காக IS 7224:2006 மற்றும் IS 16232:2014 ஆகிய தரச்சான்றிதழ்களை பெற்றுள்ளது. ISO 9001:2015 தரச்சான்று பெற்ற நிறுவனமாக தமிழ்நாடு உப்பு நிறுவனம் விளங்குகின்றது. அதேபோல அயோடின் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்துவருவதற்காக இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் சான்றிதழினையும் பெற்றுள்ளது.

## 7.5 வெளிச்சந்தையில் நெய்தல் உப்பு விற்பனை துவக்கம்

சட்டமன்றத்தில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு உப்பு நிறுவனம் அயோடின் கலந்த கல் உப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு ஆகியவற்றை "நெய்தல் உப்பு" என்ற புதிய வணிக பெயரில் வெளிச்சந்தையில்

அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நிறுவனம் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் மொத்த விற்பனையாளர்களை நியமித்து விற்பனையினை துவக்கியுள்ளது. நெய்தல் உப்பு விற்பனையை மேம்படுத்த தமிழ்நாடு உப்பு நிறுவனம் மாவட்டங்களில் நியமித்துள்ள விற்பனை மேம்பாட்டாளர்களின் மூலமாகவும் தொடர் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூட்டுறவு துறையால் நடத்தப்படும் அமுதம் போன்ற அங்காடிகளிலும் நெய்தல் உப்பு விற்பனை செய்யப்படுகின்றது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் இதுவரை 444 மெட்ரிக் டன் நெய்தல் உப்பினை வெளிச்சந்தையில் விற்பனை செய்துள்ளது.

## 7.6 வேலைவாய்ப்பு

இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கம் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1,250 நபர்களுக்கு நேரடியாகவும், 500 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை வழங்கி வருகின்றது.

## 7.7 தொழிலாளர்களுக்கான நலத்திட்டம் மற்றும் அடிப்படை வசதிகள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் உப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், போனஸ், அகவிலைப்படி, விடுப்பு ஊதியம், பணிக்கொடை, ஊழியர் வருங்கால வைப்பு நிதி போன்ற சட்டரீதியான பலன்கள் மற்றும் பணிக் காலத்தில் துரதிர்ஷ்டவசமாக மரணமடைந்தால் இறந்த தொழிலாளியின் வாரிசுத்தாரருக்கு ரூ.1 இலட்சம் இழப்பீடு உட்பட பணப்பலன்களை வழங்குகிறது. தொழிலாளர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுத்தமான கழிப்பறை வசதிகள், பாதுகாப்பு கண்ணாடிகள், கம்பூட்கள் மற்றும் துண்டுகள் போன்ற அடிப்படை வசதிகளை வழங்கி வருகின்றது. தொழிலாளர் நலனுக்காக குறிப்பிட்ட கால இடைவெளியில் மருத்துவ முகாம்களும் நடத்தப்படுகின்றன.

## 7.8 மாநில அளவிலான முகவாண்மை அமைப்பு

உப்பு உற்பத்தி தொடர்பான பிரச்சனைகள் குறித்து கவனித்திடவும், உப்பு தொழிலில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் முகமையாகவும்

தமிழ்நாடு உப்பு நிறுவனத்தினை, தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. தமிழ்நாட்டில் ஆண்டிற்கு 24 இலட்சம் மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் 9 கடலோர மாவட்டங்களில் உப்பு உற்பத்தி நடைபெறுகின்றது. மாநிலத்தில் மொத்தம் 4,100க்கும் மேற்பட்ட சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான உப்பு உற்பத்தியாளர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர். மாநிலத்தில் 48,000 ஏக்கருக்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் நிலங்கள் உப்பு உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படுகின்றன.

### 7.9 உப்பளத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரணம் வழங்கும் திட்டம்

உப்பளத் தொழில் ஒரு பருவ கால தொழிலாகும். உப்பளத் தொழிலாளர்களுக்கு ஓராண்டில் 9 மாதங்கள் மட்டுமே வேலைவாய்ப்பு கிடைக்கும். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் 2021ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான மழைக்காலத்தில், மழைக்கால நிவாரணமாக ஆண்டிற்கு ரூ.5,000/- வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தினை 12.08.2022 அன்று துவக்கி வைத்தார்கள். கடந்த 3 ஆண்டுகளில் வழங்கப்பட்ட நிவாரண தொகை பின்வருமாறு

| வ. எண். | வருடம் | உப்பளத் தொழிலாளர் குடும்பங்கள் | நிவாரணத் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2021-22 | 6,472 | 3.230 |
| 2 | 2022-23 | 6,332 | 3.166 |
| 3 | 2023-24 | 8,478 | 4.239 |

2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் பெரும் மழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள உப்பளங்களுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டது. மாநில அரசு உப்பள தொழிலாளர் குடும்பங்களுக்கு உதவ முன்வந்து, தூத்துக்குடி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 5,300 உப்பள தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா ரூ.3,000/- வீதம் ரூ.1.59 கோடி கூடுதல் நிவாரணமாக வழங்கியது.

### 7.10 2023-24ஆம் ஆண்டில் செயல்திறன்

#### அ) விற்பனை நடவடிக்கை

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 2023-24ஆம் ஆண்டில் 1.47 இலட்சம் மெட்ரிக் டன் உப்பு

விற்பனையின் மூலம் ரூ.39.65 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

**ஆ) நிதிச் செயல்பாடுகள் (தோராயமாக)**

| **வ. எண்.** | **விவரம்** | **தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| | **வரவு** | |
| 1. | உப்பு விற்பனை மூலம் கிடைத்த வருவாய் | 3965.30 |
| 2. | இதர வருவாய் | 79.64 |
| 3. | உப்பு இருப்பு மதிப்பில் கூடுதல் / குறைவு | –19.41 |
| | **மொத்தம்** | **4025.53** |
| | **செலவு** | |
| 1. | உற்பத்திக்கான செலவுகள் | 1741.58 |
| 2. | ஊதியம், கூலி மற்றும் தொழிலாளர் பலன்கள் | 1050.75 |
| 3. | நிர்வாக செலவுகள் | 152.91 |
| 4. | விற்பனை மற்றும் விநியோக செலவுகள் | 383.56 |
| 5. | நிறுவன சமூக பொறுப்பு | 0.50 |
| | **மொத்தம்** | **3329.30** |
| | மொத்த இலாபம் | 696.23 |
| | தேய்மானம் | 259.55 |
| | **வரிக்கு முந்தைய நிகர இலாபம்** | **436.68** |

## முடிவுரை

2023–24ஆம் ஆண்டில், தொழில் துறையின் மிகச்சிறந்த செயல்திறன் மற்றும் பொருளாதார வளர்ச்சியை பெருமிதத்துடன் கொண்டாடும் அதே வேளையில், 2024–25ஆம் நிதியாண்டிலும் சாதனைகளில் புதிய உயரங்களை எட்டுவதற்கான இலட்சியங்களையும் அதற்கான தெளிவான செயல் திட்டங்களையும் அரசு கொண்டுள்ளது.

ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் தொழில் நிறுவனங்களுக்கு தொடர்ந்து ஆதரவுச் சேவைகளை வழங்கும் அதே நேரத்தில் அதிக அளவில் முதலீடுகளை ஈர்ப்பதிலும் அரசு கவனம் செலுத்தும். மாநிலத்தில் சிறந்து விளங்கும் அறிவுசார் பொருளாதாரத்தை மேலும் முன்னெடுத்து செல்வதற்கு, தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வியாளர்களிடையே முறையான இணைப்பினை உருவாக்கி, அதன் மூலம், கருத்துருக்களை உருவாக்குதல், வடிவமைத்தல் புதிய பொருட்கள் மற்றும் சேவைகளை உருவாக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். உற்பத்தியின்

எதிர்காலத்தை பாதிக்கக்கூடிய சவால்களை எதிர் கொள்வதற்காக, தொழில் துறையினர் மற்றும் கல்வியாளர்களிடையே ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் கொள்கைகள் மற்றும் செயல் திட்டங்கள் உருவாக்கப்படும்.

நவீனகால தொழில்கள் மற்றும் சேவைத் துறைகளில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக இத்துறைகளில் சிறந்து விளங்கும் உலாகளாவிய நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்காக பல்வேறு நாடுகளில் முதலீட்டு மாநாடுகள் மற்றும் முதலீட்டாளர்கள் சந்திப்புகள் மேற்கொள்ளப்படும்.

தொழில் பூங்காக்களில் அளிக்கப்படும் வசதிகளை மேம்படுத்தி, நிலையான நடைமுறைகளை பின்பற்றும் அதே வேளையில், தொழில் சூழலை மேம்படுத்தும் உள்கட்டமைப்பு வசதிகளையும் செம்மைப்படுத்துவதற்கு, உரிய கவனம் செலுத்தப்படும். சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த

சேவைகள் மற்றும் உலகளாவிய திறன் மையங்கள் ஆகியவை செயல்படுவதற்கான தயார் நிலை வசதிகள் மற்றும் முதல் தர கட்டிடங்கள் அமைத்துத் தருவது குறித்தும் கவனம் செலுத்தப்படும்.

வணிகம் புரிவதை எளிதாக்குதல் (Ease of Doing Business) நடவடிக்கைகளை மேலும் செம்மைப்படுத்த தொடர்ச்சியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளும், அதே வேளையில் வர்த்தக சீர்திருத்தங்களில் செயல் திறனை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தவும், மாநிலம் முழுவதும் சீரான மற்றும் பரவலான வளர்ச்சியை ஏற்படுத்தவும் மற்றும் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் கவனமுடன் வடிவமைக்கப்பட்டு சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**முனைவர் டி.ஆர்.பி. ராஜா**
தொழில்துறை அமைச்சர்




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இம்மாநாட்டில், ₹ 6.64 இலட்சம் கோடி முதலீடு மற்றும் 26 இலட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் என்ற வகையில், 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 07.01.2024 அன்று தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024இன் போது "தமிழ்நாடு குறை கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணு கொள்கை 2024"ஐ வெளியிட்டார்.



மாண்புமிகு முதலமைச்சர் 23.05.2023 முதல் 25.05.2023 வரை சிங்கப்பூருக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டபோது, தொழிலகங்களின் மூத்த தலைவர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் முதலீடு மேற்கொள்ளுமாறு கோரினார்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான முதலீட்டுக் குழு 26.05.2023 முதல் 30.05.2023 வரை தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக, ஜப்பான் நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டது.




சுவிட்சர்லாந்து, டாவோஸ் உலகப் பொருளாதார மன்றம் 2024ல் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பங்கேற்றார்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.11.2023 அன்று பெரம்பலூர் மாவட்டம், எறையூர் சிப்காட் தொழில் வளாகத்தில் அமைந்துள்ள JR-One காலணி உற்பத்தித் தொழிற்சாலையை காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.02.2024 அன்று தூத்துக்குடி மாவட்டம், சில்லாநத்தம் சிப்காட் தொழிற்பூங்காவில், வின்ஃபாஸ்ட் ஆட்டோ லிமிடெட் நிறுவனத்தின் மின் வாகன உற்பத்தி ஆலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், இராணிப்பேட்டை மாவட்டத்தில் வாகன உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கு, டாடா மோட்டார்ஸ் குழுமத்துடன் 13.03.2024 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17.06.2023 அன்று சென்னை நந்தம்பாக்கத்தில் நிதிநுட்ப நகரம் மற்றும் நிதிநுட்ப கோபுரம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19.05.2023 அன்று தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17.02.2024 அன்று விழுப்புரம் மாவட்டத்தில் மினி டைடல் பூங்காவினை திறந்து வைத்தார்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.